# விட்டில் பூச்சிகள்



வித்யா சுப்ரமணியம்

# 1

அவன் அவளை ஏற இறங்கப் பார்த்தான். பிறகு கேட்டான் ஆங்கிலத்தில்.

"உன் பெயர்?"

"மதுமிதா"

"வயது?"

"பெண்ணின் வயதும் ஆணின் ஊதியமும் யாரும் கேட்கக் கூடாத விஷயங்கள்."

"அது யாரோ ஊதியம் குறைச்சலான ஆணும் இளமையைத் தொலைத்த பெண்ணும் கூறிய பழமொழியாயிருக்கும். என் ஊதியத்தைப் பற்றி சொல்ல நான் தயங்க மாட்டேன்."

"அப்படியானால் நானும் கூறத் தயார்தான். என் வயது இருபது."

"இதை உங்கள் விண்ணப்பத்தில் ஏன் பூர்த்தி செய்யவில்லை?"

"சாரி மறந்திருப்பேன்."

"இதையே மறக்கும் உங்களிடம் எங்கள் அலுவலகத்தில் எப்படி பெரிய பொறுப்புகளை ஒப்படைக்க இயலும்?"

"மன்னிக்கவும். உங்கள் அலுவலகத்தில் பெரிய பொறுப்புக்கள் பற்றிய சிந்தனையில்தான் இச்சிறிய விஷயத்தை மறந்து விட்டேன்."

"நல்ல சமாளிப்பு" அவன் சிரித்தான்.

"உங்கள் சிரிப்புக்கு அர்த்தம் எனக்கு வேலை கிடைத்து விட்டது என்று எடுத்துக் கொள்ளலாமா?"

"அவன் அதற்கும் சிரித்தான். அவளுடைய விண்ணப்பத்தில் அவள் வயதை பூர்த்தி செய்து தன் கைப்பட ஏதோ எழுதினான். பஸ்ஸரை அழுத்தி பவ்யமாக வந்து நின்ற

பியூனிடம் அவள் விண்ணப்ப ஃபைலை கொடுத்தனுப்பினான். அதன் பிறகு அவளிடம் எதுவும் பேசாது அவசர கோப்புகள் சிலவற்றை படிக்க ஆரம்பித்து விட்டான். அவள் துடிப்பு அதிகமாயிற்று. என்ன எழுதினான் விண்ணப்பம்மில் என்று தெரிந்து கொள்ள தவித்தாள். அவனோ அவளுடைய தவிப்பைப் பற்றி துளியும் புரிந்து கொள்ளாமல் தன்பாட்டுக்கு ஏதோ வேலையில் மூழ்கிப் போனதைக் கண்டு அவளுக்கு லேசாய் எரிச்சலேற்பட்டது. வாய் திறந்து ஏதாவது சொல்லி விட்டால் என்ன கவுரவம் குறைந்து விடுமாம்? மவுனமாய்க் கழிந்த பத்து நிமிடத்தில் நிறைய நகம் கடித்தாள்.''

''உங்கள் பிளட் குரூப் என்ன?'' அவன் திடீரென்று கேட்கவும் ஒரு வினாடி தடுமாறினாள்.

''ஏ பாஸிடிவ்... எதற்கு கேட்கிறீர்கள்?''

''நீங்கள் நகம் கடிக்கும் வேகத்தில் ஒருவேளை தேவை ஏற்பட்டால்... அதற்காகத்தான் கேட்டேன்.''

அவள் சட்டென்று வாயிலிருந்து விரலை எடுத்தாள். முகம் சிவக்க தலை குனிந்தாள்.

''உங்களுக்கு இன்னும் சற்று நேரத்தில் வேலைக்கான உத்தரவு வந்து விடும். அதுவரை பாவம் அந்த நகங்களை வதைக்க வேண்டாமே.''

கண்கள் சிரிக்க அவன் சொன்னபோது அவள் அசட்டு சிரிப்போடு நெளிந்தாள்.

''இதை நீங்கள் முதலிலேயே சொல்லியிருந்தால் நான் நகம் கடித்திருக்க மாட்டேன்.''

''நகம் கடிப்பதை கெட்ட பழக்கம் என்று உங்களுக்கு யாரும் சொன்னதில்லையா?''

''உங்கள் உதடு கறுத்திருப்பதை கண்டால் உங்களுக்கு சிகரெட் பழக்கம் உண்டு என்று நினைக்கிறேன். அது கூடத் தான் கெட்ட பழக்கம்.''

அவன் முகத்தை மேலே தூக்கி கண்களை மூடி சிரித்தான். அந்த சிரிப்பு அவளையும் தொற்றிக் கொண்டது. பியூன் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்து

டைப் செய்த பேப்பரை பைலோடு நீட்டினான். அவன் அதை வாங்கி கையொப்பமிட்டு அவளிடம் நீட்டினான்.

“வாழ்த்துக்கள்.”

“ரொம்ப நன்றி சார்” அவள் விழிகள் பளபளக்க வாங்கிக் கொண்டாள்.

“நாளை முதல் நீங்கள் சார்ஜ் எடுத்துக் கொள்ளலாம். இன்று ஒருநாள் ஓய்வெடுத்துக் கொண்டு புதுப்பொலிவோடு வாருங்கள்” அவன் எழுந்து தன் கரம் நீட்டினான். அவளும் பதிலுக்கு கரம் நீட்டினாள்.

ஒரு சின்ன குலுக்கலுக்குப் பின் கரங்கள் பிரிந்தன. அவள் விடைபெற்று கதவு வரை வந்து “உங்கள் பெயர் என்ன என்பதை தெரிந்து தெரிந்து கொள்ளலாமா?” என்று கேட்டாள்.

“பாலசுப்பிரமணியன். ஆபீசில் அனைவருக்கும் பாலு வீட்டில் சுபப்பிரமணியன்.”

அவள் புன்னகைத்தபடி வெளியேறினாள்.

எட்டரை மணிக்கு அம்மா அப்பாவின் ஆசீர்வாதங்களை சுமந்து கொண்டு புறப்பட்டபோது கூட அவளுக்கு நம்பிக்கையில்லை. எந்தனையோ நேர்முகத் தேர்வுகள், நமுத்துப் போன வெடிகளாய்த்தான் ஆகியிருக்கின்றன. அதுபோல் இதுவும் புஸ்தான் என்ற அவநம்பிக்கையோடு தான் புறப்பட்டாள். அவள் புறப்படும்போது பார்த்துதான் வங்கக்கடல் புயலும் மிக அவசரமாய் கரை கடக்க புறப்பட்டது. காற்றும் மழையும் சீறியது. தகரக் கூரைகள் பறந்து விழுந்து பலரை காயப்படுத்தின. மரங்கள் வேரோடு ஆடி எப்பொழுது விழுமோ என்ற நடுக்கத்தை ஏற்படுத்தியது. காற்றுக்கும் மழைக்கும் பயந்து மனிதர்கள் ஒதுங்கினார்கள். வீதிகள் வெறிச்சிட்டன. உயிருக்குத் துணிந்தவர்கள் ஒரு சிலரைத் தவிர பஸ் ஸ்டாண்டில் ஆள் எவரும் இல்லை. மதுமிதாவின் குடை காற்றுக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் பலவித உருவங்களை எடுத்து கம்பிகள் வளைந்து கோரமாய் கிழிந்தது. குடையை மடக்கிக் கொண்டு மழையில் நனைந்தபடி பஸ்சுக்கு காத்திருந்தாள். காற்று ஆளைத் தள்ளியது. தூரத்தில் பச்சை பஸ் தெரிந்தது. கிட்டே வந்து ஏமாற்றியது. அவள் போக வேண்டிய எண் அல்ல. மதுமிதா கடிகாரத்தைக் கவலையோடு பார்த்தாள். இன்னும் ஐந்து நிமிடத்தில் பஸ் கிடைத்தால் குறித்த நேரத்திற்குள் போய் சேர்ந்து விடலாம். தாமதமாகப் போய் மழை என்று சாக்கு சொல்லி இயற்கையின் மீது பழி போடப் பிடிக்கவில்லை அவளுக்கு. ஆட்டோவில் செல்லலாம். ஆனால் கைப்பையில் இருப்பது

மொத்தமே நாற்பது ரூபாய்தான். அப்பாவின் மாசக் கடைசி, ஆட்டோவுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. மதுமிதா பஸ் வரும் திசையை கவலையோடு பார்த்தாள். மற்றொரு பச்சை புள்ளி தெரிந்தது. அவசரமாய் முச்சந்தி வினாயகருடன் ஒரு ரூபாய் லஞ்ச பேரம் நடத்தினாள். போனால் போகட்டும் என்பது போல ஒரு ரூபாய் லஞ்சத்திற்கு ஒப்புக்கொண்டு பஸ் அனுப்பினான் வினாயகன். ஈரக்குடை மனிதர்களின் நெரிசலில் கலந்து இன்னும் ஈரமானாள். ஓட்டை மேற்கூரையின் தயவில் பஸ்சுக்குள்ளும் மழை பெய்தது. பஸ் ஸ்டாண்டில் நின்றுகொண்டே நனைவதற்கு இது பெட்டர் என்று தோன்ற, சில்லரையை டிக்கெட்டாய் மாற்றினனாள். இறங்க வேண்டிய நிறுத்தம் வந்ததும் சர்க்கஸ்காரி போல் கும்பலில் பிதுங்கி வெளியே வந்தாள். சற்று தூர நடையில் கம்பெனி பெயர் பித்தளையில் மழை நீராடிக் கொண்டிருக்க நனைந்த கோழியாய் உள்ளே நுழைந்தாள். ரிசப்ஷனிஸ்ட் புருவம் சுருக்கி பார்த்தபோது கோபம் வந்தது. இவள் மட்டும் நனையாமல் எப்படி வந்து சேர்ந்தாள் என்ற கேள்வி குடைந்தது. காட்டன் சுரிதாரும், பாப் தலையும், லிப்ஸ்டிக் உதடுகளும், நெயில் பபாலிஷீம், கட்ஷுவுமாக நுனி நாக்கு ஆங்கிலம் பேசிக்கொண்டிருந்தவளின் அருகில் சென்று இண்டர்வியூ கார்டை நீட்டினாள். 'வெயிட் பிளீஸ்' என்ற பதிலைப் பெற்று ரிசப்சனில் அமர்ந்தாள். வேறு எவரையும் காணவில்லை. மொத்தம் எத்தனை பேருக்கு கார்டு அனுப்பப்பட்டதென்ற விவரம் தெரியவில்லை.

இண்டர்காமில் பேசிய ரிசப்ஷனிஸ்ட் சிலவற்றிற்கு யெஸ்சார் என்றாள். சிலவற்றிற்கு நோ சார் என்றாள். கடைசியாக ஓகே சார் என்றாள். ரிசீவரை வைத்து விட்டு மதுமிதாவைப் பார்த்தாள். அருகில் அழைத்தாள்.

''இண்டர்வியூ இஸ் போஸ்ட்போன்ட், வி வவில் இன்டிமேட் தி டேட் அண்ட் டைம் லேட்டர் ஆன்'' என்றாள் வெகு அலட்சியமாக, மதுமிதாவுக்கு மெல்ல ஒரு எரிமலை பொங்க ஆரம்பித்தது. கண்களில் அனல் படர்ந்தது.

''உங்கள் பாசோடு நான் கொஞ்சம் பேசலாமா ப்ளீஸ்'' சுத்தமான ஆங்கிலத்தில் மதுமிதா கேட்க, ரிசப்ஷன் பெண்ணின் கண்களில் அலட்சியம் கொஞ்சம் குறைந்தது. இருந்தாலும் ''எதற்காக'' என்றாள்.

''அதை அவரிடம்தான் கூற முடியும்''

“மனனிக்கவும். அவர் இதை விரும்பமாட்டார். நீங்கள் இண்டர்வியூவுக்கு மட்டுமே வந்திருப்பவர். வேறு எதற்காக நீங்கள் அவரைப் பார்க்கப்போகிறீர்கள் என்பது தெரியாமல் உள்ளே அனுப்ப இயலாது.”

மதுமிதா அவளை எரித்து விடுவதுபோல் பார்த்தாள்.

“எதனால் இன்று இண்டர்வியூ இல்லை என்கிறீர்கள்?”

“மொத்தம் பத்து பேர் இன்று வரவேண்டும். புயல் காரணமாக உங்களைத் தவிர வேறு யாரும் வர இயலவில்லை போலும். அதனால்தான் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.”

“இதுபற்றிதான் நான் உங்கள் பாசிடம் பேச வேண்டும்.”

“என்னவென்று?”

“அனுப்புவீர்களா, மாட்டீர்களா?”

“அவர் அதை விரும்பமாட்டார். என்னால் அனுப்ப இயலாது.”

“ரொம்ப நல்லது. நீங்கள் அனுப்ப வேண்டாம். நானே போகிறேன்” மதுமிதா அவள் உத்தரவை எதிர்பார்க்காமல் சட்டென்று உள்ளே நுழைந்தாள். ரிசப்ஷன் பெண் “ஹலோ ப்ளீஸ்” என்று கோபத்தோடு சுத்த, மதுமிதா திரும்பாமல் முன்னேறினாள். எதிர்ப்பட்ட பியூனிடம் பாஸ் ரூம் எதுவென விசாரிக்க அவன் இடது கை நீட்டி சுட்டிக்காட்டினாள்.

ரிசப்ஷனிஸ்ட் அதற்குள் முதலாளியிடம் ஒன்றுக்கு நாலாய் புகார் சொல்லி குற்றம் தன்னுடையதல்லவென்று குழைந்தாள். மதுமிதா அந்த அறைக் கதவைத் திறந்து கொண்டு சீற்றத்தோடு உள்ளே நுழைந்தாள். ஒரு விநாடி திகைத்தாள். வாழ்க்கைத் தலையும் சோடாபுட்டியுமாக ஒரு கிழ பாசை கற்பனை செய்து வந்தவளுக்கு கம்பீரமான ஒரு இருபத்தி எட்டு வயது வாலிபத்தைக் கண்டதும் சட்டென்று கால்கள் பின்னியது.

## 2

“யெஸ்” அவன் கண்கள் சிரித்தது.

“நீங்கள் செய்வது நியாயமா?” சற்று சுதாரித்துக் கொண்டு கேட்டாள்.

“புரியும்படியாக சொல்லுங்கள். அதற்கு முன்னால் உட்காருங்கள். உங்கள் ஈரத்தை துடைத்துக் கொள்ள டவல் ஏதும் வேண்டுமா?”

“ரொம்ப நன்றி. ஆனால் உங்களிடம் நான் எதிர்பார்ப்பது டவல் அல்ல.”

“வேறு என்ன?”

“நேர்முகத்தேர்வு ஒத்திப் போடப்பட்டதாக அறிந்தேன். அது நியாயமல்ல.”

“எதனால் அப்படி நினைக்கிறீர்கள்?”

“பல கஷ்டங்களை கடந்து நான் வந்திருக்கிறேன். ஆனால் வராத மற்ற ஒன்பது பேருக்காக என்னை நேர்முகத்தேர்வு செய்யாமல் அனுப்புவது எந்த விதத்தில் நியாயம்?”

“ஒரே ஒருவருக்காக எப்படி நடந்த இயலும்? மற்ற ஒன்பது பேரிலும் கூட திறமைசாலிகள் இருக்கலாம் அல்லவா?”

“மறுக்கவில்லை. காரணமாக மற்றொரு நான் அவர்களை நேர்முகத் தேர்வு செய்யுங்கள். இன்று என்னை முடித்துவிட்டால் நான் பட்ட சிரமங்களுக்கு ஒரு மரியாதை கொடுத்தது போல் ஆகும். வராத ஒன்பது பேரின் மேல் காட்டும் கரிசனத்தில் சிறிதளவாவது கஷ்டப்பட்டு வந்திருக்கும் என் மீது காட்டுவதுதான் தங்கள் மனிதத் தன்மைக்கு அடையாளமாகும்.”

“இல்லாவிட்டால் நான் மிருகமோ?”

“என் கண்ணுக்கு அப்படித்தான் தெரிவீர்கள். மற்றொரு நாள் நீங்கள் வைக்கும் இண்டர்வியூவில் நான் கலந்து கொள்ள மாட்டேன். ஒரு வேளை பத்து பேரிலும் மிகத் திறமைசாலியாக நானே இருந்து விட்டால் இழப்பு உங்கள் கம்பெனிக்குத்தான். எனக்கல்ல.”

அவன் பக்கென்று சிரித்து விட்டான்.

அதன் பிறகுதான் அவன் அவளை ஏற இறங்கப் பார்த்தான். பெயர் கேட்டான். அவள் விண்ணப்பத்தை எடுத்து வைத்துக்கொண்டு நேர்முகத்தேர்வு செய்ய ஆரம்பித்தான். ஈர உடையோடு ஏஸி குளிரும் சேர அவள் உதடுகள் அடித்துக் கொண்டது. பதில்கள் நடுக்கத்தோடு வெளிப்பட்டது. பதில்கள் நடுக்கத்தோடு வெளிப்பட்டது.

“ஏஸியை வேண்டுமானால் நிறுத்தி விடவா” அவன் கேட்டதும் கூச்சமேற்பட்டது.

“இட்ஸ் ஓ.கே… ஐ வில் மானேஜ்.”

“நோ பிராப்ளம். அந்த டாய்லட்டில் சுத்தமான டர்க்கி டவல் இருக்கு. முதல்ல உங்க உடம்புலயும் தலையிலயும் இருக்கற அதிகபட்ச ஈரத்தை அதற்கு தானம் பண்ணி விட்டு வாருங்கள். நான் காத்திருக்கிறேன்.”

அவன் சொன்னதும் மறுக்க முடியாமல் எழுந்து டாய்லட் நோக்கி நடந்தாள்.

பின்னாலேயே வந்து வம்பு செய்வானோ நல்லவன் போல் நடித்து வலை வீசும் ஆண் இவன்?

கூடவே சந்தேகம் குடைந்தது. முன் ஜாக்கிரதையாக டாய்லட் கதவை தாளிட்டுக் கொண்டாள். ஈரத்தை துடைத்துக்கொண்டு புடவை ஈரத்தை பிழிந்து சரியாக உடுத்திக் கொண்டு சற்று காய்ந்தவளாக வெளியில் வந்த போது அவன் அமைதியாக அமர்ந்து கோப்பு ஒன்றில் தலை கவிழ்ந்திருந்தான். ஏஸி நிறுத்தப்பட்டிருந்தது.

நேர்முகத் தேர்வுக்கான தொழில் நுட்பக் கேள்விகள் தொடர்ந்தது. நுணுக்கமாக அவன் கேட்ட கேள்விகளுக்கு திறமையாக பதில் அளித்தாள். அதன் பிறகுதான் அவன் அவள் பெயரும் வயதும் கேட்டதும் அவள் பதிலளித்ததும் அவன் அப்பாய்ண்ட்மெண்ட் ஆர்டர் அளித்ததும்…

இயற்கையாக ஒரு வகையில் தனக்கு பெரும் உதவி செய்திருப்பதாகவே தோன்றியது. இந்த சீற்றத்திற்கு பயந்து அவளும் வீட்டிலேயே இருந்திருந்தால் நிச்சயம் வேறு ஒரு நாள் இண்டர்வியூ நடந்திருக்கும். ஆனால் பலத்த போட்டிக்கிடையில் ஒருவேளை வேறு எவருக்காவது இந்த வேலை போயிருக்கும். இவ்வளவு சுலபத்தில் போட்டியின்றி தன் திறமையை நிரூபித்து வேலை பெற்றிருக்க முடியாது. இந்த புயலிலும், மழையிலும் போகத்தான் வேண்டுமா என்று அம்மா

காலையில் பயந்தாள். அப்பாதான் தைரியம் சொல்லி அவளை அனுப்பி வைத்தார். போகும்போது அன்னபூர்ணாவில் கொஞ்சம் ஸ்வீட்ஸ் வாங்கிக் கொண்டு போக வேண்டும்.

மதுமிதா சந்தோஷமாக ரிசப்ஷன் ஹால் கடந்த போது ரிசப்ஷனிஸ்ட் அவளை பார்த்த பார்வையில் மெல்லிய பொறாமை படர்ந்திருந்தது. தன்னை மதிக்காது உள்ளே சென்றதுமில்லாமல் வேலைக்கான உத்தரவும் வாங்கி விட்டாளே என்ற ஆச்சரியம் எரிச்சலும் பொறாமையுமாக மாறியிருந்தது.

வெளியில் இன்னமும் மழை கொட்டிக் கொண்டிருந்தது. காற்று சீறியது. புயல் எப்போது கரை கடக்குமோ? போர்டிகோவில் கொஞ்ச நேரம் நின்றாள். மழை விடும் போல் தோன்றவில்லை. பேசாமல் நனைந்து கொண்டே போய் விடலாமா என்று அவள் யோசித்தபோது கார் ஒன்று அவசரமாக போர்டிகோவில் நின்றது. பியூன் ஒருவன் வேகமாக வந்து கதவைத் திறக்க சற்று முன் அவளை இண்டர்வியூ செய்த பாலசுப்பிரமணியன் உள்ளிருந்து வந்துஏறிக்கொள்ள கார் கதவை பியூன் மூட டிரைவர் வண்டியை கிளப்பினான்.

போர்டிகோ தாண்டிய வண்டி சட்டென்று நின்றது பின்பக்க கருப்பு கண்ணாடி மெல்ல இறங்கி பாலசுப்பிரமணியன் முகம் தெரிந்தது.

“எந்த பக்கம் போகணும் நீங்க?”

“கே. கே. நகர் சார்.”

“கெட் இன்… போற வழியில ஏதாவது பஸ் ஸ்டாண்டிலே டிராப் பண்ணிடறேன்”

“ஓ.. தேங்க்யூ” மதுமிதா பின் கதவை அவன் திறந்து விட ஏறிக்கொண்டாள்.

டி.வி.எஸ். அருகில் கார் வந்து நிற்கும் வரை அவன் எதுவும் பேசவில்லை. அவன் அப்படி எதுவும் பேசாமல் வந்தது அவளுக்கு கஷ்டமாக இருந்தது. இவன் அழைத்ததும் அல்பத்தனமாய் ஏறியிருக்க வேண்டாமோ என்று தோன்றியது.

“இங்கேயிருந்து உங்களுக்கு பஸ் இருக்கும்னு நினைக்கறேன்.”

கார் நின்றதும் சொன்னான்.

“ரொம்ப நன்றி சார்” காரிலிருந்து இறங்கி பஸ் நிறுத்தக் குடையின் கீழ் சென்று நின்றாள். வண்டி வேகமெடுத்துச் சென்று மறையும் வரை பார்த்தாள். ஐந்து நிமிடத்தில்

காலியாக ஒரு பஸ் வந்தது. மதுமிதா சந்தோஷமாக ஏறி சவுகர்யமான ஒரு இடத்தில் அமர்ந்தாள். காலியாக செல்லும் பல்லவனில் செல்வதும் தனி இன்பம்தான். பீக் அவர்களில் இது முடியாது. மழையினால் இன்று இவ்வளவு காலியாக இருக்கிறது.

பில்லர் தாண்டி ஆஸ்பத்திரி ஸ்டாப்பிங்கில் இறங்கி இனிப்புக்கடை ஒன்றில் கால் கிலோ பால்கோவா வாங்கிக் கொண்டாள். மழை சற்று விட்டதும் விரைந்து நடந்தாள். மெயின் ரோட்டிலிருந்து குறுக்குத் தெருக்களில் நடந்து பத்து நிமிடம் நடையில் வீட்டை அடைந்தபோது வீட்டு வாசலில் அக்கம் பக்கத்து ஜனம் கூடியிருந்தது. அத்தனை பேர் முகத்திலும் ஏதோ பதட்டம், அவர்களுக்கு நடுவில் கண்ணீரோடு அம்மா ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாள்.

## 3

அவசர அவசரமாய் ஒரு நர்ஸ் ஆக்சிஜன் சிலிண்டரை பொருந்தினாள். சின்னச் சின்ன திரைகளில் ஏதோ வளைந்தும் நெளிந்தும் ஓடியது. இதயத் துடிப்பை ஒரு திரை காட்டியது. டாக்டர்கள் கூடி பேசினார்கள். கண்ணாடி கதவு திறந்து வந்த நர்ஸிடம் ஓடினாள் மதுமிதா. அப்பாவின் நிலை இன்னும் அபாய கட்டத்திலேயே இருப்பதாக தெரிவித்து விட்டு சென்றாள் நர்ஸ். வராண்டா பெஞ்சில் அம்மா தளர்ந்து நடந்து அம்மாவிடம் வந்தாள்.

அம்மா ஆவலோடு அவள் முகத்தை பார்த்தாள் மதுமிதா அம்மாவின் கரத்தை இறுகப பற்றிக் கொண்டாள்.

‘‘கவலைப்பட ஒண்ணுமில்லையம்மா. தைரியமாயிரு. தெய்வம் நம்மளை கைவிட்டுடாது.’’ ப

‘‘பயமார்க்குடி.’’

‘‘நா இருக்கேன். தைரியமாயிரும்மா. மதுமிதா அழுகையை அடக்கிக்கொண்டு அம்மாவை பரிவோடு தன் மடியில் படுக்க வைத்துக் கொண்டாள். சிரிப்பதா அழுவதா என்று புரியவில்லை. எந்த புயலும் மழையும் அவளுக்கு நன்மை செய்திருப்பதாக

நினைத்தாலோ அதே புயலும் மழையும் அப்பாவை ரத்தம் சிந்த வைத்திருக்கிறது. அபாயக் கட்டத்தில் அவர் உயிரை ஊசலாட வைத்திருக்கிறது. இதை என்னவென்று சொல்ல? அறைகுறையாய் திறந்திருந்த ஒரு பாதாள சாக்கடையில் வெள்ள ஓட்டத்தினால் திசை தெரியாது நடந்து சென்று விழுந்திருக்கிறார். நல்ல காலம் யாரோ பார்த்தார்களோ. ஆள் உள்ளே விழந்தது தெரிந்ததோ இல்லையென்றால்… நினைக்கவே நடுங்கியது. அப்பாவைத் தேடித் தேடி இவள் ஊரெல்லாம் அலைய, அவர் சாக்கடைக்குள் பிணமாக மிதந்து கொண்டிருந்திருப்பார். பார்த்தவன் சட்டென்று சத்தம் போட்டு கும்பலை கூட்டி அவசர ஆலோசனை நடத்தி அருகிலிருந்த கடையிலிருந்து கயிறு வாங்கி இடுப்பில் ஒருவன் கட்டிக்கொண்டு உள்ளே இறங்கி, ஊர் கூடி குற்றுயிரும் குலையுயிருமாக அப்பாவை வெளியே எடுக்க அப்பாவின் உடல் முழுக்க காயம். மண்டையில் பலமாய் அடிபட்டிருந்தது. கை எலும்பு முறிந்திருந்தது. நிறைய நீர் குடித்திருந்தார். அருகிலிருந்த ஆஸ்பத்திரிக்கு அவர்களே அழைத்துச் சென்று சேர்ந்தது அப்பாவின் பாகெட் டைரியிலிருந்து விலாசம் அறிந்து ஒரு ஆள் தகவலோடு வர அம்மா பெரியதாய் அழ, ஊர் கூடி விட்டது. மதுமிதாவைக் கண்டதும் அம்மா இன்னும் பெரிதாய் அழுதாள். அவசரமாய் வீடு பூட்டி அவர்கள் ஆஸ்பத்திரிக்கு வந்த போது அப்பா அவசர சிகிச்சை பிரிவில் நினைவின்றி இருந்தார். இப்போது பார்க்க முடியாது என்று விரட்டினார்கள் நர்ஸ்கள். இரவு மணி பதினொன்றைக் கடந்தும் அப்பாவின் நிலையில் முன்னேற்றமில்லை. அம்மா மாங்கல்யத்தை பற்றிக் கொண்டு கந்த சஷ்டி கவசம் சொன்னாள். வேலை கிடைத்ததற்கும் அதற்கும் எத்தனை மகிழ்ச்சியாய் கழிந்திருக்க வேண்டிய நாள்! ஏன் இப்படி? யார் கண் பட்டது?''

அக்காவையும் அவளையும் வளர்க்க எத்தனை பாடுபட்டார் அப்பா. நாம நடுத்தர வர்க்கம் மது. நமக்கு படிப்பு தான் முக்கியம். படிப்பாலதான் நாம முன்னுக்கு வரணும். நீங்க ரெண்டு பேரும் நல்லா படிக்கணும். அதனாலதான் என் சக்திக்கு மீறி பணம் கட்டி உங்களை முதல் தரமான ஸ்கூல்ல சேர்த்திருக்கேன். ஸ்கூல் படிக்கும் காலத்தில் அப்பா அடிக்கடி சொல்லும் வார்த்தை. ஸ்கூல் பீஸ் வருடா வருடம் ஏறும். அதே நேரம் அப்பா தன் சொந்தத் தேவைகளை ஒவ்வொன்றாய் குறைத்துக் கொண்டு துண்டு விழும் பணத்தை சமாளிப்பார்.

இப்படித்தான் மாலை காப்பியை நிறுத்தினார். ஸ்கூட்டரை விற்றுவிட்டு பல்லவனில் தொற்றிக் கொண்டார். வாராந்திரம் இஸ்திரிக்கு கொடுப்பதை நிறுத்தினார். கசங்கின

சட்டையோடு அலுவலகம் போனார். அப்பா மட்டுமல்ல. அம்மாவும்கூட தன் தேவைகளை சுருக்கிக் கொண்டாள். குழந்தைகள் வரையில் குறையில்லாமல் கொடுத்து வளர்த்தார்கள் என்றும் சொல்லலாம். ரெண்டு பெண்ணும் ஆங்கிலத்தில் பேசிக்கொண்டதை மலர்ந்த முகத்தோடு பார்ப்பார்கள். இருவரும் சண்டை போடும்போது ஆங்கிலம் இன்னும் வேகமாய் வெளிப்படும். சண்டையை விலக்காது பிரமித்துப் போய் வேடிக்கை பார்ப்பாள். அம்மா, அப்பா தான் நடுவில் புகுந்து இருவரையும் விலக்குவார். சமாதானப் படுத்துவார். மொழி என்பது ஒருவரை ஒருவர் திட்டிக் கொள்வதற்கல்ல, புரிந்து கொள்வதற்குத்தான் என்று இதமாய் பேசி சமாதானப் படுத்துவார். அப்பா அவர்கள் இருவர் மேலும் நிறைய நம்பிக்கை வைத்திருந்தார். அம்மாவோ நிறைய கவலை வைத்திருந்தாள். “படிப்பு படிப்புன்னு வாரி இறைச்சுக்கிட்டே இருந்தா எப்படி? கல்யாணத்துக்கு நாலு நகை நட்டு சேர்க்கற வழியும் பாருங்க.”

அப்பா சிரிப்பார். “படிப்புதாண்டி சொத்து. அதுவே மத்த எல்லாம் கொடுக்கும். இப்பல்லாம் பசங்க படிப்பு பார்த்துதான் கட்டிக்கிறாங்க. நீ ஏன் கவலைப்படற. நம்ப பொண்ணுங்கள கட்டிக்க வீட்டு வாசல்ல வரிசைல வந்து நிப்பாங்க பாரு.”

“ஆமா… சுயம்வரமே நடத்துங்க! யாரு வேணாம்னாங்க? அப்படியே தேடிக்கிட்டு வரன் வந்தாலும் வெறுங்கையோடவா பொண்ணை அனுப்ப முடியும்.”

“எம் பசங்க படிப்புக்கு பெரிய பெரிய கம்பெனிலேருந்து எட்டாயிரம் தரோம் பத்தாயிரம் தரோம்னு கூப்பிடு வாங்க பாரு. ஒரு மூணு வருஷம் வேலை செஞ்சா போதும். முழுக் கல்யாணமும் ஜாம் ஜாம்னு நடத்தற அளவுக்கு அவங்களே சேர்த்துடுவாங்க. அப்படித்தானே மது?”

மதுமிதா ஆமாம் என்று உற்சாகமாக தலையாட்டுவாள். ஆனால் அக்காவின் முகம் அப்பா இப்படி கேட்ட போது ஒரு மாதிரி போயிற்று. ஏதோ ஒரு குழப்பம் அவள் முகத்தில் படர்ந்தது. ஒரு நாள் இரவு அக்கா அவளிடம் கேட்டாள்.

“ஏன் மது… அப்பா இப்படி சொல்றது சரின்னு படுதா உனக்கு?”

“எது?”

“அதுதான் நம்ம கல்யாணத்துக்கு நாமளே சம்பாரிச்சு சேர்த்துக்கணும்னு சொல்றாரே அது.”

“ஏன் அதுல என்ன தப்பு?”

“தப்பில்ல. ஆனா அவருக்கு பொறுப்பு வேணாமா? அதை அவர் தட்டிக் கழிக்கறாப்பல இல்ல?”

“என்ன மஞ்சுக்கா இப்படி பேசற? அப்பா தன் சக்திக்கு மீறி நம்மை படிக்க வெச்சிருக்கார். தன் பொறுப்பை மறந்திருந்தா படிக்க வெச்சிருப்பாரா? அவருடைய வசதிக்கு ஏதாவது ஒண்ணுதான் செய்ய முடியும். நம்ம படிப்புக்கு செலவழிச்ச பணத்தையெல்லாம் சேர்த்து வெச்சிருந்தா இந்நேரம் நம்ம கல்யாணச் செலவுக்கு மேலேயே சேர்ந்திருக்கும். ஆனா நாம இப்படி படிச்சிருக்க முடியாது. மிஞ்சிப் போனா ஒரு கவர்ன்மெண்ட் ஸ்கூல்ல பிளஸ்டூ முடிச்சிருப்போம். இங்கிலீஸ் பேசத் தெரியாம தாழ்வுணர்ச்சில தவிச்சிட்டிருந்திருப்போம். நாலு பேரோட பழகக் கூட தெரியாம வளர்ந்திருப்போம். ஆனா அப்பா தன் சக்தி முழுக்க செலவழிச்சு நம்மை படிக்க வைச்சுட்டார். அவர் ஒண்ணு கொடுத்துவிட்டார். உலகத்துலேயே பெரிய விஷயம் கல்வி. அதை வெச்சு நாம உலகத்தையே வாங்கிடலாமே. அதைத்தான் அப்பாவும் சொன்னார். அதுல என்ன தப்பு?”

அவள் இப்படி சொல்லியும் அக்காவின் முகம் மாறவில்லை.

அதன்பிறகு மஞ்சுவுக்கு ஒரு கம்ப்யூட்டர் நிறுவனத்தில் புரோகிராமர் வேலை கிடைத்தது. மாதம் பத்தாயிரம் சம்பளம். அம்மா வாய் பிளந்தாள். ‘உங்கப்பாவுக்கே அவ்வளவு சம்பளம் இல்லடி’ என்று வெகுளியாய் பேசினாள். மதுமிதா தன் கடைசி வருட கல்லூரி படிப்பில் இருந்தாள். கெமிஸ்ட்ரியில் டாக்டரேட் வாங்கி விட வேண்டும் என்ற லட்சியமிருந்தது அவளுக்கு. தீராத நோய்க்கெல்லாம் புதுப்புது மருந்துகள் கண்டுபிடிக்க வேண்டும் என்ற தாகமும் இருந்தது.

வேலையில் சேர்ந்த அக்காவுக்கு அப்பா விதம் விதமாய் புது டிரஸ்களும் செருப்பும் வாங்கிக் கொடுத்தார். அம்மா நாளொரு டிபன் வகையறா செய்து கொடுத்தாள்.

முதல் நாள் வேலைக்கு சென்று வந்த பெண்ணிடம் வேலை பற்றி கேட்டார் அப்பா.

“எனக்குன்னு ஏஸி ரூம், பியூன், நாலு அஸிஸ்டெண்டஸ், ரெண்டு டெலிபோன்ஸ் கிட்டத்தட்ட ராணி மாதிரிதான்.”

மஞ்சுளாவின் குரலில் கர்வமிருந்தது. அடுத்த வாரத்தில் ஒரு நாள் வேலை முடிந்து வீட்டுக்கு வந்தவள் வியர்வை தாங்காதவள் போல் அலுத்துக் கொண்டாள்.

“ஏண்டா வீட்டுக்கு வரோம்னு இருக்கு. நாள் பூரா ஏஸில இருந்துட்டு… வரவர இந்த வெக்கை தாள முடியல.”

“ஏன் மஞ்சு… என்னமோ ஏஸிலயே பிறந்து வளர்ந்தாப்பல அலுத்துக்கறயே!” மதுமிதா கிண்டலடிக்க மஞ்சுவின் முகம் சிவந்தது.

இன்னொரு நாள் வேறு விதமாய் அலுத்துக் கொண்டாள்.

“எங்க ஆபீஸ்ல எல்லோரும் நம்ம வீடு என்னமோ பங்களானனு நினைச்சிருக்காங்க. இங்க என்னடான்னா ஒரு சோபா செட் கூட இல்ல. நாலு ஸ்டீல் சேர். அதுவும் அங்கங்க பெயிண்ட் போய் துருப்பிடிச்சு, யாரையும் வீட்டுக்கு கூப்டக் கூட வெக்கமார்க்கு. இவ்ளோ சின்னா வீடான்னு கேவலமா நினைப்பாங்க.”

“ஏங்க்கா இவ்ளோ வருஷமா இந்த வீடு கேவலமா தெரியலையா? புதுசா என்ன இப்பொ மட்டும்?”

“நேத்து எங்க எம்.டி.வீட்டுக்கு அபீஷியலா போயிருந்தேன். யப்பா! சினிமாலல்லாம் பார்க்கறா மாதிரி என்ன ஒரு பிரமாண்டமான வீடு! ஃபுட்பால் ஸ்டேடியம் மாதிரி ஹால், வாசல் கதவே அம்பதாயிரம் விலையிருக்கும். பர்மா தேக்குல அப்படி ஒரு வேலைப்பாடு. சோபா செட் ஒவ்வொண்ணும் ஆளை முழுங்கும். வீடு முழுக்க ஏஸி என்ன வீட்டை சுத்தி கார்டன் என்ன… ஊட்டியும் சிம்லாவும் இடம் மாறி வந்துட்டாப்போல… இருந்தா அப்படி ஒரு வீட்டுல இருக்கணும். நமக்கெங்க அதெல்லாம்? அதுக்கு புண்ணியம் பண்ணியிருக்கணும்.”

லேசான அரைக்கண் செருகலோடு ஆசையும் விரக்தியும் ஒன்றை ஒன்று மிஞ்சிய குரலில் அவள் பேசியபோது அப்பாவின் முகத்தில் கவலை படர்ந்தது. பெண்ணை உற்றுப் பார்த்தார். ஏதோ குறுக்கிட்டு சொல்ல முயன்ற அம்மாவைக் கூட தடுத்து விட்டார்.

“ஏம்ப்பா நாம இன்னும் கொஞ்சம் பெரிய வீடா பார்த்தா என்ன?” மஞ்சுளா கேட்டாள்.

“எவ்ளோ பெரிய வீடும்மா?”

“ஒரு பெரிய ஹால். ஆளுக்கு ஒரு பெட்ரூம், முன்னால சிட் அவுட், சுத்தி சின்ன கார்டன்.”

“கிட்டத்தட்ட குட்டி பங்களாம்மா அது.”

“அப்டி இருந்தாதாம்பா மரியாதை.”

“வாடகை ஐயாயிரம், ஆறாயிரம் கேப்பானே மஞ்சு! உன்னால முடியுமா? உன் சம்பளமே வரி போக ஒன்பதாயிரம் தானே வரும்.”

“என் சம்பளத்துலயா… இவ்ளோ வாடகையா?” மஞ்சு அதிர்ந்தாள்.

“பின்னே… வேற எப்படிமா நம்பளால முடியும்?”

“இன்னும் எத்தனை நாளைக்குப்பா இப்படி சின்ன இடத்துல அடையறது? பங்களா வேண்டாம். அட்லீஸ்ட் இதைவிட கொஞ்சம் பெரிசா பார்க்கலாம் இல்லையா?”

“இது குவார்ட்டர்ஸ் மஞ்சு… இதை விட்டுட்டா அப்புறம் கேட்டாகூட கிடைக்காது. உனக்காக இப்போ பெரிய வீடா பார்த்துட்டு, அப்புறம் நீயும் கல்யாணமாகிப் போயிட்டேன்னா பெரிய வீடு எனக்கு பாரமாயிடுமேம்மா.”

“ச்சட்! எல்லாத்துக்கும் ஒரு புலம்பல்… வாழ வேண்டிய வயசுல சன்யாசி மாதிரி இருன்னு உபதேசம் பண்றதே உங்களுக்கு வாடிக்கையா போச்சு.”

மஞ்சுளா லேசான குமுறலோடு தன் எரிச்சலை கொட்டிவிட்டு எழுந்து சென்றாள்.

“ஏங்க வாங்கற சம்பளத்துக்கு ஏத்தா மாதிரி வசிக்கிற இடமும் கொஞ்சம் அலங்காரமா இருக்கணும்னு அவ ஆசைப்படறதுல என்ன தப்பு?”

“அதுக்கில்லடி … மறுபடியும் இந்த வீடு கிடைக்காது இதுதான் என்னிக்கும் நமக்கு சாஸ்வதம்.”

“அதெல்லாம் பொண்ணுங்க பார்த்துப்பாங்க. ரெண்டு பேரும் கை நிறைய சம்பாதிச்சா நாம எதுக்கு சிக்கனம் பிடிக்கணும்? அவ இஷ்டப்படிதான் வீடு பாருங்களேன். நீங்க நினைக்கறா மாதிரி இந்த வீடும் கடைசி வரை இருக்காதுங்க. உங்க ரிடையர்மெண்ட்டுக்கப்புறம் இங்க இருக்கவா முடியும்?”

அம்மா சொல்ல அப்பா யோசித்தார்.

## 4

மறுநாள் ஞாயிற்றுக்கிழமையன்று அப்பா மஞ்சுவையே அழைத்துக்கொண்டு வீடு பார்க்கப் புறப்பட்டார். காலை டிபனை சாப்பிட்டுவிட்டு தெருத் தெருவாக காலி வீடு தேடி அலைந்தார்கள். புதிய நகர்களில் கால் கடுக்க நடந்தார்கள். திருவான்மியூரில் மஞ்சுவை ஓரளவு திருப்தி படுத்தும் வகையில் மனஜ வீடு ஒன்று கிடைத்தது. இரண்டு படுக்கையறையும் ஒரு சிறிய முன்னறையும் கொண்ட தனி வீடு சுற்றிலும் கார்டன் இல்லாவிட்டாலும் காம்பவுண்ட் சுவர் இருந்தது. வாடகை மூவாயிரம் என்றார்கள். அதற்கு குறைந்து இதுபோல் நல்ல வீடும் கிடைக்கவில்லை.

“என்ன சொல்ற மஞ்சு?”

“வேற வழி... இதையே முடிப்போம்.” இன்னும் அலுப்பு தீராத குரலில் சொன்னாள் மஞ்சு. இந்த வீடும் கூட அவள் ஆசையை முழுவதும் நிறைவேற்றவில்லை என்பது புரிய அப்பாவின் கவலை கூடியது.

அட்வான்ஸ் கொடுத்துவிட்டு பஸ் ஸ்டாண்ட் நோக்கி நடக்கும்போது குடிசைப் பகுதி ஒன்றை தாண்டி நடந்தார்கள். சின்னச் சின்ன குடிசைகளில் கவலையற்ற மனிதர்கள். குழந்தைகள் தெரு மண்ணில் ஆனந்தமாக அழுக்குத் துணியும் பரட்டைத் தலையுமாக விளையாட, தெருக்குழாயில் சண்டை போட்டபடி பெண்கள் முட்டி மோதி தண்ணீர் பிடித்துக் கொண்டிருக்க, ஒரு சில பெண்கள் அந்த குழாய்க்கு சற்று தள்ளி தெரு அழுக்கிலேயே சோப்பு போட்டு துணி துவைத்துக் கொண்டும் பாத்திரம் தேய்த்துக் கொண்டும் இருந்தனர். குடிசை வாசல்களில் நாடாக் கட்டிலில் அமர்ந்து பீடி பிடித்தபடி ஆண்கள் சிலர் தினத்தந்தியின் சினிமா செய்திகளை சத்தம் போட்டு

படித்துக் கொண்டிருக்க குடிசைகளுக்குள் விறகடுப்பு புகைச்சலில் சமையல் தயாரித்துக் கொண்டிருந்தார்கள் பெண்கள். சில தாவணி இளசுகள் பேசும்படம் வைத்துக் கொண்டு தங்கள் ஹீரோக்களைப் பற்றி பேசி சிரித்துக் கொண்டிருந்தார்கள். நாளையைப் பற்றி சிறிதும் கவலைப் படாமல் இன்றைய வினாடியை மகிழ்ச்சியோடு கழிக்கும் ஏழைகளின் உலகம் அது.

“எப்படிப்பா இவங்கள்ளாம் இந்த குடிசைக்குள் இருக்காங்க?” மஞ்சு வியப்பும் அருவறுப்பும் கலந்த குரலில் கேட்டாள். “இதெல்லாம் ஒரு வாழ்க்கையா? சுகாதாரமே இல்லாம?”

“அவங்க முகத்துலல்லாம் அந்த கவலை தெரியுதா பார்த்தயா மஞ்சு? சந்தோஷமாதானே இருக்காங்க. நம்பளை விட உசந்தவங்களை பார்த்து ஏக்கப் படறதை விட நம்மளைவிட கஷ்டப்படறவங்களை பார்த்து சமாதானமாறதுதாம்மா நல்லது.”

“இப்ப என்ன சொல்றீங்க நீங்க? அட்வான்ஸை திருப்பி வாங்கிடலாமா?”

“அதில்ல மஞ்சு.”

“அப்பா உங்க கஞ்சத்தனத்தை பார்த்து அலுத்து போச்சுப்பா. இத்தனை நாள் உங்களை சார்ந்து இருந்ததால என் ஆசைகளை அடக்கிகிட்டேன். ஏக்கங்களை மறைச்சுக்கிட்டேன். வேற வழி? நா ஆசைப்பட்டதையெல்லாம் சொன்னா உடனே வாங்கிக் கொடுத்துடவா போறீங்க? நல்ல படிப்பு கொடுக்கணுங்கறது நியாயமான ஆசைதான். அந்த ஆசைல பெரிய ஸ்கூல்ல சேர்த்துட்டீங்க. சினிமாக்காரங்க வீட்டு பசங்களும், கோடீஸ்வர வீட்டு பசங்களும், படிக்கற ஸ்கூல் அது. டாட்டா சுமோலயும், மாருதிலயும், பியட்லயும், பைக்லயும் வர பசங்களுக்கு நடுல பஸ்ஸூல போகணும். இல்ல நடந்து போகணும். ஸ்கூல் போய் சேர்றதுக்குள்ள ஷூஸ் அழுக்காய்டும். மிஸ் திட்டுவாங்க. பசங்க சிரிப்பாங்க. ஒவ்வொரு பசங்களுக்கும் வீட்லேருந்து விதவிதமா டின்னரே வரும்போது எங்க டப்பால ஆறின சாம்பார்சாதம். இல்லாட்டி தயிர்சாதம், அத்தனை பசங்களும் பர்த்டேன்னா அழஅழகா டிரெஸ்ஸூம் சாக்லேட் பாக்ஸூமா வரும்போது எங்க பர்த்டே லீவுலதான் வரும்னு பொய் சொல்லி சமாளிப்போம். என்னிக்காவது கலர் டிரஸ்னு அறிவிச்சாங்கன்னா ஏண்டான்னு இருக்கும். அவங்கவங்க பேஷன் பரேடுக்கு போறாப்பல மாடர்ன் டிரஸ்ல அசத்தும்போது

சாதாரண டிரஸ்ஸோட போய் கூசிக் குறுகி நிக்கணும். நல்ல செருப்பு கூட இருக்காது கால்ல பாவம்டி அவங்க புவர் போல்ருக்குன்னு ஒருத்தி உச்சு கொட்டுவா. அப்புறம் எப்படி இவளோ பெரிய ஸ்கூல்ல சேர்ந்தீங்கன்னு இன்னோர்த்தி சந்தேகம் கேப்பா. பணக்காரப் பசங்க கிட்டதான் டீச்சர்ஸீம் இளிச்சி இளிச்சு பேசுவாங்க. அவங்க தப்பு பண்ணினா கண்டுக்கக் கூட மாட்டாங்க. நாங்க தெரியாம செய்துட்டா கூட வெளில நிக்கணும். ஏன்னா அவங்கள்ளாம் டொனே ஷன்னா பத்தாயிரம் கூட கொடுப்பாங்களே. நாங்க? பத்து ரூபா கூட கொடுக்க முடியாதே உன்னால? ஒரு சாதாரண ஸ்கூல்ல சேர்ந்திருந்தா எங்க பள்ளிப் பருவம் இன்னும்கூட நல்லார்ந்திருக்கும்னு தோணும்.''

"எப்பப் பாரு தாழ்வுணர்ச்சில எவ்ளோ கஷ்டப் பட்டோம்னு உனக்கெப்படி தெரியும்? எல்லோரையும் போல வசதியா வாழணும். விதவிதமா உடுத்தணும். வகை வகையா உண்ணனும்னு நினைக்கறதுல என்னப்பா தப்பு. ஆசைப்படறவன் தான் சராசரி மனுஷன். இதெல்லாம் நார்மலான ஆசைதானே? அப்பதான் வேற வழியில்லாம உன் சம்பளத்துக்குள்ள எங்க ஆசைகளை சுருக்கிக்கிட்டோம். இப்பொ என்ன? பத்தாயிரம் சம்பாதிச்சும் கூட பஞ்ச வேஷம் போடச் சொல்றயா?''

அப்பா மலைத்துப் போனார். இவர்களுடைய பள்ளிப் படிப்பின் பின்னால் இத்தனை ஆதங்கங்களா? எதிர்காலம் கருதி பெரிய பள்ளியில் சேர்த்ததற்குப் பின்னால் இத்தனை காயங்களா? பெரிய பள்ளியில் சேர்த்தால் மட்டும் போதுமா அதற்கேற்றாற்போல் மற்ற விஷயங்கள் என்ன செய்திருக்கிறாய். நீ என்று பெண் கேட்பதும் நியாயம் தானே?

சின்னஞ்சிறு மனசுகளின் ஏக்கம் புரியாமல் என் லட்சியமே பெரிதென்று இருந்து விட்டேனா? இது சரியா தப்பா?

அப்பா ஒரு நிமிடம் குழம்பினார். எதுவும் பேசாது நடந்தார்.

∴ ∴ ∴

அதற்கடுத்த மாதம் பால் காய்ச்சி குடித்த கையோடு சாமான் கடத்தினார்கள். பழைய வீட்டிற்கு இது பெரிது தான். மஞ்சு தனக்கென்று ஒரு படுக்கையறை வேண்டும் என்றாள். இன்னொன்றில் அம்மாவும் மதுவும் படுத்துக் கொள்ள அப்பா ஹாலில் படுத்தார். அம்மாவுக்கு ரொம்ப சந்தோஷம். சமையல்கட்டு நவீனமாயிருந்தது.

“இப்படி ஒரு சமையல்கட்டுல சமைக்கணும்னு எனக்கும் ரொம்ப நாளா ஆசைதான். பழைய வீட்டுல ஒருத்தர் உள்ள போனா ரெண்டு பேர் வெளில வரணும். இப்படி திரும்பினா இது இடிக்கும், அப்படி திரும்பினா அது இடிக்கும்னு இட நெருக்கடி. ஏதோ மஞ்சு புண்ணியத்துல காலை வீசி நடக்கறாப்பல ஒரு சமையற்கட்டு கிடைச்சுதே.”

அம்மாவும் மஞ்சுவும் ஒவ்வொரு விதமாய் திருப்தி பட்டாலும் அப்பாவும் மதுவும் சமநிலையாகவே இருந்தார்கள் புது வீடு பெரிய பாதிப்பு எதுவும் ஏற்படுத்தி விடவில்லை.

“ஹாலுக்கு நல்லதா சோபா செட் வாங்கணும்” ஒரு வாரம் கழித்து மஞ்சு மெல்ல ஆரம்பித்தாள்.

“நல்ல செட் வாங்கணும்னா எட்டாயிரம் ஆகும். பணத்துக்கு எங்க போக” என்றார் அப்பா.

“அதுசரி இருந்தா மட்டும் வாங்கிடுவீங்களா என்ன?” மஞ்சு முனகிக் கொண்டே உள்ளே போனாள்.

புது வீடு வந்ததிலிருந்து அவள் அறைக்குள் இருப்பதே சுகம் என நினைத்து விட்டாள். மற்றவர்களிடம் பேசுவதை கூட தவிர்த்தாள். எப்போதும் தாழிட்ட அறையில் ஏதோ படிப்பதும், பாட்டு கேட்பதுமாக இருந்தாள். யாருக்கும் யாரோடும் பேச நேரமில்லாததால் அவள் ஒதுங்கிப் போனது யாருக்கும் வித்தியாசமாக தெரியவில்லை. முதல் மாத சம்பளம் அவள் வாங்கி வந்த அன்றுதான் அந்த வித்தியாசம் ஒரு சின்ன கோடாய்த் தெரிந்தது. அப்பாவுக்கு அது பெரிய அடி.

## 5

முதல் சம்பளம் வாங்கிய அன்று வழக்கத்தைவிட லேட்டாயிற்று மஞ்சு வீட்டிற்கு வர. அதற்குள் அம்மா பரிதவித்துப் போய் விட்டாள். உள்ளுக்கும் வாசலுக்கும் நடந்து தீர்த்தாள்.

“அத்தனாம் பணத்தோட பஸ்ஸீல ஏறி... பணத்தை பறிகொடுத்திருப்பாளோ... அல்லது அவளையேயாராவது...”

“சும்மாருடி...” அப்பா கத்தினார்.

“பஸ் ஸ்டாண்டு வரை போய் பார்த்துட்டு வரலாமில்ல? இந்த ஊரில பொண்ணு கடத்தற கும்பல் இருக்குன்றாங்க எனக்கென்னமோ பயமாயிருக்கு.”

அப்பா கவலையோடு பஸ் ஸ்டாண்ட் போய், இன்னும் அதிக கவலையோடு திரும்பி வந்தார். அம்மா மஞ்சத் துணியில் குலதெய்வத்திற்கு லஞ்சம் முடிந்து வைத்தாள்.

ஒன்பது மணிக்கு மஞ்சு வந்தாள். அவள் பின்னால் மூன்று சக்கர வண்டியில் சில சாமான்களும் வந்திறங்கியது. கட்டில், மெத்தை, அரை டசன் பிளாஸ்டிக் நாற்காலிகள்.

“என்னம்மா இதெல்லாம்?”

“வாங்கினேம்பா” மஞ்சு வேறெதுவும் சொல்லவில்லை. கட்டிலும் மெத்தையும் நாற்காலிகளும் அவள் அறைக்கு போயிற்று. உடன் வந்த கடை ஆள் கட்டிலை பிக்ஸ் பண்ணிக் கொடுத்தான். மெத்தையை விரித்தான். விலை உயர்ந்த குர்லான் மெத்தை. கட்டிலும் மெத்தையும் படு படுஎன்றது. மனதை மயக்கியது. கட்டிலை ஓட்டி சுவ ரோரம் மூன்று நாற்காலிகள் போட்டாள். மீதம் மூன்றை ஹாலில் கொண்டு வந்து போட்டாள்.

சாப்பிடும்போது அப்பாவிடம் சம்பள கவரை நீட்டினாள். அப்பா எண்ணினார். சரியாக மூவாயிரம் இருந்தது. அப்பா கேட்கா ததை அம்மா கேட்டு விட்டாள்.

“என்னடி ஒன்பது வரும்னு மூணு கொடுக்கற? ஓ... கட்டிலும் மெத்தையும் வாங்கிட்ட இல்ல... சரிதான் சரிதான்.”

மஞ்சு எதுவும் பேசவில்லை. அப்பாவும் எதுவும் கேட்கவில்லை.

மறுநாள் நாலைந்து புது டிரஸ், மேக்கப் சாதனங்கள், சென்ட் பாட்டில், பியூட்டி கிரீம்கள் என்று வாங்கி வந்து தன் அறையில் வைத்துக் கொண்டாள். அதற்கு மறுநாள் அவள் பின்னல் போய் பம்மென்று பாப் தலையாயிற்று. இந்தி நடிகை மாதிரி

இரு தோள்களிலும் ஷாம்பு விளம்பரம் மாதிரி பளபளத்த கேசம் வழிந்தது. ∴பேஷியல் செய்யப்பட்ட முகமும், சீர்திருத்தப்பட்ட புருவங்களும். லிப்ஸ்டிக் உதடுகளும் அவள் அழகைப் பல மடங்கு கூட்டியிருந்தன.

“நமக்கெதுக்கடி இதெல்லாம்? கல்யாணத்துக்கு நிக்கற பொண்ணு இப்டி முடியை வெட்டிக்கிட்டு வரலாமா?”

“சும்மாரும்மா... இப்டி போனாதான் எங்க ஆபீஸ் மதிக்கும். வழிச்சு வாரிக்கிட்டு போனா பட்டிக்காட்டு பொணமேங்கும். மாசம் பிறந்தா சுளையா பத்தாயிரம் எண்ணி வெக்குது. இப்படித்தான் நான் இருக்கணும்னு அதுமுடி வெடுத்துது. நானும் மாறிட்டேன்.”

அம்மா வாயடைத்துப் போனாள். சம்பாதிக்கற பொண்ணை கட்டுப்படுத்துவது கடினம் என்று உணர்ந்திருந்த அப்பா எதுவும் பேசவில்லை.

அதற்கடுத்த மாதமும் மஞ்சுளா நாலாயிரம் ரூபாய் தான் அம்மாவிடம் கொடுத்தாள்.

“இந்த மாசம் என்ன செலவுடி பண்ணின. எதுவும் வாங்கினாப் போல கூட தெரியலையே.”

“ஏன்?”

“இல்ல... நானுதான் தர...”

“ஏன் பத்தாதா?”

“அதில்ல...”

“த பாரும்மா... வீட்டு வாடகைக்கு மூணு. மிச்சம் ஆயிரம். நீ எனக்கு போடற சாப்பாட்டுக்கு. அதுவே அதிகம்தான். ஹாஸ்டல்னா இதைவிட கம்மியாதான் ஆகும்.”

மஞ்சுளா மிகச் சாதாரணமாக சொல்ல அம்மா ஆணியடித்தாற் போல் நின்றுவிட்டாள். கண்களில் குளம் கட்டிக் கொண்டது. பேசுவது தன் பெண்தானா என்ற சந்தேகம் வந்தது. எதற்கிப்படி சொன்னாள்? இந்த வீட்டை விட்டு வெளியில் போனால் இன்னும் செலவு குறையும் என்கிறாளா? பத்தாயிரம் ரூபாய் சம்பாதிக்க

ஆரம்பித்ததும் என்ன வேண்டுமானாலும் பேசலாம். எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம் என்கிற நினைப்பா?

"நில்லு மஞ்சு" அம்மா சொல்ல, மஞ்சு நின்று திரும்பினாள்.

"இப்ப நீ பேசினதுக்கு என்ன அர்த்தம்?"

"ஏன் உனக்கு என்ன அர்த்தம் புரிஞ்சுது."

"இது ஹாஸ்டல் இல்ல மஞ்சு. வீடு."

"சரி வீடுதான். அதுக்கென்ன இப்பொ?"

"முதல் சம்பளம் வாங்கினதுமே முழுசா உங்கப்பாகிட்ட கொடுத்து கால்ல விழுந்து ஆசி வாங்கியிருக்கணும். ஆனா நீ கண்டதையும் வாங்கிட்டு வந்துட்டு மூவாயிரத்தை கடனேன்னு கொடுத்த. வரி சின்ன பொண்ணு தெரியாம செய்திருப்பன்னு விட்டுட்டேன். இந்த மாசமும் இப்டி கணக்கு பார்த்து கொடுத்தா என்ன அர்த்தம்? மரியாதையா வாங்கின சம்பளத்தை உங்கப்பாகிட்ட கொடுத்து அவர் கால்ல விழு."

மஞ்சு அம்மாவை புருவம் சுருங்கப் பார்த்தாள்.

"மிரட்டறயா?"

"மிரட்டல. கண்டிச்சேன். உன்னை கண்டிக்கற உரிமை எனக்கில்லையா?"

"இருக்கு. ஆன நா கஷ்டப்பட்டு சம்பாதிக்கற பணத்தையெல்லாம் அப்டியே குடுக்க சொல்றதுக்கு பேரு வழிப் பறிக் கொள்ளை..."

"என்னடி சொன்ன?" அம்மா பளாரென்று அவள் கன்னத்தில் அறைந்தாள்.

"பெத்தவங்ககிட்ட பேசற பேச்சா இது. உன் சாம்பாத்தியத்தை வாங்கி எனக்கா அட்டிகை செய்து போட்டுக்கப் போறேன்? உன் கல்யாணத்துக்குத்தாண்டி சேர்த்து வைப்போம்."

“அதையேதான் நானும் செய்யறேன்’’ அடிபட்ட கன்னத்தை தடவிக் கொண்டு ஆத்திரத்தோடு மஞ்சு சொல்ல அம்மா அயர்ந்து போனாள். அவளை வெறித்துப் பார்த்தாள்.

அழைப்பு மணி ஒலிக்க அப்பாதான் வருகிறார் எனப் புரிந்து கொண்டு மஞ்சு வெறுப்போடு தன் அறைக்கு செல்ல அதுவரை அவர்கள் சண்டையை திகைப்போடு பார்த்துக் கொண்டிருந்த மது, விரைந்து சென்று கதவை திறந்தாள்.

உள்ளே நிலவிய அமைதி வித்தியாசமாக இருக்க அப்பா கேள்வியோடு இருவரையும் பார்க்க மீது எதுவும் சொல்லாமல் நழுவினாள். அம்மா அவருக்கு டிபனும் காப்பியும் எடுத்து வந்தாள்.

“மஞ்சு இன்னும் வரல?’’ அப்பா சாப்பிட்டபடி கேட்டார்.

“வந்துட்டா’’ அம்மா சுரத்தின்றி சொல்லிவிட்டு உள்ளே போக அப்பா நிதானமாக தன் டிபனை முடித்து கைகழுவினார்.

மது அவசரமாக அம்மாவிடம் வந்தாள். “ஏம்மா அப்பாட்ட சொல்லப் போறயா?’’

“பின்னே? அவ எப்டி பேசினான்னு கேட்டல்ல?’’

“போகட்டும் விடு.’’

“அப்போ சொல்லா தன்றயா.’’

“அவரே கேட்டுக்கட்டும். அவ கொடுத்த பணத்தை மட்டும் அவர்கிட்ட கொடுத்துடு. அதுக்கு மேல எதுவா இருந்தாலும் அவர் நேரடியா அவகிட்ட பேசிக்கட்டும். உங்கிட்ட பேசினா மாதிரி அவர்கிட்ட பேசமாட்டா.’’

“அது துணிஞ்ச கட்டை மது. வாய்த்துடுக்கு அதிகம் அவளுக்கு.’’

“பேசும்போது பார்த்துப்போம். நீ இப்போ எதுவும் சொல்லாத.’’

அவள் சொன்னபடி அம்மா மஞ்சு கொடுத்த பணத்தை மட்டும் கொண்டு போய் அவரிடம் நீட்டினாள்.

“எவ்ளோ குடுத்தா?’’

“நாலாயிரம்.”

அப்பா எதுவும் பேசாமல் பணத்தை வாங்கிக் கொள்ள அம்மாவுக்கு பொறுமை உடைந்தது.

“மூவாயிரம் வாடகையாம். ஆயிரம் அவ சாப்பாட்டுக்காம். மிச்ச பணத்தை எல்லாம் அவ கல்யாணத்துக்காக அவளே சேர்த்து வெச்சுப்பாளாம். நம்ம பேர்ல அவளுக்கு நம்பிக்கையில்லையாம்.”

அப்பா அமைதியாக கேட்டார். கண் மூடி சற்று நேரம் அமர்ந்திருந்தார். பிறகு மதுவிடம் சொன்னார்.

“அவளை கூப்டு மது.”

மதுமிதா தயக்கத்தோடு அக்காவின் அறை நோக்கி சென்றாள். ஒரு பூகம்பமே வெடிக்கப் போகிறது! கடவுளே எதற்கு இவளுக்கு வேலை கொடுத்தாய்? இந்த வீட்டின் சந்தோஷத்தில் ஏன் கை வைத்து விட்டாய்.

“உன்னை அப்பா கூப்பிடறார்.”

மது சொல்ல இதை எதிர்பார்த்தாற்போல் மஞ்சு படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை பட்டென்று மூடி வைத்து விட்டு அலட்சியமாய் அந்து அவர் எதிரில் நின்றாள்.

“உங்கம்மா எல்லாம் சொன்னா மஞ்சு” அப்பா ஏற இறங்க அவளைப் பார்த்தபடி சொல்ல மஞ்சு எதுவும் பேசவில்லை.

“உங்கம்மா பைத்தியம் மஞ்சு. அவளுக்கு எதுவும் தெரியல. பெத்த பொண்ணுகிட்ட போய் சாப்பாட்டுக்கு காசு வாங்குவாங்களா என்ன?”

“இந்தாம்மா” அப்பா அவள் கொடுத்த நாலாயிரத்தையும் அவளிடமே நீட்டினார்.

“உன் கழுத்துல ஒரு தாலி ஏறி நீ புருஷன் வீட்டுக்குப் போகிறவரை உன்னை பார்த்துக்க வேண்டியது எங்க கடமை மஞ்சு. உணவுக்கோ, உறைவிடத்துக்கோ பணம் வாங்கிக்கறவன் நல்ல தகப்பனா இருக்க முடியாது மஞ்சும்மா. இந்த பணத்தை நீ ரொம்ப கஷ்டப்பட்டு சம்மாதிச்சிருப்ப. இதை வாங்கி செலவழிக்க எனக்கு கை

கூசுது. நீயே வெச்சுக்கம்மா. உன் மனசு நோகும்படியா உங்கம்மா ஏதாவது பேசியிருந்தாலும் எனக்காக அவளை மன்னிச்சிடு.''

மஞ்சு திகைத்தாள். உடம்பில் ஆயிரம் தேள் ஊர்வது போல் உணர்ந்தாள். அப்பா புதுவிதமாய் தண்டனை கொடுப்பது போலிருந்தது. இனி இந்த வீட்டில் உண்ணும் போதும் உறங்கும்போதும் உறுத்தும்.

அன்றிரவு யாரும் சரியாக உறங்கவில்லை.

## 6

இன்டென்சிவ் யூனிட்டிலிருந்து வெளியில் வந்த நர்சை நோக்கி ஓடினாள் மது.

``அப்பாவுக்கு எப்படி இருக்கு நர்ஸ்?''

``முன்றேற்றம் இல்லம்மா இன்னும் நினைவு திரும்பல.''

``பார்க்கலாமா அவரை?''

``உள்ளே போக முடியாது. கண்ணாடி தடுப்பு வழியா பாருங்க.'' நர்ஸ் போய் விட்டாள்.

மது அம்மாவோடு கண்ணாடிச் சுவர் வழியே அப்பாவை பார்த்தாள். அப்பா சலனமின்றி படுத்திருந்தார். அழ ஆரம்பித்த அம்மாவை சமாதானப்படுத்தி வெளியில் அழைத்து வந்தாள் மது.

``நீ வீட்டுக்கு போயிடும்மா. நா அப்பாவைப் பார்த்துக்கறேன். மஞ்சு தனியா இருக்கா வீட்ல.''

``நா எப்டிடி அங்க நிம்மதியா…''

“பிரச்சினையை புரிஞ்சுக்கம்மா. அப்பாவுக்கு எதுவும் ஆகாது. மஞ்சுவுக்கு துணை வேண்டாமா... அவ இருக்கற நிலைமைல அவளும் ஏடா கூடமா ஏதாவது செய்துக்கிட்டா? நீ புறப்படு.”

மது அம்மாவை வற்புறுத்தி ஆட்டோவில் ஏற்றி வீட்டுக்கு அனுப்பி விட்டு மறுபடியும் வந்து வராண்டா பெஞ்சில் அமர்ந்து கொண்டாள்.

“எப்படியிருந்த வீடு! எத்தனை சிநேகமான தகப்பன்? மஞ்சு ஏன் எவரையும் புரிந்து கொள்ளவில்லை.”

“ஏம்மா மது... ஒடியா... உங்கப்பா லேசா கண் திறக்கறார்.”

நர்ஸ் கத்த மது பாய்ந்தோடிச் சென்றாள்.

அப்பா அவளை அடையாளம் கண்டுகொள்ள மிகவும் சிரமப்பட்டார். கால் நினைவுதான் வந்திருந்தது.

“அப்பா எப்படிப்பா இருக்கு... நா மதுப்பா... என்னை பாருங்களேன்.”

அப்பா சிரமப்பட்டு கண் திறந்தார். ஏதோ பேச அவர் நாக்கு துடித்தது.

“என்ன சொல்லுங்கப்பா.”

“மஞ்... மஞ்சு...” அப்பா மறுபடியும் மயக்கத்திலாழ்ந்தார்.

மஞ்சுவை பத்திரமா பார்த்துக்க என்று சொல்ல வந்தாரா? மதுவுக்கு அழுகை வந்தது. வெளியில் வந்து பெஞ்சில் சாய்ந்தமர்ந்து கண்களை மூடிக் கொண்டாள்.

மஞ்சு! என்ன சொல்ல வந்தார் மஞ்சுவைப் பற்றி? மஞ்சு மட்டும் அவரை மதித்து நடந்திருந்தால் அப்பாவை கட்டாய ஓய்வெடுக்கச் சொல்லி சந்தோஷமா வைத்திருக்கலாம். இப்படி ஒரு விபத்தையும் அவர் சந்ததிக்க நேர்ந்திருக்காது.

மது பெருமூச்சு விட்டாள்.

எல்லாம் விதி என்று சமாதானப்படுத்திக் கொள்ள அவளால் முடியவில்லை. நினைவுகள் மறுபடியும் மஞ்சுவை நோக்கியே சென்றது.

“ஹலோ மஞ்சு என்ன ரொம்ப டல்லார்க்கீங்க.”

எம்.டி. அழைக்கிறார் என்று உள்ளே சென்ற மஞ்சு எம்.டி.ின் சேரில் உட்கார்ந்தபடி கேள்வி கேட்ட இளைஞனை வியப்போடு பார்த்தாள். அவன் சிரித்தான்.

“என்னடா யாருன்னே தெரியல. தெரிஞ்சா போல் பேசறானேன்னு ஆச்சரியமாயிருக்கா. என்னை நீங்க பார்த்ததில்ல. உங்களை எனக்கு தெரியும். எங்க வீட்டுக்கு நீங்க வந்தப்பொ பார்த்திருக்கேன். பட் பேசல. அப்பா உங்களைப் பத்தி சொல்லியிருக்கார். ரொம்ப பிரில்லியண்ட்னு. சரி அடிக்கடி சொல்றாரேன்னு உங்களைப் பார்த்து அறிமுகப்படுத்திக்கிட்டு போலாம்னு வந்தா ரொம்ப டல்லார்க்கீங்க நீங்க! வாட் ஹேப்பண்ட் டு யுவர் உற்சாகம்?”

மஞ்சு இன்னும் திகைத்தாள்.

“அப்பா என்று இவன் யாரைச் சொல்கிறான். அதுவும் எம்.டி.யின் சேரில் அமர்ந்து கொண்டு? ஒரு வேளை எம்.டி.யின் மகனா? எம்.டி.வீட்டுக்கு மட்டும்தான் அவள் போயிருக்கிறாள்.”

“யூ ஆர் கரெக்ட் மேடம். யுவர் எம்.டி.இஸ் மை ஃபாதர். ஐ ஆம் அசோக் ஏ டூ இசட்.”

மஞ்சு விழி விரித்தாள். “ஏ டூ இசட்? புரியலையே.”

“அதாவது ஏ டூ இசட் என்னல்லாம் பட்டம் இருக்கோ எல்லாம் எம் பேருக்கு பின்னால உண்டுன்னு சொன்னேன்.”

அவன் தன் தோள் குலுக்கி சிரிக்கி, மஞ்சு அவனையே பார்த்தாள். செக்கச் செவேலென்ற தோற்றம். நல்ல உயரம். பம்மென்ற கேசம். உயர்தர உடை, மேல்நாட்டு சென்ட்டின் மணம், அடர்ந்த மீசைக்கடியில் விஷமச் சிரிப்போடு அழுத்தமான உதடுகள்.

மஞ்சுவின் கனவு நாயகன் இப்படித்தான் இருப்பான். தன் வாழ்க்கையைப் பற்றி அவள் நிறைய கற்பனை செய்து வைத்திருந்தாள். துரத்தி துரத்தி அவளைக் காதலிப்பான் அவன். வெறித்தனமான காதல் அது. உலகத்தில் வேறு எந்த பெண்ணையும் அவன் ஏறெடுத்துப் பார்க்க மாட்டான். கோடி கோடியாய் சம்பாதிப்பவன் அவன். அவளுக்காக உலகத்து ஆபரணங்களையும் பொருட்களையும் வாங்கி தினம்

ஒரு பரிசளிப்பான். அவளைத் தன் தேவதையாக நினைத்து கண்ணுக்குள் பொத்தி வைத்திருப்பவன். அவன் அவள்மீது கொண்டிருக்கும் காதலைக் கண்டு உலகத்துப் பெண்களெல்லாம் பெருமூச்சு விடுவார்கள். இப்படியும் ஒரு கணவனா என்று வியந்து போவார்கள். அவன் அவளுக்காக ஒரு அழகிய காதல் மாளிகை கட்டுவான். அதில் சொர்க்க லோகத்தையும் மிஞ்சும் அழகும் அலங்காரமும் கொஞ்சும். தினம் ஒரு காரில் அவனோடு பயணிப்பாள் அவள். அவர்கள் தினம் ஒரு வெளிநாடு செல்வார்கள். நேரம், காலம் மறந்து அவன் அவளை கொஞ்சியபடியே இருப்பான். ஒரு கணமும் அவளைப் பிரிய விரும்பமாட்டான்.

கனவுகளும், கற்பனைகளும் இல்லாவிடில் மனிதவாழ்வு சுவையற்று வறண்டு போயிருக்கும். ஏதோ ஒரு விதத்தில் மனிதருக்கு அவை திருப்திளயிப்பதால் அவர்கள் அமைதியடைகிறார்கள்.

மஞ்சு தன் கனவுக் காதலனோடு தினம் உலகை சுற்றி வந்தாள். கற்பனை சுகத்தில் உறக்கம் தழுவும். விடியும்போது மறுபடியும் நிஜம் தாக்கும் கனவுகள் நிஜமாகுமா என்ற ஏதோ ஒரு விதத்தில் மனிதருக்கு அவை திருப்தியளிப்பதால் அவர்கள் அமைதியடைகிறார்கள்.

மஞ்சு தன் கனவுக் காதலனோடு தினம் உலகை சுற்றி வந்தாள். கற்பனை சுகத்தில் உறக்கம் தழுவும். விடியும்போது மறுபடியும் நிஜம் தாக்கும் கனவுகள் நிஜமாகுமா என்ற ஏக்கத்தோடு தன் கடமைகளை செய்வது வழக்கமாகி விட்டது. ஆனால் இதோ இந்த வினாடி எம்.டி.யின் மகனைப் பார்த்தபோது அவளுக்கு ஏன் தன் கனவு நாயகனைப் பற்றிய நினைவு வந்ததென்று தெரியவில்லை.

“என்ன மஞ்சு என்ன யோசனை?” அசோக் புன்னகையோடு சிரிக்க, மஞ்சு சட்டென்று நிஜத்துக்கு வந்தாள்.

“உங்களுக்கு என்ன வேணும் சார். எம்.டி.ஏதாவது பைல் கேட்டனுப்பினாரா?”

“இல்ல ஜஸ்ட் வந்தேன். கொஞ்சம் ஆபீஸ் வேலையும் கத்துக்கன்னு அப்பா சொன்னார். சரி கத்துக்கலாம்னு வந்தேன். இன்னிலேருந்து நீங்க என் பி.ஏ.மாதிரி. எல்லா விஷயத்துலயும் எனக்கு உதவி செய்யறீங்க சரியா?”

“வித் பிளஷர் சார்.”

“அதுக்குள்ள சந்தோஷம்னு சொல்லிடாதீங்க, ஒரு வேளை நீங்க லேட் அவர்ஸ் இருக்க வேண்டி வரலாம். யோசிச்சு சொன்னா போதும்.”

“இதுல யோசிக்க என்ன சார் இருக்கு. வேலைன்னா கொஞ்சம் முன்ன பின்னதான் ஆகும்.”

“இல்ல... உங்க வீட்ல லேட்டா போனா எதுவும் சொல்ல மாட்டாங்களா?”

“சொல்ல மாட்டாங்க.”

“ஆச்சர்யமார்க்கு.”

“என்னை எதுவும் சொல் அங்க யாருக்கு துணிவில்லை.”

“ஓஹோ உங்க வீடு அப்பொ எல்லாத்துக்கும் உங்களை நம்பிதான் இருக்குன்னு சொல்லுங்க.”

“அது...” மஞ்சு சட்டென்று தடுதாறினாள். ‘சல்லிக்காசு தன்னிடமிருந்து அப்பா எதிர்பார்ப்பதில்லை’ என்று சொல்ல நா கூசியது. “ஆமாம்” என்றாள் மெதுவாக.

“அப்டி சொல்லுங்க” அசோக் சிரித்தான்.

“அப்படி லேட்டாச்சுன்னா உங்களுக்கு ஓவர்டைம் போட்டு பணம் வாங்கிக்கலாம் நீங்க. ஒரு மணி நேரத்துக்கு இருநூறு ரூபா.”

“மைகாட்!” மஞ்சுவிழிவிரித்தாள். இரு நூறு ரூபாய் என்றால் தினம் இரண்டு மணி நேரம் செய்தால்கூட மாதத்திற்கு உபரிப் பணமாகவே ஏழாயிரம் எட்டாயிரம் தேறுமே. பணம் கசக்குமா என்ன? மஞ்சு சம்மதத்தோடு தலையாட்டினாள்.

“நீங்க செய்தது சரின்னு தோணுதா உங்களுக்கு?”

“எதைச் சொல்றீ?”

“அவ குடுத்த காசையும் வேணாம்னு திருப்பிக் கொடுத்துட்டீங்க! எப்டிங்க சமாளிப்பீங்க? வாடகையே மூவாயிரம் முழுங்குமே! எதைக் குறைப்பீங்க? எதைக் கூட்டுவீங்க?”

அம்மா கவலையோடு கேட்க, அப்பா ஈஸிசேரில் கண்மூடி படுத்திருந்தார்.

‘வாஸ்தவம்தான். எதைக் குறைப்பது, எதைக் கூட்டுவது? எல்லாம் பழைய செலவுதான். வீட்டு வாடகை மட்டுமே கையை கடிக்கக் கூடிய விஷயம். மாதம் மூவாயிரம் என்று எத்தனை மாதம் சமாளிக்க முடியும்? பெண்ணின் அலட்சியப் போக்கு அவர் சுய கவுரவத்தை சுண்டிப் பார்க்கிறதே. என்ன செய்ய? எப்படியாவது சமாளித்து தான் ஆக வேண்டும் கடன்பட்டாவது. ஆனால் ரொம்ப நாள் முடியாது. ஒரு இரண்டு மூன்று மாதம் சமாளிக்கலாம். அதற்குள் அவள் கல்யாணத்தை முடித்து விட்டால் பழையபடி இவர்கள் சிறிய வீட்டுக்கே போய் விடலாம். செலவு கட்டுக்குள் அடங்கி விடும். இப்போதைக்கு இதுதான் நல்ல வழி.’

“என்னங்க என்ன யோசனை?”

“ம்? ஒண்ணுல்ல. மஞ்சு கல்யாணத்தை பத்திதான் யோசிச்சேன்.”

“அதச் செய்ங்க முதல்ல. பாரமும் குறையும். பணப் பிரச்சனையும் தீரும்.”

அப்பா தலையாட்டினார்.

“நாளைக்கு வெள்ளிக்கிழமை. அவ ஜாதகத்தை ஒரு காப்பி எடுத்து பூஜைல வெச்சு சூடு. தெரிஞ்சவங்க கிட்டல்லாம் சொல்லி வைப்போம்.”

“இவ படிப்புக்கும் சம்பாத்தியத்துக்கும் நீங்க ஏங்க தேடிக்கிட்டு அலையணும். வீடு தேடியே வரனுங்க வந்துட்டுதானே இருக்கு?”

“எப்பொ வந்துது? சொல்லவேல்லியே”

“அது வந்தது. நா சொன்னா வேணாம், இப்பொ அவ கல்யாணத்துக்கு என்ன அவசரம்னுவீங்க. அதான். சொல்லல.”

அம்மா சாமி படத்துக்கு பின்னாலிருந்து கற்றையாக ஜாதகப் பேப்பர்களை எடுத்து வந்தாள். சிலவற்றில் போட்டோவும் கூட இருந்தது.

“எல்லாம் ரொம்ப பெரிய இடம் போல இருக்கே எவ்ளோ கேப்பாங்களோ என்னவோ? நம்ம சக்திக்கு தகுந்த வரனா பார்த்தாதான் நம்மால சீர் செய்ய முடியும்.”

“ஏங்க சக்திக்கு தகுந்ததா பார்க்கலாம். ஆனா நம்ம மஞ்சு படிப்பு சம்பாத்தியத்தை விட அந்த பிள்ளையாண்டான் சம்பளம் குறைச்சலா இருந்தா எப்டிங்க சரிப்படும்?”

“இப்பொ என்ன செய்யலான்ற?”

“கொஞ்சம் நல்ல இடமாவே பார்க்கலாங்க. இதோ பாருங்க இந்த பையனை. கம்ப்யூட்டர் என்ஜினீயராம். பதினைஞ்சாயிரம் சம்பாதிக்கறானாம். இன்னும் நல்ல எதிர்காலம் இருக்கால். பேர் சக்கரவர்த்தி. ஒரே பையன். எனக்கு சுத்தி வளைச்சு தூரத்து சொந்தம். அப்பா கிடையாது. அம்மா மட்டும்தான். மார்க்கெட்ல ஒருமுறை பார்த்து வீட்டுக்கு கூட்டிட்டு வந்தேன். மஞ்சுவோட போட்டோ பார்த்தாங்க. அவங்களுக்கு ரொம்ப பிடிச்சு போச்சு. நான்தான் உங்ககிட்டே சொல்லிட்டு வந்து பேசறோம்னு சொல்லியனுப்பினேன். அதுக்குள்ள இந்த பொண்ணு நடந்துகிட்ட விதத்துல. எல்லாமே எனக்கு அலுத்து போச்சு. உங்ககிட்ட சொல்லக்கூட மறந்துட்டேன்.”

“எங்க இருக்காங்க?”

“அம்பத்தூர்ல. பையனுக்கு பெங்களூர்ல வேலை.”

“அது சரி இவளுக்கு மாற்றல் கிடைக்குமா?”

“கிடைக்காட்டி விட்டுட்டு பெங்களூர்ல வேற வேலை தேடிக்கறது. இவ படிப்புக்கு வேலை வீடு தேடி வருமேங்க.”

“அதுவும் சரிதான்” அப்பாவுக்கு திருப்தி ஏற்பட்டது.

“அப்போ நாளைக்கே அம்பத்தூர் போவோமா? நா ருக்மிணிக்கு போன் போட்டு வரோம்னு தகவல் சொல்லிடவா?”

“யப்பா... எவ்ளோ வேகம் உனக்கு?” அவர் சிரித்தார் சரி என்று தலையாட்டினார்.

மறுநாள் கணவரும் மனைவியும் பிள்ளை வீட்டுக்கு போனார்கள். சிறிய பங்களா. நேர்த்தியாக அலங்கரிக்கப் பட்டிருந்தது. வரவேற்பறை முழுக்க பள்ளிப் பருவத்திலிருந்து சக்கரவர்த்தி வாங்கியிருந்த கேடயங்களும் கோப்பைகளும், மெடல்களும் மெருகு குலையாமல் வரிசையாக வைக்கப்பட்டிருந்தது.

சக்கரவர்த்தியின் பெரிய போட்டோவும் ஹாலில் சிரித்தது. மிக கண்ணியமான தோற்றம்.

“அவங்கப்பா செத்துப் போகும்போது சக்கரவர்த்திக்கு ஏழு வயசு. ரொம்ப சிரமப்பட்டு ஒரு லட்சிய மகனா அவனை வளர்த்துட்டேன். நா சொல்றதை எம் பிள்ளை தட்டவே மாட்டான். நீ பார்க்கற பொண்ணை கண்ணை மூடிக்கிட்டு கட்டிக்குவேன்னு சொல்லியிருக்கான். என் மேல அவ்ளோ நம்பிக்கை. உங்க குடும்பத்தோட சம்பந்தம் வெச்சுக்கறதுல எனக்கு ரொம்ப சந்தோஷம். எனக்கோ என் பிள்ளைக்கோ வரதட்சணைங்கற வார்த்தை கூட பிடிக்காது. என் மருமகளுக்குன்னு ஆறு பவுன்ல ஒரு அட்டிகையும், நாலு பவுன்ல வளையலும் செஞ்சு வெச்சிருக்கேன். உங்க சவுகர்யப்படி நகை போட்டு எளிமையா கல்யாணம் செய்து கொடுத்தா போதும். எவர்சில்வர் பாத்திரம் இங்கேயே எக்கச்சக்கமா இருக்கு. எதுவும் வேணாம். சில்வர் கூட வேணாம். உங்க திருப்திக்கு ஒரு குத்துவிளக்கு மட்டும் வேணா கொடுத்தனுப்புங்க போதும். சீர் சினத்தியை விட ரெண்டு பேரும் மனமொத்து வாழறதுதான் முக்கியம்னு நா நினைக்கறேன். என்ன சொல்றீங்க?”

பிள்ளையின் அம்மா பேசி முடிக்க ஷண்முகம் வாய் பிளந்தார். நம்ப முடியாமல் அந்த பெண்மணியையே பார்த்தார். இந்த காலத்தில் இப்படியும் மனிதர்களா? இப்படி ஒரு சம்பந்தம் கிடைக்க பூர்வ ஜென்ம புண்ணியம் வேண்டும். மஞ்சு கொடுத்து வைத்திருக்கிறாள். இந்த வீட்டில் அவள் சவுக்கியமாய் வாழ்வாள். அதே நேரம் இந்த தாயை அவள் மரியாதையோடு நடத்த வேண்டும். கடைசி வரை இந்த தாயின் மனதை வேதனைப்படுத்தாது வாழவேண்டும். இருப்பாளா மஞ்சு? அவருக்கு கவலையும் ஏற்பட்டது தன் பெண்ணின் குணத்தை நினைத்தபோது.

“எப்பொ நீங்க பெண் பார்க்க வரீங்க?”

“அடுத்த வாரம் என் கணவரோட திதி வருது. அப்போ அவன் வருவான். வந்ததும் தகவல் சொல்லிட்டு வரோமே.”

“நல்லதும்மா. நாங்க பண்ணின பாக்கியம்தான் உங்களோட சம்பந்தம் கிடைக்கறதுக்கு.”

“நீங்களும் உங்க பொண்ணுகிட்ட சம்மதம் கேட்டு வெச்சுக்கங்க. அப்புறம் பொண்ணுக்கு பிடிக்காம...”

“ஆங்... அதெல்லாம் இல்ல. எம் பொண்ணும் எங்க விருப்பத்தை மீறி நடக்க மாட்ட.”

சம்பந்தியம்மா வாசல் வரை வந்து வழியனுப்பினாள்.

“எப்டி நம்ம செலக்ஷன்?” யசோதா வரும் வழியில் கேட்டாள்.

“ம் நல்ல இடம்தான் ஆனா நம்ப பொண்ணு குணம் தான் எனக்கு கவலையாயிருக்கு. அவங்க இவளை ரொம்ப நல்லா வெச்சிருப்பாங்க. சந்தேகமேல்ல. ஆனா இவ அவங்களை சந்தோஷப்படுத்துவாளா. சங்கடத்தை கொடுப்பாளான்னு நினைச்சா கவலையார்க்கு.”

“அதெல்லாம் கவலையே வேண்டாம். தன் கல்யாணத்தை காரணம் காட்டிதானே அவ சுயநலமா நடந்துக்கறா. அந்த கல்யாணமே ஜாம்ஜாம்னு நடந்துட்டா அப்புறம் அவளும் நம்மளைப் புரிஞ்சிப்பா. எப்பேர்ப்பட்ட இடம் தனக்கு கிடைச்சிருக்குன்னு... தெரிஞ்சுக்கிட்டா ரொம்ப சந்தோஷப்படுவாங்க.”

“பார்ப்போம்” ஷண்முகம் யோசனையோடு தலையாட்டினார்.

## 7

பத்து மணியிலிருந்து எதிர்பார்த்து மூன்று மணிக்கு தான் வந்தான் அசோக். வந்ததும் கூட உடனே அவளை அழைக்கவில்லை. அவனாக கூப்பிட்டால் உள்ளே போனால் போதும் என்ற முடிவோடு இருந்த மஞ்சுவுக்கு ஐந்து மணிக்குதான் அழைப்பு வந்தது. கோபமான முகத்தோடு அவளைப் பார்த்தான் அசோக்

“பர்சனல் உதவியாளர் என்றால் என்ன அர்த்தம் என்று தெரியுமா மிஸ் மஞ்சு?”

“சார்...” மஞ்சு விழித்தாள்.

‘‘நா எப்போ ஆபீஸ் வந்தேன்னு தெரியுமா உங்களுக்கு?’’

‘‘மூணு மணிக்கு சார்.’’

‘‘மூணு மணிக்கே நா வந்தது தெரிஞ்சும் அஞ்சு மணிக்கு நானா கூப்ட்டப்பற...’’

‘‘சாரி சார்... நீங்க கூப்பிடாம எப்படி உள்ள வரதுன்னுதான்.’’

‘‘ஆபீஸர் உள்ள நுழைஞ்சதுமே அவரோட அருகில் நிற்கணும். அவர் போனப்பறம்தான் போகணும். ஒரு நல்ல பர்சனல் உதவியாளருக்கு அழகு அதுதான். இன்னும் சொல்லப் போனா நா உதட்டுல சிகரெட் வெச்சுக்கிட்டேன்னா லைட்டரோட கிட்ட வந்து கொளுத்தணும். பட் நீங்க பெண்ங்கறதுனால நா அவ்ளோ சீப்பா நடத்த மாட்டேன். பயப்படாதீங்க. ஆபீஸ் வேலைகளில் மட்டும் கிட்ட இருந்து உதவினா போதும். இன்னிக்கு எவ்ளோ நேரமானாலும் இந்த விவரங்களை பேஸிக்கா வெச்சுக்கிட்டு இந்த புராஸக்டை முடிச்சுக் கொடுத்துட்டுதான் போறீங்க. புரிஞ்சுதா.’’

மஞ்சு தலையாட்டினாள். அவன் தந்தவிவரங்களடங்கிய கோப்பை எடுத்துக் கொண்டு தன் கம்ப்யூட்டரில் வந்தமர்ந்தாள்.

அவன் கேட்ட விதமாக அதை பக்காவாக தயாரித்து பிரிண்ட் போட்டு முடிக்கும்போது மணி எட்டு.

‘‘வொண்டர்புல்’’ என்றான் அசோக்.

‘‘எக்ஸலண்ட் பர்ஃபார்மன்ஸ்! ஓர் உங்க கைக்கு ஒரு வைர மோதிரமே போடலாம் மஞ்சு. சாரி உங்க திறமை தெரியாம உங்களை திட்டிட்டேன். தயவு செய்து மனசுல வெச்சுக்கா தீங்க.’’

‘‘பரவால்ல சார்’’ சொல்லும்போதே மனசு பூரிப்பில் பொங்கியது.

அசோக் தன் பர்ஸ் பிரித்து ஐநூறு ரூபாய் தாளொன்றை எடுத்து கவரில் போட்டு அவளிடம் நீட்டினான்.

‘‘என்ன சார்?’’

‘‘உங்க ஓவர் டைம் பணம்.’’

"நீங்க உங்க பாக்கெட்லேர்ந்து தரீங்க."

"உங்களுக்கு ஓவர் டைம் கொடுக்கச் சொல்லி அக்கவுண்ட் செக்ஷனுக்கு இன்னும் ஆர்டர் போகலையே அதான். சரி போலாமா, வாங்க உங்களை டிராப் பண்ணிட்டு போறேன்."

மஞ்சு தயங்கினாள். இவனோடு வீடு வரை போயிறங்கினால் உள்ளே அழைக்க வேண்டி வரும். வீட்டைப் பார்த்து இவன் முகம் சுளித்தால்?

"உங்களுக்கு எதுக்கு சிரமம் சார்?"

"ஒரு சிரமமும் இல்ல. உங்களை அம்போன்னு எப்டி விட்டுட்டு போறது? போற வழில உங்களுக்கு ஏதாவது ஆயிடுச்சுன்னா எனக்கில்ல பழியாகும். இவ்ளோ அழகான பெண் முதல்ல தனியா இந்த இருட்டுல போலாமா?"

அவன் தன் அழகைப் பற்றி புகழ்ந்ததும் சட்டென்று மஞ்சுவின் முகம் சிவந்தது.

"ப்ஸீ... ஏன் சார் பொய் சொல்றீங்க? நானெல்லாம் ஒரு அழகா?"

"இதானே வேணாங்கறது. நீங்க இப்டி சொன்னா தா இன்னும் நாலு முறை நீங்க அழகு அழகுன்னு சொல்லு வேன்னுதானே?"

"அய்யோ அப்டியெல்லாம் இல்ல."

"ஓகே மஞ்சு. நீங்க கேட்காட்டாலும் இன்னொரு முறை சொல்ல நான் தயார். முதல் முறை உங்களை எங்க வீட்ல வெச்சு பார்த்தப்போ அட நம்ம ஆபீஸ்ல கூட இப்டி ஒரு உலக அழகியான்னு அசந்துட்டேன். சொல்லப் போனா அப்பா என்னை லண்டன்ல இருக்கற பிரான்ச்சைதான் பார்த்துக்கச் சொல்லி வற்புறுத்தினார். நா இந்தியாவை விட்டு போக மாட்டேன்னு சொல்லிட்டேன். அதுக்கு காரணம் தேசப்பற்றுன்னு தப்பா நினைச்சிடாதீங்க. லண்டன்ல என்ன இருக்கு? வேகாத தோசை கணக்குல வெள்ளைக்கார பெண்களோட சேர்ந்து வேலை செய்ய முடியுமா? அதுவும் எந்த ஒரு அழகியோடும் ஒப்பிட முடியாத ஒரு அபூர்வ அழகு மெட்ராஸ் ஆபீஸ்லயே இருக்கும்போது எவனாவது லண்டனுக்கு போவான்றீங்க?"

அவன் பேசப் பேச மஞ்சு தான் எங்கோ பறப்பதை உணர்ந்தாள். காதும் கன்னத்து சதையும் ரத்தம் அதிகரித்து ஜிவ்வென்ற உணர்ச்சியை அதிகரித்தது.

அழகான ஆண் ஒருவனால் புகழப்படுவதை விட பெண்ணுக்கு பெரிய இன்பமும் இருக்குமா என்ன? மந்திரத்திற்கு கட்டுப்பட்டாற் போல் அவனோடு காரில் ஏறியமர்ந்தாள்.

‘‘என்ன மஞ்சு சைலன்ட்டாயிட்டீங்க. ஓ... உங்க அனுமதி இல்லாம உங்க அழகைப் பத்தி பேசறேன் இல்ல வெரி சாரி...’’

‘‘அதில்ல...’’ மஞ்சு லேசாய் பதறினாள். எங்கே அவன் அத்தோடு புகழ்வதை நிறுத்திக் கொண்டு விடுவானோ என்று பயந்தாள். புகழ்ச்சி இனிமையானது. புகழ்ச்சியில் தான் உலகம் இயங்குகிறது. ஒருவரை ஒருவர் புகழ்வது இல்லையெனில் உலகம் இன்னும் கற்காலத்திலேயே இருந்திருக்கும். அதுவும் அழகு புகழப்படும்போது அதை இன்னும் மெருகூட்டிக் கொள்ளத் தோன்றும். நாளைக்கு என்ன உடையணியலாம், எப்படி ஒப்பனை செய்து கொள்ளலாம் என் மஞ்சு இப்போதே யோசிக்க ஆரம்பித்தாள்.

‘‘வீடு எங்கேன்னு சொல்லிட்டு யோசிங்களேன்’’ அசோக் புன்சிரிப்போடு அவள் சிந்தனையை கலைத்தான்.

தெருமுனையில் இறங்கிக் கொண்டாள்.

‘‘வீட்டுக்கு கூப்பிட்டா வந்துட மாட்டேன்.’’

‘‘சாரி எங்கப்பாவும் அம்மாவும் கொஞ்சம் ஓல்டு டைப்.’’

‘‘ஆனா இவ்ளோ லேட்டா போனா மட்டும் சும்மார்ப் பாங்களா?’’

‘‘ஓவர் டைமாச்சே. பணம் வருமே. அதனால பேசாம இருப்பாங்க.’’

‘‘பாவம் மஞ்சு... நீங்க பணத்துக்காக தன் கொள்கைகளை மாற்றிக்கறவங்க கூட எப்டி இருக்கீங்க.’’

மஞ்சு பதில் சொல்லவில்லை.

“ஓகே நாளைக்கு பார்ப்போம். அசோக் மிக ஸ்டைலாய் வண்டியை ரிவர்ஸ் எடுத்து திருப்பினான்.”

“நாளைக்கும் மூணு மணிக்குதான் வருவீங்களா?”

“ஏன் எப்பொ வரணும்?”

“இல்ல ஜஸ்ட் கேட்டேன். எப்பொ வேணா வாங்க உங்க ஆபீஸ். நீங்கதானே பாஸ்.”

அசோக் சிரித்தபடி சென்றான்.

மஞ்சு அவனை சுமந்தபடி வீட்டுக்கு வந்தாள். அம்மாவின் முகத்தில் அவளைக் கண்டதும் பயமும் கவலையும் கரைந்தது.

“ஏம்மா இவ்ளோ லேட்? பயந்துட்டோம் என்னாச் சோன்னு.”

“எதுவும் ஆகாது. இனிமே தினமும் எட்டு மணியாகும்.”

“ஏன் மஞ்சு?”

“ஓவர் டைம் கிடைக்கும்.”

“எதுக்கும்மா? நாங்க தினமும் நீ வர வரைக்கும் கவலைப்படணும். ஊர் ரொம்ப கெட்டு கிடக்கும்மா.”

“அதெல்லாம் எதுவும் ஆகாது. என்னைப் பாதுகாத்துக்க எனக்குத் தெரியாது? சீக்கிரம் வீட்டுக்கு வந்து என்ன செய்யப் போறேன்? என் கூட யார் மூஞ்சி கொடுத்து பேசறீங்க? அதைவிட ஓவர் டைம் செய்துட்டு வந்தா பணத்துக்கு பணம். படுத்தவுடன் தூக்கம்.”

மஞ்சு அலட்சியமாய் தன் அறைக்கு சென்று உடை மாற்றி, முகம் கை கால் கழுவிக் கொண்டு சாப்பிட வந்தாள்.

“எல்லோரும் சாப்ட்டாச்சா?”

“ம்... மது அப்பவே தூங்கிட்டா. அப்பா இத்தனை நாழி காத்திருந்தது இப்பதான் சாப்ட்டு படுத்தார். நா இன்னும் சாப்டல.”

“அப்ப உட்காரேன்” மஞ்சு சொல்ல யசோதாவும் ஒரு தட்டு வைத்துக் கொண்டு அவள் அருகில் அமர்ந்தாள். அம்பத்தூர் போய் சம்பந்தம் பேசி விட்டு வந்ததை எப்படி பெண்ணிடம் சொல்வது என்ற யோசனையோடு சாதம் எடுத்து போட்டாள். தானும் போட்டுக் கொண்டாள். சொன்னால் ஏதாவது ஏடாகூடமாக பேசுவாள். அதை விட விடுமுறையன்று ஒருநாள் எதேச்சையாக வருவது போல் அவர்களை வரச் சொல்லி விட்டால் நிச்சயம் பையனின் அழகும், படிப்பும், சம்பாத்யமும் இவள் மனதை மாற்றிவிடும். அதன் பிறகு இவளிடம் மெல்ல பேசினால் எளிதில் சம்மதித்து விடுவாள்.

“நீயே உன் பெண்ணிடம் சொல்லி விடு” என்று ஷண்முகம் பொறுப்பை அவள் தலையில் கட்டி விட்டதால் இத்தனை யோசனைகள். இறுதியில் சொல்வதை விட சொல்லாமல் இருப்பதே நல்லது என்ற முடிவுக்கு வந்தது யசோதாவின் மனம். அங்கேதான் அவள் தவறு செய்து விட்டாள்.

## 8

மறுநாள் அலங்காரத்திற்கு மிக அதிக நேரம் எடுத்துக் கொண்டாள் மஞ்சு. லேசில் திருப்தி கிடைத்து விட வில்லை. நாலைந்து புடவைகள் மாற்றினாள். நாலைந்து முறை முகம் கழுவி மறுபடியும் ஒப்பனை செய்து கொண்டாள். இறுதியாக ரோஜா நிறத்தில் ஒரு மெல்லி ஷி∴பான் சாரியும் அதே நிறத்தில் பின் கழுத்து நன்றாக இறக்கப்பட்ட கையில்லாத ரவிக்கையும் அணிந்தாள். புடவையை பட்டை வைக்காமல் பறக்க விட்டு ஒரு ஓரத்தை மட்டும் தோளில் பின் செய்தாள். ஷாம்பூ குளியலில் கேசம் பம்மென்று பளபளப்பாய் பறந்தது.

முன்னும் பின்னும் திரும்பி கண்ணாடியில் பார்த்துக் கொண்டாள். ஒரு வழியாய் திருப்தி ஏற்பட்ட பின் கிளம்பினாள்.

“சாப்பிடலையா மஞ்சு.”

“வேணாம்மா. சீக்கிரம் போகணும் நான்” செருப்புக்குள் கால் நுழைத்தாள். ஆட்டோ பிடித்து அலுவலகம் வந்தாள்.

சரியாக பதினோரு மணிக்கு அசோக் கம்பீரமாக நடந்து சென்று தன் அறையில் நுழைந்தான். மஞ்சுவின் முகம் அவனைக் கண்டதும் மலர்ந்தது. ஐந்து நிமிடம் கழித்து குறிப்பு நோட்டுடன் அவன் அறைக்குள் நுழைந்தாள்.

“குட்மார்னிங் சார்.”

“வெரி குட்மார்னிங்” நியூஸ் பேப்பரிலிருந்து தலை நிமிர்ந்த அசோக் மறு வினாடி “வாவ்...” என்றான் விழி விரித்து.

“அசத்தறீங்க! உலக அழகியெல்லாம் உங்ககிட்ட பிச்சை வாங்கணுங்க. சும்மா சொல்லக் கூடாது. தூள்...”

“கடவுளே!” மஞ்சு சிரித்தாள்.

“ஓகே வேணாம். நா பொய் சொல்றேன்னுவீங்க. நாம வேற சப்ஜெக்டுக்கு போயிடுவோம். எனக்கு பர்சேஸ் பைல் கொண்டு வாங்க. நாம கொஞ்சம் டிஸ்கஸ் பண்ணனும்.”

மஞ்சு அலமாரி திறந்து பர்சேஸ் பைல் எடுத்துக் கொண்டு போனாள்.

“உட்காருங்க. நா சொல்ற விவரத்தை எல்லாம் உன்னிப்பா நோட் பண்ணிக்கிட்டு கம்ப்யூட்டர்ல போட்டுக் கொண்டாங்க.”

அசோக் பர்சேஸ் சம்பந்தப்பட்ட பல விவரங்களை வரிசையாக சொல்ல மஞ்சு குறிப்பெடுத்துக் கொண்டாள் நடுநடுவே தன் யோசனைகளையும் அவள் சொன்னபோது அசோக் வியந்து அவளை பாராட்டினான். ஒரு முக்கியமான யோசனையை அவள் கூறியபோது மிகவும் மகிழ்ந்து சட்டென்று அவள் கை பற்றி குலுக்கினான். மஞ்சு திகைத்துப் போனாள். ஒரு ஆணின் கை இத்தனை மிருது வாய் கூட. இருக்குமா என்று வியந்தாள். அவன் அப்படி கை குலுக்கு பாராட்டியது பிடித்திருந்தது அவளுக்கு... ஆயுள் முழுக்க அந்த கையோடு தன் கரம் பிணைந்திருக்காதா என்ற ஏக்கம் வந்தது.

அன்று முழுக்க அவன் கைகுலுக்கியதை பற்றியே நினைத்துக் கொண்டிருந்தாள். அடிக்கடி தன் உள்ளங்கையை விரித்து பார்த்துக் கொண்டாள். கைகுலுக்கிய காட்சியை மீண்டும் மீண்டும் மனக்கண்ணில் ஓட விட்டுப் பார்த்தாள்.

"மஞ்சு உங்களுக்கு போன்" அசோக்கின் குரல் இண்டர்காமில் ஒலித்தபோது மணி பதினொன்று.

மஞ்சு அவன் அறைக்கு வந்து போனை எடுத்தாள்.

"யாரு?"

"மஞ்சு நா அம்மா பேசறேம்மா."

"என்ன வேணும்?"

"காலேலயே சாப்டாம போனயே. சாப்பாடு கொடுத்தனுப்பட்டா. நம்ம கீழ் வீட்டு கூடைக்காரம்மா வந்திருக்காங்க. அவங்ககிட்ட குடுத்தனுப்பிடறேனே."

"வேணாம். நா கேண்டீன்ல ஏதாவது வாங்கிக்கறேன்."

மஞ்சு போனை வைத்தாள்.

"சாரி! வழக்கமா எனக்கு இந்த ரூம்லதான் போன் வரும். இனிமே இங்க பண்ண வேணாம்னு வீட்ல சொல்லிடறேன்."

"நோ பிராப்ளம் மஞ்சு. அது சரி என்ன சாப்பாடு கொண்டு வரலையா?"

"ஆமா காலேலயே சாப்பிடாம வந்துட்டேன். அதான் அம்மா போன் பண்றாங்க. சாப்பாடு கொடுத்தனுப்ப வான்னு."

"காலேலயே சாப்பிடலையா? மைகாட் எப்டி பட்னி இருக்கீங்க வெயிட் மஞ்சு. எனக்கு இப்போ வீட்லேர்ந்து கேரியர் வரும். என்னோட உட்கார்ந்து நீங்க சாப்பிடறீங்க."

"அய்யோ வேணாம் சார்."

“பேசக் கூடாது” அசோக் உதட்டில் விரல் வைத்து அடக்கினான். சரியாக ஒரு மணிக்கு அவளை அழைத்தான்.

“உட்காருங்க” என்று சாப்பாட்டு மேஜையை காட்டினான். மஞ்சு கூச்சத்தோடு அமர்ந்தாள்.

“கூச்சப்படாம சாப்டுங்க” அசோக் தானே பரி மாறினான்.

“போதும்... போதும்.”

“நல்லா சாப்டுங்க. காலேலயே சாப்டல இல்ல?”

தன் தட்டிலும் சாதமும் குழம்பும் விட்டுக் கொண்டு அவள் எதிரில் அமர்ந்தான். மஞ்சு தலைகுனிந்தபடி சாப்பிட்டான்.

“என்ன மஞ்சு இவ்ளோ வெக்கப்படறீங்க. ப்ரீயா சாப்பிடுங்க. எங்க வீட்டு சமையல் நல்லாகவே இருக்கும்.”

மஞ்சு புன்னகையோடு அவனை பார்த்தாள்.

“உங்களுக்கு சமைக்கத் தெரியுமா?”

“சுமாரா.”

“உருண்டைக் குழம்பு செய்யத் தெரியுமா?”

மஞ்சு விழித்தாள்.

“எனக்கு ரொம்ப பிடிச்ச ஐயிட்டம்,”

“தெ... தெரியுமே.”

“இஸ்இட். அப்ப ஒருநாள் உங்க கையால செய்து கொண்டு வரீங்க.”

“கண்டிப்பா!” மஞ்சு உருண்டைக் குழம்பு என்றால் என்னவென்று யோசித்தாள்.

“அந்த ஊறுகா கொஞ்சம் போடுங்க.” மஞ்சு மெல்ல மெல்ல அவனுக்கு தன் கையால் பரிமாறினாள்.

“என்ன சொல்லுங்க. இப்டி ஒரு தேவதை பரிமாறினா யாருக்குதான் பசி எடுக்காது? உங்களை கட்டிக்கப் போறவன் கொடுத்து வெச்சவன் மஞ்சு.”

“ஏன்... உங்களைக் கட்டிக்கப் போறவ கூடதான் கொடுத்து வெச்சவ.”

“அப்டியா சொல்றீங்க? நிஜமாவா?”

“நிஜம்மாதான்.”

அது சரி லவ் மேரேஜைப் பத்தி நீங்க என்ன நினைக்கறீங்க?

“தெரியாது. எதுவும் நினைக்கல.”

“அனுபவமில்லையா?”

“அப்டித்தான்.”

“சரி உங்களை ஒருத்தன் நேசிக்கறதா வெச்சுக்கோங்க அக்ஸெப்ட் பண்ணுவீங்களா? அறைவீங்களா?”

“அது லவ் பண்றவன் யாருங்கறதை பொறுத்தது.”

“என்னைப் போல ஒருத்தன்னு வெச்சுக்கங்க. சரின்னுவீங்களா? சரிதான் போடான்னுவீங்களா?”

மஞ்சு ஒரு கணம் தடுமாறினாள்.

“அது... அது...”

“ஓகே மஞ்சு நா ஸ்ட்ரெய்ட்டாவே கேக்கறேன். எனக்கு உங்களை ரொம்ப பிடிச்சிருக்கு. என் காதலை ஏத்துப்பீங்களா மறுத்துடுவீங்களா?”

மஞ்சு நம்ப முடியாமல் அவனை பார்த்தாள். இவனா... அவளைக் காதலிக்கிறானா? அவ்வளவு அதிர்ஷ்டசாலியா அவள். திகைப்பிலேயே வார்த்தைகள் எதுவும் வரவில்லை. சிலையாக நின்றிருந்தாள்.

“சரி மஞ்சு நீங்க வாயால எதுவும் சொல்ல வேணாம். சம்மதம்னா உங்க கையால உருண்டை குழம்பு செய்து கொண்டு வாங்க. போதும். இல்லாட்டி சாரின்னு ஒரு வார்த்தை எழுதி என் டேபிள்ல வெச்சுருங்க. அப்புறம் தொந்தரவு செய்ய மாட்டேன்.”

மஞ்சு மனசுக்குள் லேசாகிப் பறந்தாள். எப்பேர்ப்பட்ட அதிர்ஷ்டக்காரி அவள். மறுநாள் உருண்டைக் குழம் போடு வரத் தீர்மானித்தாள். அவனிடம் எதுவும் பேசாமல் வெளியேறினாள்.

## 9

“அறிவிருக்கா உனக்கு?” ஷண்முகம் இந்த அளவுக்கு கோபித்து யாரும் பார்த்ததில்லை.

“திடுதிடுப்புன்னு வரச் சொல்றதாம். அப்புறமா உண்மையை சொல்றதாம். உம் பொண்ணு என்ன படிக்காத முண்டம்னு நினைச்சயாக்கும்? இல்ல சின்னக் குழந்தையா நீ சொன்னதும் சரின்னு சொல்ல?”

“அதில்லைங்க.”

“எதில்லை? த பார் பெண் பார்க்க வரப் போறாங்கன்னு அவகிட்ட சொல்ல கூச்சமார்ந்துதேன்னுதான் உன்னை சொல்ல சொன்னேன். பயந்துக்கிட்டு இல்ல. இன்னிக்கு வந்து ஒழுங்கா அவகிட்ட சொல்லிடு. இல்லாட்டி மதுவை விட்டு சொல்லச் சொல்லிடறேன். அவ யாரு என்னன்னு கேட்ட பிறகு விவரம் எல்லாம் நா சொல்றேன். புரிஞ்சுதா?”

அம்மா தலையாட்டினாள்.

“ஆமா... என்ன இன்னும் அவளைக் காணும் மணி எட்டய்டுச்சு?”

“ஓவர்டைம் பண்றாளாம். தினமும் எட்டு மணியாகும்னா.”

“ஏன் சம்பாத்யம் பத்தலையாக்கும்? எதுக்குஓவர்டைம்? காலாகாலத்துல வீட்டுக்கு வரதை விட்டுட்டு?”

“தெரியாமதான் கேக்கறேன். இதை ஏன் அவகிட்ட நேர்லயே கேக்கக் கூடாது? அப்பாவுக்கும் பொண்ணுக்கும் நடுல என்ன மத்தளமா?”

“அவ முகம் கொடுத்து பேசினாதானடி ஏதாவது கேட்க? வரா, ரூமுக்குள்ள பூந்துக்குறா. வெளிய வந்து பத்து நிமிஷம் உக்காந்தாதானே?”

“அவ வராட்டி என்ன, நீங்க உள்ள போய் கேக்கறது.”

“பத்து ரூபா சம்பாரிக்கறதுக்குள்ள அவளுக்கு மனுஷங்க வேண்டாமப் போயிட்டாங்க. திமிராய்டுச்சு. அவகிட்ட போய் என் சுயமரியாதையை இழக்க சொல்றயா?”

“அப்போ எக்கேடும் கெட்டு போகட்டும்னு விட்ருங்களேன்.”

“அது சரி அப்டி விட்டுட்டா நாளைக்கு உலகம் நம்பளை இல்ல கேள்வி கேட்கும்.”

“அக்கா வராம்மா” பால்கனியிலிருந்து மது உள்ளே வந்து சொன்னாள்.

“ஏதோ கார்ல வந்து இறங்கறா.”

அம்மாவும் அப்பாவும் பேசுவதை நிறுத்தினார்கள். மஞ்சு யாரிடமும் பேசவில்லை வழக்கம்போல் அறைக்குள் புகுந்து கொண்டாள். அலுப்பு போக குளித்து நைட்டியணிந்து வெளியில் வந்தாள்.

“சாப்ட வரயா மஞ்சு.”

சாப்பிடும்போது மஞ்சு மெதுவாக கேட்டாள். “ஏம்மா உனக்கு இந்த உருண்டைக் குழம்பு செய்யத் தெரியுமா?”

“தெரியுமே உனக்கு வேணுமா? நாளைக்கு செய்யவா?”

“நீ செய்ய வேணாம் சொல்லிக் குடு. நா செய்யறேன் ஆபீஸ்ல ஒரு சவால் விட்ருக்கேன். நானே செய்து எடுத்துக் கிட்டு வரேன்னு.”

“அதுக்கென்ன காலேல கத்துத் தரேன். நீயேதான் கையேன். சமையலும் மெது மெதுவாக கத்துக்க வேண்டியது தானே. நாளைக்கே கல்யாணமாகிப் போனாலும் முழிக்க வேணாம் பார்.”

“சமையலா நானா?” மஞ்சு சிரித்தாள். எப்பேர்ப்பட்டமாளிகையின் மருமகளா நான் செல்லப் போகிறேன். அங்கே சமையலுக்கே பத்து பேர் இருக்கிறார்கள் என்று உனக்குத் தெரியுமா?

“என்ன மஞ்சு சிரிக்கற?”

“ஒண்ணுல்ல ஏம்மா பொம்பளைன்னா சமைக்கப் பிறந்தவளா! எவ்ளோ படிச்சாலும் சம்பாதிச்சாலும் கூட பொம்பளைதான் சமைக்கணுமா?”

“அப்டி சொல்லலை மஞ்சு.”

“சமைக்கக் கத்துக்கடான்னு எந்த ஆம்பளைகிட்டயாவது சொல்றீங்களா?”

“நீ எவ்ளோ பெமினிஸம் பேசினாலும் குழந்தையை நாமதாண்டி சுமந்தாகணும்” மது நடுவில் புகுந்து பேசினாள்.

“அது பிஸிகல் அரேன்ஜ்மெண்ட் மது. அதனால நாம ஆப்போஸிட் செக்சுக்கு அடிமையா?”

“அடிமையில்ல அதுக்காக தொட்டதுக்கெல்லாம் பெமினிஸம் பேசினா வாழ்க்கை வறண்டு போயிடும். விட்டுக் கொடுத்து வாழறதுதான் அன்பை வளர்க்கும்.”

“ஆமா என்ன இவ்ளோ அட்வைஸ்? என்னமோ நாளைக்கு எனக்கு கல்யாணம் போல.”

“ஏன் மஞ்சு உனக்கு கல்யாண வயசாகலையா? ஆயிடுச்சுன்னு நினைச்சில்ல நாங்க உனக்ரன் பாத்துட்ருக்கோம்.”

மஞ்சு வெடுக்கென்று நிமிர்ந்தாள். அம்மாவை முறைத்துப் பார்த்தாள்.

“வரன் பார்க்கறீங்களா எனக்கா?”

“ஏம்மா? அது எங்க கடமைதானே?”

“நா கேட்டேனா உங்ககிட்ட கல்யாணம் பண்ணி வைங்கன்னு?”

“பசங்க கேட்டுதான் எல்லாரும் அவங்களுக்கு கல்யாணம் பண்ணி வைக்கறாங்களா மஞ்சு?”

“என் விஷயத்துல எனக்கு எப்பொ தேவையோ அப்பொ நானே கேட்டுக்கறேன் போறுமா? அதுவரை இந்த மாதிரி வரன் பார்க்கற வேலையெல்லாம் வேணாம் புரிஞ்சுதா? என்னைக் கேக்காம எவனையாவது பெண் பார்க்கன்னு வீட்டுக்கு வரச் சொன்னீங்க நடக்கறாதே வேற” மஞ்சு வேகமாய் எழுந்து கை கழுவப் போனாள். அவள் பேசியதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ஷண்முகத்திற்கு அதற்கு மேல் பொறுமையில்லை. கைகழுவி விட்டு தன் அறைக்குள் நுழையப் போன மஞ்சுவை பார்த்தார்.

“ஒரு நிமிஷம் மஞ்சு.”

மஞ்சு அப்படியே நின்று திரும்பினாள்.

## 10

“நீ பேசறதெல்லாம் நல்லார்க்கா மஞ்சு?” அப்பா நிதானமாக கேட்டார்.

ரொம்ப நாள் கழித்து அப்பா நேருக்கு நேர் தன்னோடு பேசியதால் ஒரு நிமிடம் மஞ்சு பேசவே தயங்கினாள். அம்மாவிடம் பேசியது போல் எடுத்தெறிந்து அப்பாவிடம் பேச முடியாமல் தடுமாறினாள்.

“உங்களை நா படிக்க வெச்சுது உலகத்தை நீங்க தெரிஞ்சுக்கணும், அறிவை வளர்த்துக்கணும், யாரையும் சார்ந்து இருக்கக் கூடாது. எந்த சூழ்நிலையையும் நீங்க சமாளிக்கத் தெரிஞ்சுக்கணும்னுதான் மஞ்சு. இப்டி எடுத்தெறிஞ்சு பேச இல்ல.”

“என் கல்யாணத்தை முடிவு செய்யற உரிமை எனக்கில்லையாப்பா?”

‘‘தாராளமா. உனக்கு பிடிச்சிருக்குன்னு நீ சொல்றவனைத்தான் கட்டி வெப்போம். நாங்க பார்க்கற பையனை பிடிச்சிருக்கு பிடிக்கலைன்னு சொல்ற உரிமை உனக்கிருக்கு.’’

‘‘எனக்கு இப்பொ கல்யாணம் வேண்டாம்ப்பா.’’

‘‘உனக்காக நா ஒரு அருமையான பையனை பார்த்திருக்கேன் மஞ்சு, ரொம்ப நல்ல மனுஷங்க. அடுத்த வாரம் அவங்க இங்க வருவாங்க. நீ பொம்மை மாதிரி நிக்க வேணாம். கீழே விழுந்து கும்பிட வேண்டாம். சாதாரணமா உட்கார்ந்து கேஷீவலா பேசிப்பார். அதுக்கப்புறம் கல்யாணம் வேணாமா, வேணுமான்னு சொல்லு போதும்.’’

மஞ்சு ஏதோ சொல்ல வாயெடுக்க, ‘‘போதும் மஞ்சு இதுக்கு மேல எதுவும் பேச வேணாம். பெண்கள் சுதந்திரமா வானத்துல பறக்க வேண்டியதுதான். அதே நேரம் கயிறு எங்க கைலதான் மஞ்சு இருக்கணும். அதான் உங்களுக்கு நல்லது. கட்டறுத்துக்கிட்டு போனா பிஸிகல் அரேன்ஜ்மென்ட்டுன்னு கொஞ்சம் முந்தி நீ சொன்ன உங்க உடம்புக்குத்தான் ஆபத்து. உலகத்துல நிறைய முள்வேலிகளும் தந்திக் கம்பிகளும் உண்டு. கிழிஞ்சு காணாம போயிடுவ ஜாக்ரதை.’’

அப்பா மிக கண்டிப்பாக கூற, மஞ்சு செயலிழந்து நின்றாள்.

∴ ∴ ∴

இரவு முழுக்க மஞ்சு தூங்கவில்லை. அழகான, அந்தஸ்தான ஒரு வாழ்க்கை அவளுக்காக காத்திருக்கும்போது அப்பாவுக்கு பயந்து எதற்கு அதை இழக்க வேண்டும். இது வரை அவள் யாரையும் காதலித்ததில்லை. ஆனால் முதன் முதலில் ஒருவனால் காதலிக்கப்படுகிறாள். அதுவும் சாதா ரணமானவ்னால் அல்ல. ஒரு ராஜகுமாரனால். தலை கீழாக நின்றாலும் அப்பாவால் இவ்வளவு அழகும் அந்தஸ்தும் நிறைந்தவனை மாப்பிள்ளையாக கொண்டு வந்த நிறுத்த முடியாது. இவர் அந்தஸ்துக்கு சாதாரண குடும்பத்தோடுதான் சம்பந்தம் பேசியிருப்பார். மிஞ்சிப் போனால் அவனுக்கு இவளுக்கு நிகரான சம்பளமோ ஒன்றிரண்டு நூறுகள் அதிகமாகவோ இருக்கலாம் அவ்வளவு தான்.

நடுத்தர வர்க்கத்தில் பிறந்து விட்டதால் அதே வாழ்க்கைதான் தொடர வேண்டுமா என்ன? பணம் பணத்தோடு சேரவேண்டும். வறுமை வறுமையோடு சேர வேண்டும்.

நடுத்தரம் நடுத்தரத்தோடு இணைய வேண்டும் என்பது என்ன சித்தாந்தம்? இந்த சித்தாந்தத்தை உடைப் பதற்காகத் தான் இறைவன் காதல் என்ற அற்புதமான அஸ்தரத்தையும் படைத்திருக்கிறானோ. அழகும் அந்தஸ்தும் பணமும் தானாக இறங்கி வந்து இவளிடம் ஐ லவ் யூ என்கிறது! இதை வேண்டாம் என்று சொல்வது முட்டாள் தனமில்லையா? அவளுக்கு நல்ல வாழ்க்கை அமைய வேண்டும் என்பதுதான் அப்பாவின் நோக்கம் என்றால் அவரைவிட இவள் தேடிக்கொள்ளும் வாழ்க்கை நல்ல வாழ்க்கையெனில் அவரை மீறுவதில் என்ன தவறு? நல்ல வாழ்க்கையைத்தான் நான் தேடிக் கொண்டிருக்கிறேன் மனம் மாறுகிறார். அவர் விருப்பப்படியே வரன் வரட்டும். தாராளமாக அவளைப் பார்க்கட்டும். அதன் பின்னர் இந்த பையனை பிடிக்கவில்லையென்று சொல்லி விட்டால் போகிறது. எதற்கு பயப்பட வேண்டும். எத்தனை பெண்களை பிடிக்கவில்லையென்று ஆண்கள் சொல்லியிருக்கிறார்கள். பிடிக்கவில்லையென்று சொல்லும் உரிமை அவர்களுக்கு மட்டும்தானா? மஞ்சு ஒரு தீர்மானத்திற்கு வந்தாள். அதன் பிறகு நிம்மதியாக தூங்கினாள்.

காலையில் எழுந்து சகஜமாக கிச்சனுக்கு வந்தாள். அம்மா சொல்லிக் கொடுத்தபடி உருண்டை குழம்பு செய்து டேஸ்ட் பார்த்தாள். நன்றாகவே வந்திருந்தது. டிபன் பாக்ஸ் ஒன்றில் கொஞ்சம் குழம்பை எடுத்து மூடி வைத்த பிறகு குளிக்கப் போனாள். அம்மா வியந்தாள். நேற்று இரவு அப்பா பேசியதற்கு அவள் விடிந்ததும் பத்ரகாளியாய் சண்டை போட்டுக் கொண்டு சாப்பிடாமல் போவாள் என்று தான் நினைத்தாள் அவள். பரவாயில்லை அப்பா கத்தினதும் பெண் அடங்கித்தான் விட்டாள். உள்ளுக்குள் புருஷனை மெச்சிக் கொண்டாள் அவள். சரியான நேரத்திற்கு லகானை இழுத்து பிடித்து விட்டாரே என்று.

தன்னை ஒரு தேவதையாக மாற்றிக் கொண்டு உருண்டை குழம்பை பத்திரமாக கைப்பையில் வைத்து எடுத்துக் கொண்டு புறப்பட்டாள் மஞ்சு.

சரியாக சாப்பாட்டு நேரத்திற்குதான் வந்தான் அசோக். வந்ததும் வராததுமாக மிக சீரியசாக கோப்புகளில் மூழ்கி போனான். தானாக அவனிடம் போய் எதுவும் பேச இயலாமல் தவித்தாள் மஞ்சு. இரண்டு மணிக்கு மேல்தான் சோம்பல் முறித்தபடி கோப்பிலிருந்து தலை நிமிர்ந்தான். எழுந்து சென்று கை கழுவி விட்டு சாப்பாட்டு டேபிளில் அமர்ந்தான். வீட்டிலிருந்து வந்த கேரியரைப் பிரித்தான். உருண்டைக் குழம்பு பற்றி அவனே கேட்பான். என எதிர்பார்த்த மஞ்சு, அவன் எதுவும் கேட்காமல்

வீட்டுச் சாப்பாட்டை சாப்பிட ஆரம்பித்த போது என்ன செய்வதென புரியாமல் தயங்கினாள். மறந்து விட்டானா? அதெப்படி? மறக்கக்கூடிய ஒன்றா காதல்? குழம்போடு அவளே சென்றால் மகிழ்வானா? மதிப்பானா அல்லது இளக்காலமாகப் பார்ப்பானா? ஏன்? அவன்தானே கேட்டது? கொடுத்தால் என்ன தவறு?

மஞ்சு வேகமாக சென்று தன் கைப்பை திறந்து குழம்பு பாக்ஸோடுவந்து அவன் பின்னால் நின்று லேசாக செருமினாள்.

“யெஸ் மஞ்சு... என்ன வேணும்?”

மஞ்சு பாக்ஸை அவன் முன் வைத்தாள்.

“என்னது?”

“உருண்டைக் குழம்பு.”

“நா உருண்டைக் குழம்பு கேட்டா ஆயிரம் பேர் கொண்டு வந்து இப்டி வெச்சுட்டு போவாங்க தெரியுமா?”

மஞ்சு திகைப்போடு பார்த்தாள். மளுக்கென்று அவள் கண்கள் நிறைந்தது. பத்தோடு நீயும் பதினொன்று என்கிறானா?

“உண்மையா காதலிக்கறவ இப்டி வெச்சுட்டு போக மாட்டா. தன் கையாலயே பறிமாறிஇ ஊட்டி விடுவா.”

“யப்பா... நா பயந்தே போய்ட்டேன்” மஞ்சு கண்ணீரோடு சிரித்தாள்.

“அதுக்குள்ள கண்ல தண்ணியப் பாரு. பொம்பளைங்களே இப்டித்தாம்பா. ரெடிமேட் டியர்ஸ்.”

மஞ்சு பாக்ஸ் திறந்து அவனுக்கு குழம்பு ஊற்றினாள்.

“சாப்டுங்க.”

“என் கையாலயா? உன் கையாலயா?”

“ப்ஸீ நா மாட்டேன். வெக்கமார்க்கு.”

“அட கம்ப்யூட்டர் வெட்கப்படுதுப்பா.”

“இது பொம்பளை கம்ப்யூட்டர்.”

“அப்டியா செக் பண்ணிக்கவா?” அசோக் அவள் கையைப் பிடித்து அருகில் இழுக்க, அவன் கைபட்டதும் உடம்பெல்லாம் ஏதோ இன்பம் பரவுவதை உணர்ந்தாள் மஞ்சு. குப்பென்று முகம் சிவந்தது.

“விடுங்க ப்ளீஸ்... யாராவது வரப் போறாங்க.”

“அப்பாவே வந்தாலும் பயமில்ல. மீட் மை லவ்னு அறிமுகப்படுத்துவேன்.”

“சரி இப்போ உட்கார்ந்து சாப்டுங்க.”

“ஓகேமா. சாதாரணமா சாப்பிடறவங்க தான் சர்வர்க்கு டிப்ஸ் தருவாங்க. பட் இங்க நீ எனக்கு டிப்ஸ் தரணும்.”

“எதுக்கு?”

“தைரியமா உன் உருண்டை குழம்பை சாப்பிடப் போறேனே அதுக்கு...”

“ம்ஹூம்! என்ன டிப்ஸ்...”

“அது சாப்ட்டு முடிச்சுட்டு சொல்லுவேன். டேஸ்ட்டை பொருத்துதான் டிப்ஸ் என்னன்னு டிசைட் பண்ணுவேன்.”

“சரி சாப்டுங்க.”

அசோக் சிரித்தபடி சாப்பிட ஆரம்பித்தான். அவன் முகத்திலிருந்து எதுவும் புரியவில்லை. எதுவும் சொல்லாமல் சாப்பிட்டு முடித்து எழுந்தான். கை கழுவிவிட்டு வந்தவனுக்கு டவல் கொடுத்தாள்.

“எப்டி இருந்துச்சு?”

“வெரி பேட் டேஸ்ட்! கஷ்டப்பட்டு முழுங்கிவெச்சேன்.”

“பொய்...”

“நிஜமா! என்ன டிப்ஸ் தெரியுமா. ரொம்ப கஷ்டப்பட்டு முழுங்கியிருக்கேன். ஸோ சாப்ட்ட வாய்க்கு ஸ்வீட்டா ஒரு கஸ் கொடுக்கணும். அதான் டிப்ஸ்.”

“ச்சீய்... நா மாட்டேன்.”

“சரி போ. டிப்ஸ் தராட்டி இனிமே உன் கையால கிரீன் வாட்டர்கூட குடிக்க மாட்டேன். வேற பி.ஏ. போட்டுக்கு வேன்” மஞ்சு அவனை முறைக்க அவன் சிரித்தாள்.

மஞ்சு மெல்ல அவன் அருகில் வந்தாள். இது தவறா, சரியா என்று யோசிக்கும் திறனை சுத்தமாய் இழந்தாள். அவன் காதலுக்குரியவளாவதே லட்சியம் என்றானது. அதற்காக எதையும் செய்யும் மனோநிலையோடு அவனை அணைத்து அவன் இதழோடு இதழ் பதித்தாள்.

“வாவ்... தேவாம்ருதம்னா இதானா?”

மஞ்சு முகம் சிவந்தாள். அசோக் அவளை இன்னும் இறுக்கியணைத்தான்.

“குழம்பு நல்லால்லேன்னு பொய் சொன்னேன். தெரியுமா? சூப்பர் டேஸ்ட். அதைச் செய்த ஆளுக்கு இப்போ நா டிப்ஸ் தரப் போறேன்.”

அசோக் அவள் முகம் முழுக்க இதழ் பதித்தபோது அவள் ரத்தம் சூடேறியது. ‘விடுங்க ப்ளீஸ்’ என்று முனகினாளே தவிர விடுபட முயலவில்லை.

## 11

நாலு மணிக்கு அவர்கள் வந்தார்கள். யசோதாவும் ஷண்முகமும் முகம் மலர வரவேற்றார்கள். பையன் கம்பீரமாக இருந்தான். பெயருக்கேற்றாற்போல் சக்கரவர்த்தியாகத்தான் இருந்தான். நல்ல உயரம், மாநிறம். கண்ணியம் தெரிந்த கண்கள். மஞ்சு அலட்சியமாகத்தான் அவர்கள் எதிரில் வந்து அமர்ந்தாள். ஆனால் பையனை பார்த்ததும் அவள் முகம் வியந்தது.

அவன் பேச்சும் கண்ணியமான பார்வையும் சிரிப்பும் அவளை ஒரு விநாடி குடைந்தது. காதல் என்ற வட்டத்துக்குள் சிக்கியிராவிடில் இந்த சக்கரவர்த்தியை மணக்க அவள் கண்டிப்பாக சம்மதித்திருப்பாள் என்று தோன்றியது. தான் செய்வது சரியா, தவறா என்று புரியவில்லை. முத்தம் வரை வந்துவிட்ட காதல் சத்தமின்றி மடிந்து விடுமா என்ன? எவ்வளவு பெரிய மாளிகை! எவ்வளவு பெரிய பணக்காரன். அவள் அதிர்ஷ்டம் அவன் மனம் அவளுக்கு அடிமையாகி யிருக்கிறது.

அந்த மாளிகைக்கு ராணியாக முடிசூட்டிக் கொள்ளப் போகும் பாக்கியம் அவளுக்குக் கிடைத்திருக்கும்போது அதை இழக்க அவள் முட்டாளா? பாவம் இந்த சக்கரவர்த்தி. அவள் அழகென்ன, சாதாரணமானதா? அதை அடைய அதிர்ஷ்டம் செய்திருக்க வேண்டாமா? அந்த அதிர்ஷ்டக்காரன் வேறொருவன் என்று தெரியாமல் இங்கே பெண் பார்க்க வந்திருக்கிறான். இன்னும் சற்று நேரத்தில் ஏமாறப் போவது தெரியாமல் சிரித்து பேசிக் கொண்டிருக்கிறான்.

அம்மா உள்ளேபோய் அவர்களுக்கு இனிப்பும் காப்பியும் கொண்டு வந்தாள்.

“என்னடா பெண் எப்படி?”

சக்கரவர்த்தி அம்மாவை பார்த்து விரித்தான்.

“பொண்ணுக்கு சம்மதம்னா தேதி குறிச்சுடுங்க” என்றான்.

மஞ்சு எழுந்து உள்ளே போனாள். அம்மா அவ பின்னாடியே போனாள்.

“நீ என்ன மஞ்சு சொல்ற? பையன் சொன்னதைக் கேட்டயில்ல.”

“எனக்கு புடிக்கலம்மா.”

“என்னடி இப்படி சொல்ற? பையன் சொன்னதைக் கேட்டும் கூடவா?”

“அது சரி அந்தாள் பிடிச்சிருக்கன்னு சொன்னா நானும் பதிலுக்கு சொல்லிடணுமாக்கும்.”

“புத்தியில்லாதவங்கதான் இப்டி எடுத்தோம், கவுத் தோம்னு பேசுவாங்க மஞ்சு.”

“அப்போ புத்தியிருக்கிற ஒரு பொண்ணைப் பார்த்து கட்டிக்கச் சொல்லு அந்தாளை.”

“ஏண்டி பிடிக்கல? என்ன குறை அந்த பையன்கிட்ட?”

“த பாரும்மா படுத்தாத! குறை எதுவும் இல்லதான். அதுக்காக பிடிச்சுடணும்னு இல்ல. என்னவோ என் மனசு ஓகே சொல்ல மாட்டேங்குது. இதுக்கு மேல் எதுவும் கேக்காத.”

“இதை நா எப்டிடி போய் சொல்வேன். எவ்ளோ பெருந்தமையோட எதுவும் வேணாம்னு வந்திருக்காங்க. வரதட்சணை, சீர் சினத்தின்னு எதுவும் கேக்கலடி அவங்க. கொஞ்சம் யோசிச்சு பதில் சொல்லு.”

“அம்மா அவங்க நல்லவங்கதாம்மா. சந்தேகமேயில்ல. தயவு செஞ்சு என்னை விட்ரச் சொல்லு. வேற ஒரு நல்ல பொண்ணைப் பார்த்துக்கச் சொல்லு.”

“அப்டின்னா நீ கெட்டு சீரழிஞ்சவளா?” அம்மா மெதுவாகத்தான் கேட்டாள். என்றாலும் மஞ்சுவுக்கு தூக்கிவாரிப் போட்டது.

“என்ன சொல்றா மஞ்சு” அப்பாவும் உள்ளே வர. அம்மா அவளை முறைத்து விட்டு சொன்னாள்.

“இவளுக்கு பிடிக்கலையாம்.”

“ஏன் மஞ்சு?”

“இதை விட ஒரு பெரிய இடம் எனக்கு கிடைக்கும்னு நம்பறேம்ப்பா.”

அப்பா அவளை கூர்ந்து பார்த்தார்.

“இது நம்பிக்கையா பேராசையா மகளே?”

“கூடிய சீக்கிரம் நீங்களே புரிஞ்சுக்குவீங்க.”

“நாளைக்கு கிடைக்கப் போற விருந்தை நினைச்சுக்கிட்டு இன்னிக்கு கிடைக்கற கஞ்சியை வேணாம்னு சொல்றது அசட்டுத்தனம் மஞ்சு.”

“சார்.”

அறை வாசலில் குரல் கேட்க ஷண்முகம் திரும்பினார். சக்கரவர்த்தி நின்றிருந்தான்.

“உங்க பெண்ணை வற்புறுத்த வேண்டாம். அவங்க யோசிக்கட்டும். ஒரு மாசம் கூட யோசிக்கட்டும். நா காத்திருக்கேன். ஏன்னா நா பார்க்கற முதல் பெண் இவங்க தான். முதல் பெண்ணையே கட்டிக்கணுங்கறது என்னோட ஆசை. நாங்க புறப்படறோம்.”

அவர்கள் புறப்பட்டார்கள். அப்பா தர்மசங்கடத்தோடு அவர்களை வழியனுப்ப, அம்மா அவளை எரிச்சலோடு பார்த்தாள்.

“பச்சப்புள்ளையார்ந்தா பளார்னு நாலு அறை விட்டு புத்தி சொல்லலாம். படிச்ச பொண்ணுன்னு நினைச்சேன். படிப்புக்கும் அறிவுக்கும் ஒரு சம்பந்தமுமில்லைன்னு நிரூபிக்கற” பொருமிக் கொண்டே போனாள்.

அன்று முழுக்க யாரும் அவளோடு பேசவில்லை. அனைவரும் கவலையில் ஆழ்ந்திருக்க மஞ்சு காதலில் ஆழ்ந்திருந்தாள். இதுவரை முகமற்றிருந்த அவள் கனவு நாயகனுக்கு முகம் கிடைத்து விட்டது. ஆனால் எல்லாமே நனவாகப் போகும்போது இனி கனவெதற்கு? மஞ்சு சிரித்துக் கொண்டாள்.

## 12

“இன்னிக்கு நாம வெளிய போய் சாப்டலாமா மஞ்சு?”

“எங்கே?”

“பார்க் ஷெராட்டன்.”

“யம்மாடி அவளோ பெரிய ஹோட்டலுக்கா. என் டிரஸ் நல்லால்லயே. சொல்லியிருந்தா கிராண்டா வந்திருப்பேன் இல்ல?”

“டிரஸ்தானே உன் பிராப்ளம்? வா போலாம்.”

கார் சாவியை சுழற்றிக் கொண்டே நடந்தான் அசோக். மஞ்சு பின்னால் செல்ல, ஆபீஸ் முழுக்க அவர்களை வேடிக்கை பார்த்தது.

கார் ஒரு பெரிய ரெடிமேட் ஷாப்பின் முன் நின்றது.

‘‘செலக்ட் பண்ணு’’ என்றான் அசோக்.

‘‘இப்பொ எதுக்கு... யாருக்கு?’’

‘‘உனக்குதான். டிரஸ் நல்லால்லன்னு சொன்னயே நல்லதா வாங்கிக்க.’’

‘‘அய்யோ வேணாம். வாங்க.’’

‘‘ப்ஸீ... நீ நகரு. நானே செலக்ட் பண்றேன் பாரு.’’

அசோக் நிறைய டிரஸ் பார்த்தான். இறுதியாக இரண்டாயிரம் ரூபாயில் ஒரு அழகான சுரிதார் வாங்கினான். மிகத் தரமான துணியில் கண்ணை உறுத்தாத நிறத்தில் நவீன யுத்தியில் டிஸைன் செய்யப்பட்டிருந்தது. கடையை ஒட்டி ஒரு பியூட்டி பார்லர் இருந்தது.

‘‘அங்கே போய் டிரஸ் மாத்திக்கிட்டு அப்படியே லைட்டா மேக்கப்பும் செய்துகிட்டு வா’’ என்றான்.

அரை மணி நேரத்தில் ஒரு அழகான இந்தி நடிகை போல வந்தவளை ஏற இறங்க பார்த்தான். ‘‘பார்க் ஷெராட்டன் ஸ்தம்பிச்சு நிக்கப் போவுது பார் இந்த ஸ்டன்னிங் பியூட்டி யாருன்னு. பட் நா ரொம்ப கர்வத்தோட கை கோர்த்துக்கிட்டு நடப்பேன். இந்த அழகுக்கு சொந்தக்காரன் நான்தான்னு. அவனவன் வெந்துடுவான் பாரேன்.’’

அவன் பேசப் பேச அவள் எங்கோ மிதந்தாள். ஒரு முறை அவனுடைய ஸ்பரிசம் ஏற்படுத்தியிருந்த கிறக்கம் அவள் மூளையை முழுக்க போதைக்குள்ளாயிருந்தது. அப்பா, அம்மா, மது, இந்த உலகம், தன் சுற்றம் சூழல் எல்லாவற்றையும் பற்றிய பிரக்ஞை மறைந்திருந்தது யாரைப் பற்றியும் பயமில்லை. மற்றவர் ஏதேனும் பேசுவார்கள் என்ற நினைப்பும் எழவில்லை. காதல், காதல் காதல் மட்டுமே அவள் மனதை நிறைத்திருந்தது. அது ஒன்றே இன்பமாயிருந்தது. நாள் முழுக்க அவனோடு இருப்பதையும் உலகை மறந்து அவனோடு ஊர் சுற்றவும் மட்டுமே விரும்பினாள்.

பார்க் ஷெராட்டன் போர்டிகோவில் நுழைந்து கம்பீரமாய் அவனுடைய டாட்டா எஸ்டேட் கார் நிற்க இருவரும் இறங்க காவலாளி சல்யூட் அடித்து வரவேற்றான். அசோக் அவள் கையோடு தன் கையை பிணைத்துக் கொண்டு நடந்தான். மெல்லிய வெளிச்சம் மட்டுமே படர்ந்திருந்த ரெஸ்ட்டாரண்ட்டினுள் நுழைந்தார்கள். ஓட்டலின்

அழகும் அலங்காரமும் பிரமாண்டமும் கண்டு பிரமித்துப் போனாள் மஞ்சு. அவளையும் அறியாது அந்த ஓட்டலில் சாப்பிடப் போவது பற்றி கர்வம் எழும்பியது. இனி அடிக்கடி அந்த ஓட்டலுக்கு அவர்கள் வருவார்கள்.

கையை பிணைத்துக் கொண்டு நடந்தவன் இப்போது அவள் இடுப்பை சுற்றி கை போட்டு அணைத்தபடி நடந்தான். மூலையில் இருட்டாயிருந்த டேபிள் நோக்கி நடந்தார்கள். இதுவரை அவள் சாப்பிட்டறியாத புதுப்புது சிற்றுண்டிகளுக்கு அவன் ஆர்டர் செய்தான்.

“அடுத்த வாரம் நான் ஆபீஸ் விஷயமா மும்பை போறேன் மஞ்சு. ஆஸ் எபி.ஏ. நீயும் என்னோட வர சரியா?”

“எவ்ளோ நாள்?”

“நாலஞ்சு நாள்தான்.”

மஞ்சு சிறிதும் தயங்கவில்லை. அவனை விட்டு பிரிந்திருக்க அவளால் இயலாது. எனவே, “வித் பிளஷர்” என்றாள்.

“சாப்ட்டுட்டு நாம நேரா பாப்பாலால் போறோம். உனக்கு ஒரு டைமண்ட் செட் வாங்கப் போறேன்.”

“என்ன?”

“என்ன திகைச்சுட்ட? என் தேவதைக்கு என்னோட சின்ன காணிக்கை” சொன்னபடி அவன் கைகள் அவள் மேனி முழுக்க சுதந்திரமாய் படர்ந்தது. அவன் ஸ்பரிஸம் படப்பட அவள் கிறங்கினாள். மயங்கினாள் தன்னை விட அதிர்ஷ்ட சாலியும் உண்டா என இறுமாந்தாள்.

∴ ∴ ∴

“நாலஞ்சு நாள் பம்பாய்ல தங்கறதா? என்னடி சொல்ற?”

“ஆபீஸ் வேலையா போறேம்மா.”

“கூட யார் வராங்க?”

“எங்க பாஸ்.”

“லேடீஸ் யாரும் வராங்களா?”

மஞ்சு அம்மாவை முறைத்தாள். “சுத்த பத்தாம் பசலிம்மா நீ. நிலாவுக்கே பெண்கள் தனியா போற காலமிது.”

“உங்க அப்பாகிட்ட சொல்லு.”

“ஏன் அவர் என்ன சொல்லிடுவார்.”

“வீட்டை விட்டு நீ வெளியூர் போய் நாலு நாள் தங்கறதை அவர் விரும்ப மாட்டார்.”

“அப்பொ வீட்டை விட்டு வெளிய அனுப்பி எங்களை படிக்க வெச்சிருக்கவே கூடாது. த பாரும்மா. யார் தடுத்தாலும் நா போவேன்.”

மஞ்சு தன் அறைக்குச் சென்று கதவை சார்த்திக் கொண்டாள் கைப்பை திறந்து வைர செட்டை வெளியில் எடுத்தாள். மெல்லிய தங்க செயினின் நடுவில் மட்டும் பூ போன்ற டிசைனில் பதிக்கப்பட்ட வைரங்கள். அதேபோல் தங்க தொங்கட்டானில் மின்னிய ஒன்றை வைரக்கல், மூன்று வைரம் பதிக்கப்பட்ட அழகிய மோதிரம் மஞ்சு அவற்றை அணிந்து கொண்டாள். அவள் கழுத்துக்கு மிக அழகாய் இருந்தது அந்த மெல்லிய நெக்லஸ். அப்படியும் இப்படியும் அவள் திரும்பியபோது விளக்கொளி பட்டு காதிலும் கழுத்திலும் பளீர் பளீரென மின்னியது. காதலின் முதல் காணிக்கையே கற்பனைக் கெட்டாத விலையில் கிடைத்திருக்கிறது. நினைக்க நினைக்க மனம் இனித்தது, நகையை கழட்டி எடுத்து பத்திரமாக பூட்டி வைத்தாள். அடுத்த வாரம் எப்போது வருமென்றிருந்தது.

“ஏன் மஞ்சு மும்பை போறயா?” சாப்பிடும்போது அப்பா கேட்க “ஆமாம்” என்றாள்.

“நா வேணா கூட வரவா?”

“தாராளமா கூட வாங்க ஆனா திரும்பி வந்ததுக்கு பிறகு இந்த வீட்ல நா தங்க மாட்டேன். ஹாஸ்டலுக்கு போய்டுவேன். சந்தேகப்படறவங்க கையால சாப்பிடறதை விட சாகலாம்.”

மஞ்சு தீர்மானமாக சொல்ல, அப்பா வாயடைத்து போனார்.

நாலு நாள் கழித்து புதன்கிழமை காலை பிளைட்டில் அசோக்கோடு புறப்பட்டாள். விமானம் பறக்க பறக்க அவளுக்கு சகலமும் மறந்தது. மனம் முழுக்க மகிழ்ச்சி. காதலனோடு தனித்திருக்கப் போகும் இனிமையான நாட்களை நினைத்து நினைத்து முகம் சிவந்தாள்.

தாஜ் ஓட்டலில் இருவருக்கும் சேர்த்து டபுள்ரூம் ரிஸர்வ் செய்து வைத்திருந்தான் அசோக்.

# 13

“எனக்கென்னமோ இந்த பெண்ணை நீங்க இப்டி விடறது சரியில்லன்னு படுது. என்னதான் படிச்சிருந்தாலும் நம்ம வீட்டு பெண்களை உடனே தனியா ஒரு ஆளோட அனுப்பிடறது நல்லாவா இருக்கு?” யசோதா புலம்பினாள்.

“நா என்னடி செய்யட்டும்? அவ என்ன சொன்னான்ன கேட்டல்ல? உள்ளூர்லேயே அவ ஹாஸ்டல்ல போய் தங்கறதை விட அவ இஷ்டப்படி நாலு நாள் ஆபீஸ் வேலையா போயிட்டு வரட்டும்னுதான் பேசாம இருந்துட்டேன்.”

“அது சரி... படிச்சுட்டாலும் பொம்பளை பொம்பளைதாங்க... ஆபத்து என்னிக்கும் பொம்பளைக்குதான். இவ நல்லபடியா திரும்பி வர வரைக்கும் எனக்கு பக்குபக்குன்னு இருக்கும்.”

“அதெல்லாம் பத்திரமா வந்துடுவா. உம் பொண்ணு லேசுப்பட்டவளா என்ன? ஊரை வித்துடற சாமர்த்தியம் உண்டு. ஏமாத்த நினைக்கறவன் கண்ணுல விரலை விட்டு ஆட்டிடுவா. தெரிஞ்சுக்க.”

“என்னமோ போங்க. அவ வந்ததும் எப்படியாவது பேசி அவ மனசை மாத்தி அந்த பிள்ளைக்கு கட்டி வெக்கப் பாருங்க. அப்பதான் எனக்கு நிம்மதியார்க்கும். தேடினாலும் இந்த மாதிரி ஒரு பையன் இனி கிடைக்க மாட்டான்.”

“அது உனக்கும் எனக்கும் தெரியுது. அவளுக்கில்ல தெரியணும்? பார்ப்போம். எல்லாத்துக்கும் பிராப்தம் இருக்கணும். இவ பிராப்தம் என்னன்னு பார்ப்போம்”

∴ ∴ ∴ ∴

ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வந்து சேர்ந்தாள் மஞ்சு. முகத்தில் புது மெருகும் பொலிவும் கூடியிருந்தது. மதுவுக்கு இரண்டு ரெடிமேட் டிரஸ்ஸும் அம்மாவுக்கு ஷால் ஒன்றும் வாங்கி வந்திருந்தாள்.

“போன வேலை நல்லபடியா முடிஞ்சுதாடி?” அம்மா கேட்டதும் ஒரு வினாடி முகம் மாறினாள். “ம்” என்றபடி குளிக்கப்போனாள்.

அம்மா அவளுக்கு சுடச்சுட டிபன் தயார் செய்தாள்.

“அப்பா எங்கே?”

“வர நேரம்தான். என்ன விஷயம்?”

“அவர் வந்தப்பறம் சொல்லு. என்ன விஷயம்னு சொல்றேன்.”

“என்னடி புதிர் போடற?”

மஞ்சு சிரித்தாள். ஐந்து மணிக்கு மேல்தான் ஷண்முகம் வீட்டுக்கு வந்தார்.

“எப்பொ வந்த மஞ்சு?”

“உங்ககிட்ட ஒரு விஷயம் பேசணும்ப்பா.”

“நா சொல்லல, அவ மனசு மாறிடும்னு. அம்பத்தூர் வரனைப் பத்தி தானே மஞ்சு?”

மஞ்சு அம்மாவை முறைத்தாள்.

“சும்மாரும்மா. எங்க எம்.டி.யோட பிள்ளை அசோக்னு பேருப்பா. அவருக்கு என்னை ரொம்ப பிடிச்சிருக்கு. என்னை கல்யாணம் பண்ணிக்க விரும்பறார். எனக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமையணும்கறதுதானே உங்க ஆசையும். நீங்க பார்த்த இடத்தை விட இது பல மடங்கு பெரிய இடம். கோடீஸ்வர சம்பந்தம். உங்க பொண்ணு தினம் ஒரு கார்ல போகலாம். அந்த கம்பெனில வேலை செய்தது போய் அந்த கம்பெனிக்கே சொந்தக்காரியாகப் போறா. தங்கத்தட்டுல சாப்டுவா. பன்னீர்ல வாய் கொப்புளிப்பா.

திங்கட்கிழமை அவர் தன் அப்பா அம்மாவோட வந்து என்னை பெண் கேட்பார். உங்களுக்கு பைசா செலவிருக்காது. கல்யாணம் அவங்க செலவுலேயே நடக்கும். ஊரே மூக்குல விரல் வெக்கற அளவுக்கு நடக்கும். நா அந்த வீட்டுக்கு போனதும் மது கல்யாணத்துக்கு கூட பணம் தரேன்னு சொல்லியிருக்காங்க... உங்களுக்கு ஒரு வீடு கட்டித் தரதா சொல்லியிருக்கிறார். மொத்தத்துல இது என்னைத் தேடி வர அதிர்ஷ்டம் நல்ல படியா பேசுங்க போதும்.''

மஞ்சு சொல்லி முடிக்க, வீடே ஸ்தம்பித்தது. அவள் சொல்வதெல்லாம் நிஜம்தானா என்று வியந்தார்கள்.

''நம்ம அந்தஸ்துக்கு மீறி சம்பந்தம் வெச்சுக்கறது என்னிக்குமே நல்லதில்ல மஞ்சு.''

''நா உங்ககிட்ட அட்வைஸ் கேக்கல'' மஞ்சு வெடுக்கென்று சொன்னாள்.

அதன் பிறகு அப்பா எதுவும் பேசவில்லை.

திங்கட்கிழமை மஞ்சு ஆபீஸ் போகவில்லை. வீட்டை சுத்தம் செய்து முன் ஹாலை அலங்கரித்தாள். தன் அறையிலிருந்த சோபாவை கொண்டு வந்து ஹாலில்ல போட்டாள். ஜன்னல் காட்டன்களை மாற்றினாள். சரியாக ஐந்து மணிக்கு வந்து விடுவதாக கூறியிருந்தான் அசோக். நாலு மணிக்கு தன்னை அலங்கரித்துக் கொண்டாள். அசோக் வாங்கிக் கொடுத்த பட்டுப் புடவை உடுத்தி விரித்த கூந்தலை சின்னப் பின்னலாக போட்டு பூ வைத்துக் கொண்டாள். வைர செட்டை எடுத்து அணிந்து கொண்டாள்.

பெண்ணைப் பெற்ற யசோதா வாய் பிளந்தாள்.

''என்னடி இப்படி ஜொலிக்குது காதுலயும் கழுத்துலயும்.''

''வைர செட் அவர் வாங்கித் தந்ததுதான்.''

''அடேயப்பா. பெரிய இடம்தாண்டி பிடிச்சிருக்க.''

''இப்ப நம்பறயா.''

''எப்டியோ நீ நல்லார்ந்தா சரி.''

அப்பாவின் முகத்தில் மட்டும் கவலை மாறவில்லை. ஏதோ சிந்தனையிலேயே இருந்தார்.

ஹால் கடிகாரம் ஐந்து முறை மென்மையாக கூவியது.

மஞ்சு பால்கனி வழியாக வீதியை எட்டிப் பார்த்தாள். ஏதேதோ கார்கள் போயிற்று. அசோக்கின் வண்டியை இன்னும் காணவில்லை.

"அஞ்சு மணிக்குன்னுதானே சொன்னாங்க?"

"வந்துடுவாங்கம்மா அவர் ரொம்ப பிஸியானவர். கிளம்பற வரை அவரை எல்லோரும் தொந்தரவு செய்துக்கிட்டே இருப்பாங்க எதுக்காவது."

மணி ஐந்து முப்பதுக்கு மேல் ஓடி ஆறை எட்டிப் பிடித்த போது "என்னடி" என்று கவலையோடு அம்மா கேட்க மஞ்சுவும் கிளம்பினாள்.

"இன்னும் கொஞ்ச நாழிபார்ப்போம்மதா. எங்கேயாவது டிராபிக்ல மாட்டிக்கிட்டாங்களோ என்னவோ" என்றவள் குரலில் சுரத்தில்லை.

மணி ஏழையும் கடந்தபோது மஞ்சு வேதனை படர்ந்த முகத்தோடு போனை எடுத்து அசோக்கின் வீட்டு எண்களை சுழற்றினாள். ஐந்து நிமிடத்திற்கு பிறகு அவள் முகம் அதிர்ச்சியில் தோய்ந்தது.

## 14

ஐந்து நட்சத்திர ஓட்டலின் அலங்காரமான ஏஸி அறைக்குள் நுழைந்த போது ஏதோ சொர்க்கத்தில் நுழைந்தது போலிருந்தது மஞ்சுவிற்கு. தன் வீட்டை விட பெரியதாகவும், சகல வசதிகளும் கொண்ட அந்த அறையில் தங்குவதே கவுரவமான விஷயமாகத் தோன்றியது. ஒரு கோடீஸ்வர இளைஞனால் காதலிக்கப்பட்டதால் தானே இப்படி ஒரு கவுரவம் கிடைத்திருக்கிறது. மஞ்சுவுக்குள் கர்வமும் மகிழ்ச்சியும் கூடியது. தன் சூட்கேசை ஒரு அலமாரியில் வைத்தவள் சோபாவில் அமர்ந்து கொண்டு அறையை சுற்றிப் பார்வையை ஓட விட்டாள். அசோக் டையை தளர்த்தி அவிழ்த்து

தன் ஷர்ட் பேண்ட்டை மாற்றி சில்க் லுங்கிக்கு மாறினான். அவற்றை அழகாக ஹாங்கரில் மாட்டி வார்ட்ரோபில் ஹேங்கரை தொங்கவிட்டான்.

''ஹாய் டியர் என்ன உட்கார்ந்துட்ட'' என்றபடி அவளருகில் வந்தான். முதன் முறையாக ஒரு ஆடவனோடு தனித்து ஒரு அறையில் இருக்கும் சூழ்நிலையில் மஞ்சு இது சரியா, தவறா என்ற குழப்பத்தோடு, அதே நேரம் அவனுடைய அருகாமையும் தேவைப்பட அருகில் அவன் நெருக்கமாக அமரவும், நகர்வதா அப்படியே இருப்பதா என்று புரியாமல் அவனைப் பார்த்து சிரித்தாள்.

அவன் கரம் அவள் தோளை சுற்றி படர்ந்து அவளை இன்னும் நெருக்கமாக இழுத்தபோது அவள் தேகம் நடுங்கியது.

''ம்ஹீம் வேண்டாம் அசோக். நகருங்க'' என்று அவன் கையை தள்ளிவிட முயற்சித்தாள்.

''ஏய்... என்னாச்சு... பயமாயிருக்கா... பயப்படாதடா'' என்று கிசுகிசுத்தபடி அவள் மடியில் உரிமையோடு தலை வைத்து படுத்தான். மஞ்சு பேசாமல் அமர்ந்திருந்தாள். இது தப்பு என்ற பயம் உறுத்தியது.

''யூ நோ மஞ்சு. முதல் தரம் உன்னை பார்த்ததும் அப்படியே ஷாக் ஆய்ட்டேன் தெரியுமா?''

''ஏன்?''

''என் ஜென்மத்துல இப்படி ஒரு ஸ்டன்னிங் பியூட்டியை நான் பார்த்ததில்லைன்னு தோணிச்சு. முதல் பார்வையிலேயே கிளீன் போல்டாயிட்டேன். நீதான் என்ன லேடின்னு மனசுக்குள்ள ஏதோ சொல்லிட்டேர்ந்துது. உன்னை விட வாழ்க்கைல வேற எதுவுமே பெரிசில்லன்னு நினைக்கற அளவுக்கு பைத்தியமாய்ட்டேன். எப்போதுட் உன் நினைப்புதான். உங்கிட்ட பேசணும். உன்னோடயே இருக்கணும்'' உன்னை பார்த்துக்கிட்டே இருக்கணும். அப்பாவோ லண்டன் போ போங்கறார். எனக்கே இந்த ஆபீஸ்தான் பிடிச்சது உன்னால. அப்பாகிட்ட சொன்னா புருவத்தை சுருக்கறார். மெட்ராஸ் ஆபீஸ்ல என்னடா இருக்குன்றார். சொல்ல முடியுமா என் வாழ்க்கையே இங்கதான் இருக்குன்னு. சரி எப்டியோ போன்னு விட்டுட்டார். முதல்நாள் எனக்கு ஒரே

கவலை. என்னைப் பார்த்ததும் உனக்கும் என் போலவே ஏதாவது செய்யணும். காதல் வரணுமே அப்படின்னெல்லாம் கவலை. உனக்கும் அப்படியிருந்துச்சா மஞ்சு.''

அவன் பேசப் பேச மஞ்சு உருகினாள். எவ்வளவு காதல்!

''ம்... என்னன்னே தெரியல. இதுவரை யார்கிட்டயும் இப்டி மனசு படிஞ்சதில்ல. சண்டிக்குதிரைன்னு கூட என்னை சொல்வாங்க. பட் இந்த குதிரையை முதல் பார்வையிலே அடக்கின ஜாக்கி நீங்கதான்.''

''ஓ... ஐம் லக்கி.''

''ஏன் அசோக்... உங்க வீடு என்னை ஏத்துக்குமா?''

''உனக்கு ஒண்ணு தெரியுமா? எங்கப்பாவே லவ் மேரேஜ்தான். அதுவும் இண்டர்காஸ்ட். எங்க வீட்ல ஒரு குட்டி இந்தியாவே அடக்கம். பல மதம், பல பாஷை. அது சரி. என்னைக் கேக்கறயே உங்க வீடு எப்டி?''

''நா பிடிவாதம் பிடிச்சா ஒகேன்னுடுவாங்க. பிரச்சினையில்ல.''

''சாப்ட ஏதாவது ஆர்டர் பண்ணவா?''

''ரொம்ப பசிக்குது. நா குளிச்சிட்டு வரேன்.''

மஞ்சு எழுந்தாள். தன் சூட்கேஸ திறந்து நைட்டியும் டவலும் எடுத்துக் கொண்டு பாத்ரூம் பக்கம் போனாள்.

''ஒரு நிமிஷம் மஞ்சு'' என்ற அசோக் தன் பெட்டி திறந்து வாசம் மிகுந்த ஒரு வெளிநாட்டு சோப்பும் செண்ட்டும் மேக்கப் பாக்ஸும் எடுத்து நீட்டினான். எல்லாம் ரொம்ப காஸ்ட்லியானது. உன் பொன்னான மேனிக்காக நா வரவழைச்சது என்றான். மஞ்சுவுக்கு பெருமையாக இருந்தது. சோப்பை மட்டும் எடுத்துக் கொண்டு குளிக்கப் போனாள்.

அவள் குளித்த பிறகு அவனும் குளித்தான். சுடச்சுட உணவு வந்தது. அழகான தள்வண்டியில் வைத்து மிக அழகாக அலங்கரிக்கப்பட்ட உணவுகளை மூடி எடுத்து வந்தான். ரூம் சர்வீஸ் ஆள். அவன் நீட்டிய பில்லில் கையெழுத்துப் போட்டு அனுப்பி விட்டு சாப்பிட அமர்ந்தான் அசோக்.

“நல்லா சாப்டு மஞ்சு” என்று அன்போடு தானே அவளுக்கு பரிமாறி வற்புறுத்தி சாப்பிட வைத்தான். “இன்னும் ஏதாவது வேணுமா ஐஸ்கிரீம் சொல்லவா?” என்று கேட்டான். மஞ்சு மறுத்தாள்.

“ஓகே மஞ்சு. நீ கொஞ்சம் ரெஸ்ட் எடு. எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு. நம்ம பாக்டரி வரை போய்ட்டு வரேன்.”

“நா வர வேண்டாமா?”

“பரவால்ல. நா அட்ஜஸ்ட் பண்ணிக்கறேன். யு லுக் டயர்ட். ரெஸ்ட் எடு.” அசோக் புது உடை மாற்றிக் கொண்டு மிடுக்காக நடந்து போனான். “ஜாக்கிரதை என் குரல் கேட்காம கதவைத் திறக்காதே டியர்” என்றான் கதவருகில் நின்று.

“எத்தனை கவலை என்னைப் பற்றி என்று நினைத்து மஞ்சு மகிழ்ந்து போனாள்.”

இரவு ஒன்பது மணிக்குதான் வந்தான் அசோக். வரும் போது உயர்தர இனிப்புகளும், பழங்களும் வாங்கி வந்தான்.

டி.வி.யில் ஏதோ ஆங்கிலப் படம் ஓடிக் கொண்டிருக்க, மஞ்சு நைட்டியிலும் விரிந்து பறந்த கூந்தலிலும் தேவதை போல இருந்தாள். சென்ட் வாசம் மிதமாய் வீசி மயக்கியது.

அசோக் சோர்வோடு படுக்கையில் விழுந்தான்.

“ஏய் மஞ்சு இங்க வாயேன்” என்றான்.

“மஞ்சு திரும்பவேயில்லை.”

“ஏய்....”

அவன் மறுபடியும் அழைத்தான்.

மஞ்சு மறுத்தாள்.

அசோக் எழுந்து அவளருகில் வந்து அமர்ந்தான்.

“ஏன் மஞ்சு பயமா? நம்பிக்கையில்லையா?”

“அப்டியில்ல... ஆனா...”

“உங்கிட்ட ஒரு விஷயம் சொல்லணும் மஞ்சு. உன்னை சும்மா இங்கே கூட்டி வந்தேன்னா நினைச்ச? நம்ம விஷயத்தை அப்பாகிட்ட சொல்லி அவர் சம்மதத்தோட தான் உன்னை இங்க கூட்டிட்டு வந்தேன் தெரியுமா?”

மஞ்சு வியப்போடு பார்த்தாள்.

“யெஸ் கண்ணம்மா... அப்பா ஒத்துக்கிட்டார். உன்னை ரொம்ப நல்ல பெண்ணுன்னார். போய் ஜாலியா இருடா, திரும்பி வந்ததும் முறைப்படி அவங்க வீட்டுக்கு போய் பேசி கிராண்டா கல்யாணத்தை நடத்திடலாம்னு சொன்னார் அப்பாக்கு வேணா லைன் போட்டுத் தரேன் பேசறயா?”

“அய்யோ வேணாம்.”

“நா பொய் சொல்றேன்னுவ. அதான்.”

“நம்பறேம்ப்பா.” மஞ்சு சிரித்தாள். “எப்பொ வருவீங்க?”

“இப்பவே! வா போலாம்” அசோக் கட்டிலைக் காட்ட மஞ்சு சிணுங்கியபடி அவனை குத்தினாள்.

“எங்க வீட்டுக்கு எப்பொ வருவீங்க?” அசோக் காலண்டரில் நாள் பார்த்தான். சண்டே நாம போறோம். திங்கட்கிழமை சாயங்காலம் நானு அப்பா அம்மா மூணு பேர் மட்டும் வருவோம். பஜ்ஜி சொஜ்ஜிதானே செய்து வைப்பீங்க உங்க இதுல?

“ஆமா.”

அசோக் அவளை மெல்ல அணைக்க, அவள் தேகம் அந்த ஸ்பரிசத்தில் சிலிர்த்தது. பயம் ஒரு பக்கமிருந்தாலும் மனம் தன் கட்டுப்பாட்டை இழந்தது. மஞ்சு அவனை பரிபூரணமாக நம்பினாள். எவ்வளவு அன்பு என் மேல் என்று உருகினாள்.

ஆண் தந்திரமானவன். உலகத்தையே காலடியில் நிறுத்துவது போல் பேச வல்லவன். தன் காதலை எவ்வளவு விசாலமாக வேண்டுமானாலும் காட்டத் தயங்காதவன். அந்த வாய் ஜாலமும் உடல் வலிமையும் எப்பேர்ப்பட்ட பெண்களையும் கொஞ்சம் அசைத்து விடும் எனும்போது மஞ்சு எம்மாத்திரம். தன்

பேச்சிலேயே அவளை அடிமையாக்கினான் அசோக். நேரம் செல்ல செல்ல அப்பா அம்மா மது என்று எல்லோரும் அவள் நினைவிலிருந்து காணாமல் போக அசோக் மட்டுமே விசுவரூபமெடுத்து அவளை ஆக்கிரமித்திருந்தான்.

முதல் நாளிருந்த பயமும் கூச்சமும் மறுநாள் சுத்தமாக இல்லை. அன்பும் உரிமையும் அதிகரித்தது. இவன் என்னுடையவன் என்ற உணர்வு கூடியது. அந்த நான்கு நாட்களும் அவன் அவளிடம் அன்பை பொழிந்தான். அவளை பூ மாதிரி நினைத்துக் கரிசனம் காட்டினான். கேட்டு கேட்டு பொருட்கள் வாங்கித் தந்தான். அந்த அன்பில் திக்குமுக்காடிப் போனாள் மஞ்சு. உலகத்திலேயே தான்தான் அதிர்ஷ்டசாலி என்று நினைத்து மகிழ்ந்தாள். பதிலுக்கு தானும் அவன் மீது அன்பு காட்டினாள். அவனுக்காக நாணம் தொலைத்தாள். ஞாயிற்றுக்கிழமை பிரிய போகிறாமே என்ற வருத்தம் அழுத்தியது.

“எனக்கு இங்க இன்னும் கொஞ்ச வேலை பாக்கியிருக்கு மஞ்சு. உன்னை மட்டும் பிளைட் ஏத்தி விடறேன். நாளைக்கு நான் வந்துடுவேன். சரியா அஞ்சு மணிக்கு அப்பா அம்மாவோட உங்க வீட்டுக்கு வருவோம்” என்றான். மஞ்சு மகிழ்ந்தாள். மனமின்றி அவனை பிரிந்து வந்தாள்.

ஐந்து மணிக்கு வர வேண்டியவன் காணாமல் போகவே தான் அவன் வீட்டுக்கு போன் செய்தாள்.

ஒரு பெண்மணியின் குரல் போனில் கேட்டது.

“அ அசோக் இருக்காரா?”

“நீங்க யாரு....”

“நா மஞ்சு. அவரோட பி.ஏ.”

“ஓ மஞ்சுவா... அசோக் இன்னும் மும்பைலேருந்து வரலையேம்மா.”

“இன்னிக்கு வந்திடுவேன்னு சொன்னாரே.”

மஞ்சு குழப்பத்தோடு கேட்டாள். அவன் அம்மாவுக்கு தெரியாதா இன்று இவளை பெண் பார்க்கப் போகிறேலாம் என்று. ஒரு வேளை வந்த பின் சொல்லி அழைத்து வரலாம் என்று நினைத்திருப்பானோ ஏன் வரவில்லை இன்னும்?

“எப்போ வருவார் ஆண்ட்டி?”

“இன்னும் ஒரு வாரம் ஆகுமே மஞ்சு. உங்கிட்ட சொல்லலையா அவன்? அவன் பொண்டாட்டியோட தங்கைக்கு மும்பைல கல்யாணமாச்சே. அதான் பத்து நாள் முந்தியே போயிட்டான்.”

மஞ்சுவுக்கு தலைசுற்றியது. கண் இருட்டியது. கைகள் நடுங்க டெலிபோன் நழுவியது.

## 15

“ஏன்... ஏன் என்னை ஏமாத்தினீங்க!” மஞ்சு வெறி பிடித்தாற்போல் கத்தினாள். அவன் சட்டையை பிடித்து உலுக்கினாள்.

“நீங்க ஏற்கனவே கல்யாணமானவர்னு ஏன் எங்கிட்ட சொல்லலை? நா உங்களுக்கு என்ன கெடுதல் செய்தேன்? ஏன் என்னை சீரழிச்சீங்க?”

அசோக் நிதானமாக அவள் கைகளை தன் மீதிருந்து எடுத்து உதறினான்.

“நா உன்னை ஏமாத்தல மஞ்சு.”

“பொய் சொல்லாதீங்க. நீங்க கல்யாணமானவர்னு உங்கம்மா சொன்னது அப்வெபா பொய்யா?”

“பொய்யில்ல மஞ்சு. நிஜம்தான்.”

மஞ்சு தள்ளாடினாள். “ஏன் அசோக்.... ஏன்? எந்த தைரியத்துல எங்க வீட்டுக்கு வந்து பெண் கேக்கறேன்னு சொன்னீங்க?”

அசோக் மவுனமானான்.

“அது ஒண்ணுதான் நான் சொன்ன பொய் மஞ்சு.... பட் ஸ்டில் ஐ லவ் யூ. உன்னை எனக்கு பிடிச்சது. உன்னை என்னோடவளா ஆக்கிக்கணும்னு நினைச்சேன். ஏற்கனவே

ஒரு மனைவி இருக்கும்போது உன்னை கல்யாணம் பண்ணிக்கறது சிரமம். உண்மையை சொன்னா நீ விலகிப் போய்டுவ. ஸோ நாடகமாடினேன். தாலி கட்டாமலேயே உன்னை அடைஞ்சுட்டேன்.''

மஞ்சு அவனை வெறித்துப்பார்த்தாள்.

''உங் காரியம் முடிஞ்சு போச்சுல்ல? பசி அடங்கிடுச்சுல்ல? வெறி தணிஞ்சிடுச்சில்ல. இப்ப திருப்தியா உங்களுக்கு?''

''மஞ்சு ப்ளீஸ்... உன்னை ஏமாத்தணும்னு இப்பவும் எனக்கு எண்ணமில்ல.''

''ஏன் என்ன எண்ணம்? உங்க மனைவியை விவாகரத்து பண்ணிட்டு என்னை பண்ணிக்கப் போறீங்களா?''

''ரிலாக்ஸ் மஞ்சு. அப்டி என்னால செய்ய முடியாது. என் மனைவி மல்ட்டி மில்லியனர் குடும்பத்து பொண்ணு. எங்களை விடவே பணமும் செல்வாக்கும் பெற்றவ. திமிரும் அகம்பாவமும் அதிகம். என்னை மதிக்க மாட்டா. ஒரு குட்டி யானை மாதிரி உடம்பு. அந்த உடம்பாலயும் எனக்கு சந்தோஷமில்ல. அவ குணத்தாலயும் எனக்கு சந்தோஷமில்ல. பணத்துக்காக எங்கப்பா அவளை எனக்கு கட்டி வெச்சாங்க. அவங்க தயவுலதான் மும்பைல ரெண்டு கம்பெனி நடக்குது. இப்ப நா ஏதாவது செய்தா எல்லாமே ஏடாகூடமாய்டும். நீ கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்ட போதும் மஞ்சு. யாருக்கும் தெரிய வேணாம். நா உன்னை ராணி மாதிரி வெச்சுக்குவேன். கார், பங்களா ... எல்லாம் வாங்கித்தரேன். நீ தங்கத்துலயே மிதக்கலாம். நாம கடைசி வரை சந்தோஷமா இருக்கலாம் என்ன சொல்ற?''

''மொத்தத்துல என்ன சின்ன வீடாக்கி பெரிய பங்களால உட்கார வைக்கறேன்றீங்க.''

''அதுல என்ன தப்பு மஞ்சு?''

''தப்புதாம்ப்பா இதுக்கா... இந்த கேவலமான வாழ்க்கைக்கா நா ஆசைப்பட்டேன்?''

மஞ்சு ஓவென்று அழுதாள்.

''நா உங்களை விடமாட்டேன் அசோக். உங்க வீட்டுக்கு வந்து நியாயம் கேட்பேன்.''

“வா தாரளமா வா. ஆனா எதைக் கேட்டு நீ வரயே அது உனக்கு கிடைக்காது.”

“நீங்க என்னைத் தொட்ட விஷயத்தை சொல்லுவேன்.”

“நா ஒண்ணும் ராமனில்லன்னு எங்க வீட்டுக்குத் தெரியும் மஞ்சு. உனக்கு முன்னாடியே எத்தனையோ பேர் சொல்லப் போனா அதெல்லாம் ஜஸ்ட் லைக் தட் தான். உன் அதிர்ஷ்டம் உன் மேல் எனக்கு நிஜமாவே ஒரு அன்பு இருக்கு. அதனாலதான் உன்னை ஸ்பெஷலா ட்ரீட் பண்ண நினைக்கறேன். இல்லாட்டி அவங்களைப் போலவே உன்னையும் கழட்டி விட எனக்கு ரெண்டு நிமிஷமாகாது.”

மஞ்சு இடிந்து போனாள். கோபுரத்து உச்சியிலிருந்து தலைகுப்புற விழுவது போலிருந்தது. தளர்ந்து போய் அங்கிருந்து கிளம்பினாள்.

16

மஞ்சு அறையை விட்டு வெளியில் வரவில்லை. பிரமை பிடித்தாற்போல் உடலை குறுக்கிக் கொண்டு கட்டிலில் உட்கார்ந்திருந்தாள். தலை கலைந்திருந்தது. கண்கள் சிவந்து முகம் வீங்கிப் போயிருந்தது.

“என்னடி ஆச்சு...” அம்மாவும் மதுவும் மாற்றி மாற்றி கேட்க “நா ஏமாந்துட்டேம்மா” என்று முணுமுணுத்ததை தவிர வேறெதுவும் பேசவில்லை. இரவு தன்னை மறந்து அவள் தூங்கியபோது மது அவள் அறையை குடைந்தபோது டைரி கிடைத்தது. அங்கங்கே அசோக்கைப் பற்றி அவள் எழுதியதை படித்தாள். மும்பைக்கு புறப்பட்டு போவது வரை எழுதியிருந்தது. ஒன்றும் ஒன்றும் இரண்டு என்று கணக்கு போட்டுப் பார்த்த வீடு அதிர்ந்து போனது.

“அடிப்பாவி...” என்று அழுதாள் அம்மா. அப்பா அவமானம் தாங்காமல் துண்டிற்குள் முகம் புதைத்து அழுதார்.

“அன்னைக்கே கண்டிச்சு அடக்கியிருந்தா இப்டி ஆகியிருக்குமா. அந்த கடங்காரன் இவளைத் தொட்டு அனுபவிச்சுட்டு கட்டிக்க முடியாதுன்னு ஏமாத்தியிருப்பான். அதான் இது பிரமை பிடிச்சு உட்கார்ந்திருச்சு. இப்ப என்னங்க செய்ய? நம்ம குடும்ப மானமே போய்டுச்சே.”

“அப்பா... நீங்க போய் அந்தாளை பார்த்து பேசுங்களேன்” மது மெல்ல சொன்னாள்.

அப்பா யோசித்தார்.

“பிரயோஜனமில்லப்பா...” என்ற குரல் கேட்டது. மஞ்சுதான் சொன்னது.

“என்னை கீப்பா வேணா வெச்சுப்பாரு. நா சம்மதிச்சா.”

“அடிப்பாவிப் பெண்ணே.... எங்க பேச்சை எல்லாம் கேட்காம இப்டி பறி கொடுத்துவிட்டு வந்திருக்கயே. எங்களை மனுஷங்களாவா நீ நடத்தின? சம்பாதிக்கற திமிர்ல தலை கீழா இல்ல நடந்த? பெத்த அப்பனுக்கு காசு கொடுக்க யோசிச்சயே. இப்ப எவனுக்கோ உன்னையே கொடுத்துட்டு வந்து நிக்கறயே. கல்யாணம் நாங்க பண்ணி வெக்கறோம்னு அருமையான ஒரு பையனை கூட்டிட்டு வந்தோம். எங்க மேல நம்பிக்கையில்லாம எடுத்தெறிஞ்சு பேசின. இன்னிக்கு எவனையோ நம்பி தாலி கட்டிக்காமயே சீரழிஞ்சுட்டு வந்திருக்கயே. வெக்கமால்ல உனக்கு?”

“யசோ... சும்மாரு.”

“விடுங்க! இப்டி இருந்து இருந்துதான் இந்த பாவி திமிரெடுத்து ஆடினா.”

“சரி இப்பொ நீ என்ன கத்தி என்ன... அவன் என்ன சூரியதேவனா? இல்ல இவதான் குந்தியா பரிசுத்தமாய்டறதுக்கு?”

அப்பா நொந்து போய் ஈஸி சேரில் படுத்தார்.

அதன் பிறகு வீடு வீடாக இல்லை. யாரும் சாப்பிட வில்லை. தூங்கவில்லை. மஞ்சு மவுனத்தில் கரைந்தாள். மெல்ல மெல்ல அவள் சித்தம் கலங்கிக் கொண்டு வந்தது. ஆண்களைப் பார்த்தாலே முகம் சுளித்துக் கொண்டு ஓடி பதுங்கினாள். அப்பாவைப் பார்த்துகூட பதுங்கினாள்.

அப்பா இன்னும் இடிந்து போனார். அசோக் எட்டிக் கூடப் பார்க்கவில்லை. அவள் அலுவலகம் வராததைப் பற்றி கவலைப்படவில்லை.

“ஏம்மா அந்நாளு அப்டி செஞ்சான்” மஞ்சு அம்மா விடமும் மதுவிடமும் இதே கேள்வியை இடைவிடாமல் கேட்டு நச்சரித்தாள்.

அப்பா அவளை மனநல மருத்துவரிடம் அழைத்துச் செல்ல முயன்றபோது அவரோடு செல்ல மறுத்தாள். கடைசியில் அம்மாவும் மதுவும் போக அப்பா பின்னால் வந்தார்.

ஆஸ்பத்திரி வந்ததும் டாக்டரைப் பார்த்ததும் மஞ்சு தலைதெறிக்க ஓடினாள். ‘‘அந்நாள் என்னை ஏமாத்திடுவான். ஏன் இங்க என்னை கூட்டிட்டு வந்தீஙக’’ என்று கத்தியபடி ஓட, அப்பாவும் அம்மாவும் உடைந்து போய் அழ ஆரம்பிக்க மதுதான் சமாளித்தபடி மஞ்சுவை தொடர்த்து ஓடிச் சென்று பிடித்து நிறுத்தினாள்.

‘‘சரி வா மஞ்சு வீட்டுக்கு போய்டலாம்’’ என்று சமாதானப்படுத்தினாள்.

∴ ∴ ∴

ஒரு வருடம் இப்படியே ஓடி விட்டது. மஞ்சு எந்த சிகிச்சைக்கும் ஒத்துழைக்க மறுத்தாள். அவள் சம்பாத்தியமும் இல்லாததால் அந்த வீடு எதற்கு என்று தோன்ற, அப்பா உடனே சிறிய பிளாட் ஒன்று பார்த்தார். முன்பை விட இருமடங்கு உழைத்தார். மதுவின் படிப்பு முடிந்தது.

‘‘நா வேலைக்கு டிரை பண்ணட்டாப்பா.’’

அப்பா அவளை கூர்ந்து பார்த்தார்.

‘‘சத்தியமா அக்கா மாதிரி எந்த தப்பும் பண்ண மாட்டேம்ப்பா. உங்க பாரத்தை நானும் சுமக்க விரும்பறேன்.’’

அப்பா கண்ணீரோடு அவள் தலையை தடவிக் கொடுத்தார்.

‘‘நா உன்னை நம்பறேம்மா’’ என்றார்.

மது வேலை வேட்டையில் இறங்கினாள். நிறைய கஷ்டத்திற்குப் பிறகு ஒரு வழியாய் வேலை கிடைத்து விட்ட சந்தோஷத்தோடு வந்தால் அப்பா சாக்கடையில் விழுந்து உயிருக்கு போராடிக் கொண்டிருக்கிறார். மது தன் மடியிலேயே தலை சாய்த்து தூங்கியிருந்த அம்மாவை மிக மிக மெதுவாக நகர்த்தி பெஞ்சில் படுக்க வைத்து விட்டு எழுந்து சென்று வராண்டாவை கடந்து பால்கனியில் வந்து நின்று சற்று நேரம் வேடிக்கை பார்த்தாள். வண்டிகள் வருவதும் போவதுமாய் இருந்தது. மறுபடியும் வந்து அப்பாவை பார்த்தாள்.

‘‘இன்னமும் நினைவு திரும்பவில்லை. அபாயக்கட்டம் தாண்டவில்லை’’ என்றாள் நர்ஸ்.

தூக்கம் கண்ணை அழுத்த அம்மாவின் காலடியில் அமர்ந்தபடி தலை சாய்த்தாள்.

நள்ளிரவில் அம்மா பெரிதாய் அலறினாள். மது திடுக்கிட்டு எழ அப்பா முகத்தில் துணி போர்த்தப்பட்டிருந்தது.

## 17

அப்பா செத்துப்போன விஷயத்தைகூட மஞ்சுவின் புத்தி கிரகித்துக் கொள்ளவில்லை. “அப்படியா?” என்று சாதாரணமாக கேட்டுவிட்டு திரும்பி படுத்துக் கொண்டாள்.

சாவு செய்தியை பேப்பரில் படித்து விட்டு சக்கரவர்த்தி அம்மாவோடு துக்கம் விசாரிக்க வந்தான். மஞ்சுவின் நிலையை பார்த்து அதிர்ந்து போனான். மஞ்சு அவனைக் கண்டு அலறினாள்.

மது சட்டென்று அவளிருந்த அறையை சாத்திவிட்டு சக்கரவர்த்தியிடம் மன்னிப்பு கேட்டாள். மஞ்சுவுக்கு ஆன நிலையைப் பற்றி சுருக்கமாக கூறினாள். அவர்கள் வேதனையோடு புறப்பட்டு போனார்கள்.

பதிமூன்று நாள் காரியமும் நடந்து முடிந்தது. இனி என்ன என்று யோசித்தாள் மது. கிடைத்த வேலைக்கும் போக முடியாமல் போய் விட்டது. மறுநாளே வருகிறேன் என்று சொல்லிவிட்டு இத்தனை நாள் கழித்து போனால் ஏற்றுக் கொள்வார்களா?

போய்த்தான் பார்ப்பது. திட்டினால் தாங்கிக்கொள்ள வேண்டியதுதான்.

ஒரு வேளை வேறு யாரையாவது நியமித்திருந்தால்... எல்லாம் நம்மைக்கே என்று நினைத்துக் கொண்டு வேறு வேலை தேட வேண்டியதுதான்.

மறுநாள் மது அந்த அலுவலகத்துக்கு புறப்பட்டாள்.

ரிசப்ஷன் பெண் அவளை ஏற இறங்கப் பார்த்துவிட்டு பாலசுப்பிரமணியனுக்கு தகவல் சொல்லிவிட்டு உள்ளே அனுப்பினாள்.

“வாங்க” என்று வரவேற்றவன் குரல் வறண்டிருந்தது.

மது பயத்தோடு அவனை பார்த்து ‘‘சாரி சார் மறுநாளே வந்து வேலைல சேர முடியாம போயிடுச்சு.’’

அவன் வெடுக்கென்று தலை நிமிர்த்தி அவளை கோபத்தோடு பார்த்தான்.

‘‘இது சினிமா தியேட்டரில்லை மிஸ் மது. டிசிப்ளின் உள்ள ஒரு ஆபீஸ். அன்னிக்கு என்னமோ படபடன்னு வந்து இண்டாவியூ வெச்சாதான் ஆச்சுன்னு கத்தினீங்க. உங்களை மதிச்சு நானும் வெச்சு, வேலையும் கொடுத்தா பதினைஞ்சு நாள் கழிச்சு நிதானமா உங்க இஷ்டத்துக்கு வரீங்க. சாரி மிஸ் மது... நாங்க வேற ஒரு பொண்ணுக்கு இண்டர்வியூ கார்டு அனுப்பியாச்சு. நீங்க போகலாம்.’’

‘‘சார்... ப்ளீஸ் சார்... நா...’’

‘‘நோ ப்ளீஸ்... நீங்க போகலாம். எனக்கு நிறையவேலை இருக்கு.’’

மதுவுக்கு அழுகை வந்தது. தொண்டை அடைத்தது. உதட்டைக் கடித்துக் கொண்டாள். பிறகு எழுந்து கொண்டாள்.

‘‘தேங்க்யூ சார்... நீங்க எனக்கு வேலை கொடுக்க வேண்டாம். உங்க இடத்துல இருந்தா எனக்கும் இப்படித்தான் இருக்கும். அட்லீஸ்ட் நா ஏன் வரலைன்னு தெரிஞ்சுக்குங்க. ப்ளீஸ்...’’

அவன் அவளை மவுனமாகப் பார்த்தான்.

‘‘இங்கேர்ந்து நா வீட்டுக்குப் போன அன்னிக்கு அப்பா பாதாளச் சாக்கடைல விழுந்துட்டார். ஆஸ்பத்திரில சேர்க்கும்போதே சீரியஸ். மறு நாள் போயிட்டார். சனிக்கிழமைதான் பதிமூணு நாள்காரியம் முடிஞ்சுது. உங்களுக்குத் தகவல் சொல்லக் கூடதோணல எனக்கு அவ்ளோ இடிஞ்சு போயிருந்தேன்.’’ ப

மது மிக மெல்லிய குரலில் சொல்ல, பாலு அவளையே இரக்கத்தோடு பார்த்தான்.

‘‘நா வரேன் சார்’’ மது புறப்பட ‘‘ஒரு நிமிஷம்’’ என்றான். மது தலை குனிந்து நின்றாள்.

‘‘சாரி மிஸ் மது... உட்காருங்க ப்ளீஸ்... நா அவசரப் பட்டுட்டேன். காரணம் கேட்டுட்டு அப்புறம் பேசியிருக்கலாம்.’’

சட்டென்று குரலில் கனிவைக் கூட்டி அவளை உட்கார வைத்தான். காப்பிக்கு ஆர்டர் செய்துவிட்டு வெள்ளை பேப்பர் எடுத்துக் கொடுத்தான்.

“ஜாய்னிங் ரிப்போர்ட் எழுதி கொடுங்க” என்றான்.

“யாருக்கோ கார்டு...”

“அதை கான்சல் பண்ணி இன்னொரு கார்டு அனுப்பிடறேன்.”

“பாவம்...”

“நீங்க பாவமில்லையா?” பாலு பெல் அழுத்த, பியூன் உள்ளே வந்தான்.

“இவங்களை கம்ப்யூட்டர் ரூமுக்கு அழைச்சுக்கிட்டு போங்க. ஆர்த்தி கிட்ட சொல்லுங்க. இன்னிக்கு ஜாய்ன் பண்றாங்கன்னு போங்க மது. ஆர்த்தி வில் ஹெல்ப் யூ.”

“தேங்க்யூ சார்” என்றபடி எழுந்த மது பியூனின் பின்னால் சென்றாள்.

முத்து முத்தான கையெழுத்தில் அவன் ஜாய்னிங் ரிப்போர்ட்டை பார்த்த பாலு அந்த அழகான கையெழுத்தில் ஒரு வினாடி மயங்கிப் போனான்.

∴ ∴ ∴

ஆர்த்தியின் உதவியால் ஒரு வாரத்தில் வேலை பழகி விட்டது. ஆர்த்தி அவளை விட ஒன்றிரண்டு வயது கூடுதலாக இருப்பாள். அமைதியாக இருந்தாள். மெல்லிய புன்னகை படிந்த உதடுகள். மாநிறம்தான். கண்ணைப் பறிக்கும் அழகு என்று சொல்ல முடியாவிட்டாலும் களையான முகம். கர்வமற்றிருந்தாள். இய்லபாகப் பேசினாள். நாலு நாளில் நல்ல தோழியாகி விட்டாள்.

பத்து நாட்களுக்கு பிறகு மெல்ல ஒருவர் வீட்டைப் பற்றி ஒருவர் அறிந்து கொண்டார்கள். ஆர்த்திக்கு ஒரு அண்ணனும் ஒரு தம்பியும். தம்பி படிக்கிறான். அண்ணன் மரைன் என்ஜினீயர். சிங்கப்பூர் கப்பல் ஒன்றில் வேலை. வருடத்தில் பாதி நாள் உலகம் சுற்றுபவன். மனைவி குழந்தைகளோடு கப்பலில் வாசம். பணத்திற்கு பஞ்சமில்லை, ஆர்த்திக்கு வரன்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆர்த்தி தன் மனதிற்கு பிடித்த ஒருவரோடு காதலில் மூழ்கியிருக்கிறாள். “விரைவில் காதலன்

அவன் வீட்டுக்கு வந்து பெண் கேட்பான். பிறகு திருமணம் நிச்சயமாகி விடும்'' என்றான்.

மது பெருமூச்சு விட்டாள்.

''என்ன மது?''

''ஒண்ணுல்ல... காதல்ல உனக்கு நம்பிக்கையிருக்கா ஆர்த்தி?''

''ஏன் உனக்கில்லையா?''

''ஆண்கள் பிரம்மச்சாரியா, கல்யாணமானவனா, மனைவியை இழந்தவனான்னு தெரிஞ்சுக்க அவங்களுக்கு எந்த அடையாளமும் இல்ல ஆர்த்தி. எல்லா அடையாளமும் பெண்ணுக்குதான். இதனால சுலபமா ஏமாத்திடறான் ஆண்.''

ஆர்த்தி அவளை கூர்ந்து பார்த்தாள்.

''உன் பேச்சுல ஏதோ வேதனை இருக்கே. என்ன மது? உன்னை யாராவது...''

''ப்ஸீ என்னையில்ல ஆர்த்தி.''

''பின்னே...''

''நத்திங் ஜெனரலா சொன்னேன்.''

மது பேச்சை மாற்ற முயல ஆர்த்தி அவளை கூர்ந்து பார்த்தாள். எதையோ அவள் மறைப்பதாக தோன்றியது அவளுக்கு.

அதன் பிறகும் கூட காதல் பற்றி பேசினால் மதுவின் முகம் மாறியது. பேசியவர்களிடம் எரிந்து விழுந்தாள்.

கம்பெனி செலவில் வருடத்திற்கொரு முறைபணியாளர்கள் அனைவருக்கும் உயர்தர தியேட்டர் ஒன்றில் நல்ல படம் ஒன்று சிறப்புக் காட்சியாகத் திரையிட ஏற்பாடு செய்யப்படும். சினிமா, அதைத் தொடர்ந்து லன்ச் எல்லாமே கம்பெனி செலவுதான். என்ன சினிமா என்பதை தீர்மானம் செய்ய மீட்டிங் ஒன்று போட்டான் பால சுப்பிரமணியன். ஆளாளுக்கு ஒரு புதுப்படத்தின் பெயரை சொல்ல, இறுதியாக 'மின்சாரக் கனவு' என்று ஒருமனதாக தீர்மானமாயிற்று. மது எந்த படத்தின்

பெயரையும் முன்மொழியவில்லை. அமைதியாக அமர்ந்திருந்தாள். பாலுவின் பார்வை இரண்டு மூன்று முறை அவள் மீது விழுந்தது. அலுவலகத்தில் சேர்ந்த பிறகு இப்போதுதான் அவளை மறுபடியும் பார்க்கிறான் அவன். அவனுடைய வேலை நிர்வாகம் சம்பந்தப்பட்டது. அவளுடையது டெக்னிக்கல் துறை. எனவே இருவருக்கும் அலுவலகரீதியாக தொடர்பு எதுவும் இல்லை.

கிட்டத்தட்ட இரண்டு மாதத்திற்கு பிறகு இன்றுதான் பார்க்கிறான் அவனை. ''என்ன மது வேலையெல்லாம் பழகிடுச்சா செட்டில் ஆய்ட்டீங்களா?'' என்றான் அவளை பார்த்ததும்.

''பழகிடுச்சு சார் உங்க தயவுல ரெண்டு மாசம் ஓடிடுச்சு. நீங்க மட்டும் அன்னிக்கு ஸ்ட்ரிக்டா இருந்திருந்தா இங்க நான் நுழைஞ்சிருக்கவே முடியாது. உங்களுக்கு நா ரொம்ப கடமைப்பட்டவ.''

பாலு சிரித்தான்.

அதன் பிறகு ஆட்கள் சேர, சினிமா பற்றிய பேச்சு துவங்கியது. மது அமைதியாக அமர்ந்திருந்தாள்.

''ஜாலியா இருக்கணும். இளமை துள்ளணும். லவ் பிலிமாவும் இருக்கணும்'' என்று நிறைய பேர் சொல்ல மின்சார கனவு என்று முடிவானது.

''நல்ல செலக்ஷன்'' என்று மகிழ்ந்தாள் ஆர்த்தி.

''கண்டிப்பா வந்துதான் ஆகணுமா?'' என்று கேட்டாள் மது.

''என்ன மது... ஏன் இப்டி கேக்கற?''

''எனக்கு பிடிக்கலை. நா வரலை.''

''எது படமா? இல்ல எங்களோட வரதா?''

''அய்யோ உங்களோட வரது கசக்குமா... நா படத்தை சொன்னேன்.''

''ஏன் படத்துக்கென்ன... நல்ல படம்தானே. மூணு மணி நேரம் ஜாலியா இருக்கத்தானே போறோம். சூப்பர் காதல் படம் மது.''

“ஐ ஷேட் லவ்... சுத்த அபத்தம்!”

“காதலிக்கறது அபத்தமா?”

“பெத்தவங்களை முழுமையா நம்பறவங்க காதலிக்க மாட்டாங்க ஆர்த்தி.”

“என்ன இப்டி பேசற? காதல் அபத்தமில்ல மது. நீ பேசறதுதான் அபத்தம். அப்போ சீதையும் ராமனும் தங்களோட அப்பா அம்மாவை நம்பலைங்கறயா? ராதாவும் மீராவும் கண்ணனை காதலிச்சது அபத்தம்கறயா? காதல் அபத்தம்னா அகநானூறே அபத்தமா?”

“இது திரேதா யுகமோ, துவாபரயுகமோ இல்ல ஆர்த்தி. கலியுகம், காமயுகம். இங்க காதலைவிட காமம்தான் முக்கியம். காதல்ங்கற அஸ்திரத்தை உபயோகிச்சு பெண்ணை அனுபவிச்சுட்டு தூக்கியெறிஞ்சுட்டுப் போற காமுகர்கள்தான் இப்போ அதிகம். மொத்தத்துல எந்த ஆணும் இங்கே யோக்கியனில்லை.”

மது தன்னை மறந்து சத்தமாகவே பேச பாலு அவளை வெறித்துப் பார்த்தான். ஆர்த்தி அவள் பேச்சில் அதிர்ந்து போனாள். நல்ல காலம் சினிமா தீர்மானமானதுமே அனைவரும் போய்விட்டனர். பாலு கூட தான் மறந்து விட்ட பேனாவை எடுக்கத்தான் திரும்பி வந்திருந்தான். மதுவை உற்றுப் பார்த்துவிட்டு பேனாவை எடுத்து செருகிக் கொண்டு போனான்.

## 18

பாலுவின் அறையில் அவன் எதிரில் நின்றிருந்தாள் ஆர்த்தி.

“என்னாச்சு ஆர்த்தி உன் பிரண்டுக்கு? ரொம்ப உணர்ச்சி வசப்பட்டு கத்தற அளவுக்கு ஆம்பளைங்க மேல அவங்களுக்கு என்ன அப்டி வெறுப்பு?”

“தெரியல சார். ஆனா ஆரம்பத்துலேருந்தே காதல்ங் கற வார்த்தை கேட்டாலே அவ ரியாக்ஷன் அப்டித்தான் இருக்கு.”

“இந்த வயசுல இவ்ளோ உணர்ச்சி வசப்படறதுக்கு பர்சனல் காயம் ஏதேனும் இருக்கணும் ஆர்த்தி.”

“இருக்கலாம். ஆனா சொல்ல மறுக்கறா.”

“தெரிஞ்சுக்க முயற்சி பண்ணுங்க.”

“ஆர்த்தி ப்ளீஸ்...” என்ற பாலுவை ஆர்த்தி வியப்போடு பார்த்தாள்.

“அதைத் தெரிஞ்சுக்கிட்டு நமக்கென்ன சார்? அது அவ அந்தரங்க மில்லையா?”

“அவ நம்ம கொலீக் ஆர்த்தி. அந்த வகைல ஒருத்தர் கஷ்டத்தை ஒருத்தர் தெரிஞ்சுக்கிட்டு உதவ வேண்டாமா?”

“டிரை பண்றேன் சார்” ஆர்த்தி வெளியில் வந்தாள்.

மது தன் கம்ப்யூட்டரில் பிஸியாக இருந்தாள். ஆர்த்தி அவளருகில் வந்து அமர்ந்தாள்.

“பாலு சார் உன்னைப் பத்தி விசாரிச்சார் மது.”

“ஏன்... என்ன கேட்டார்?”

“ஆம்பளைங்க மேல உனக்கென்ன வெறுப்புன்னு கேட்டார்?”

“அவர் ஆம்பளையாச்சே. என் வார்த்தை அவரை கட்டிருக்கும். பட் நா பொதுவில்தான் சொன்னேன். யாரையும் காயப்படுத்துற எண்ணத்துல சொல்லல.”

“இப்டி நீ பேசற அளவுக்கு உன் மனசை காயப்படுத்தினது எதுன்னு கேக்கறார். அவர் மட்டுமல்ல, நானும் தான் கேக்கறேன். ஏன் மது? எங்கிட்ட சொல்லக் மூடாதா?”

“என் சிநேகிதி ஒருத்தி ஒரு ஆணை உயிரா காதலிச்சா ஆர்த்தி. கடைசில அந்த ஆண் அவளை அனுபவிச்சுட்டு கல்யாணம் செய்துக்க மறுத்துட்டான். காரணம் அவன் ஏற்கனவெ கல்யாணமானவன். அதை மறைச்சு ஒரு பெண்ணோட பழகி அவ ஆசையைத் தூண்டி விட்டு அவளை கெடுத்து கடைசில கட்டிக்க முடியாது... வேணும்னா சின்ன வீடா இருந்துட்டு போ... கடைசி வரை நாம இப்படியே

இருப்போம்னு சொல்லிவிட்டான் அந்த அயோக்யன். என் சிநேகிதி நல்ல குடும்பத்தை சேர்ந்த பெண். அவளால இந்த அதிர்ச்சிய தாங்க முடியல. ஷாக்காயிட்டா. அவ மூளை அப்படியே அப்செட் ஆயிடுச்சு. அதையே புலம்பி புலம்பி இப்போ சித்தப்பிரமை பிடிச்ச நிலையில இருக்கா. மாசம் பத்தாயிரம் சம்பாதிச்சுட்டிருந்தவ. கம்ப்யூட்டர் படிச்சவ. இன்னிக்கு கட்டில்ல பரிதாபமா சுருண்டு படுத்துக்கிட்டு விட்டத்தை வெறிச்சு பார்த்துக்கிட்டிருக்கா. என்னென்னவோ ட்ரீட்மெண்ட் கொடுத்துப் பார்த்தாச்சு. முன்னேற்றமே இல்ல. இதுக்குயார் காரணம் ஆர்த்தி? ஒரு ஆண்தானே. இவளை மாதிரி இன்னும் எத்தனை பேர், எங்கெங்கயோ? ஆண்கள் அயோக்கியர்கள்னு நா சொல்றதுல என்ன தப்பு?''

''ஏதோ ஒரு சிலரை வைத்துக் கொண்டு மொத்த ஆண்களையும் அயோக்கியர்கள் என்று சொல்லி விடாதே மது.''

மது பதில் சொல்லவில்லை.

''இப்டி நீ பொதுவுல சொல்றதுனால எவ்ளோ பேர் வேதனைப்படுவாங்க. தெரியுமா! பாலு சார் ரொம்ப கஷ்டப்பட்டுகிட்டார். என்னைப் பத்தியும் அப்டி ஒரு அபிப்ராயம்தான் வெச்சிருக்காங்களா மதுன்னு கேட்டார். தப்பு செய்யறவங்களை நடுவீ தில இழுத்தி நிறுத்தி கல்லால அடி மது. ஆனா ஒட்டு மொத்தமா எல்லார் மேலயும் எச்சில் துப்பாதே. பெண்கள்ள கெட்டவங்க இல்லன்றயா? நல்ல ஆண்களை மயக்கி அவங்க சொத்து முழுக்க ஏமாத்திப் பறிச்சுக்கற பெண்கள் கூட்டடம் இல்லன்றயா? அவங்களை வெச்சு நீயும் அப்படிப்பட்ட பெண்தான்னா நீ ஒத்துப்பயா? வேதனைப்பட மாட்டயா?''

ஆர்த்தி பேசுவதிலும் நியாயமிருப்பதை உணர்ந்த மது தான் அப்படி கத்தியிருக்கக் கூடாது என்று நினைத்தாள். அதற்காக பாலுவிடம் மன்னிப்பு கேட்கத் தீர்மானித்தாள்.

மாலை நான்கு மணிக்கு மேல் சற்று வேலை குறைந்ததும் பாலுவின் அறைக்கு சென்றாள்.

''வாங்க மது... என்ன அதிசயமா?'' பாலு பேனாவை வைத்து விட்டு நிமிர்ந்தான்.

மது சற்று நேரம் மவுனமாய் நின்றாள்.

''உட்காரலாமே!''

“இல்ல உங்ககிட்ட மன்னிப்பு கேட்க வந்தேன்.”

“எதுக்கு?”

“ஆர்த்திகிட்ட சொல்லி வருத்தப்பட்டீங்களாமே அதுக்குதான்.”

பாலு அவளை உற்றுப் பார்த்தான்.

“ஆண்கள் மேல உனக்கு எதனால அவ்ளோ வெறுப்பு மது?”

“ஒரு ஆணினால் என் சிநேகிதி வஞ்சிக்கப்பட்டாள். அதான்... சாரி சார். மொத்த ஆண்களையும் நா அப்டி சொல்லியிருக்கக் கூடாது.”

“பரவால்ல மது. உங்க சிநேகிதி இப்போ என்ன செய்யறாங்க?”

“சித்தப்பிரமை பிடிச்சு படுக்கைல இருக்கா சார்.”

“ஓ... நோ... ட்ரீட்மெண்ட் குடுத்தீங்களா?”

“பயனில்லை சார்.”

“சில நேரம் மருந்து மாத்திரைகளால தீராத மனநோய் அவங்களோட பேசப் பேச சரியாப் போய்டும்னு சொல்வாங்க மது. ஒரு மருத்துவரால் தீர்க்க முடியாத நோயை ஒரு நல்ல நண்பன் தீர்த்து வைப்பான்னு கேள்விப்பட்டிருக்கீங்களா? உங்க சினேகிதின்றீங்க. அப்புறம் என்ன? நீங்களே அவங்களை குணப்படுத்த முயற்சிக்கலாமே.”

மது அவன் பேசப் பேச வியந்தாள்.

“வஞ்சிக்கப்பட்டாள்னா எப்டி மது? பழகிட்டு விட்டுட்டானா... இல்ல படுத்துட்டு உதறிட்டானா?”

மது உதட்டை கடித்துக் கொண்டாள். “தொட்டப்பறம் தான் சார் விட்டுட்டான்.”

“ஒரு படிச்ச பொண்ணு இதால சித்தபிரமை பிடிக்கற அளவுக்கா அப்ஸெட் ஆய்டுவாங்க? அவங்க படிப்பு அவங்களுக்கு மன உறுதியை அளிக்கலன்னுதான் தெரியுது. படிச்ச இவங்களுக்கும் ஒரு கிராமத்து கோழைப் பெண்ணுக்கும் என்ன

வித்தியாசம்? உங்களால முடியாட்டி சொல்லுங்க மது உங்க சிநேகிதியை நா சரி பண்ணிக் காட்டறேன். அவங்க மனசுல ஏதோ குற்ற உணர்ச்சி இருக்கு. தான் பெண், கல்யாணத்துக்கு முந்தி கெட்டுட்டோம். இது தப்புன்ற உணர்வு அவங்களை இப்டியாக்கி இருக்கும். இந்த நிலையில் ஒரு நல்ல பிரண்ட்ஷிப் அவங்களுக்கு தேவை.''

மது யோசித்தாள். கூடவே தயங்கினாள். சிநேகிதி என்று பொய்யல்லவா கூறியிருக்கிறாள்.

''என்ன மது யோசிக்கறீங்க? உங்களோட சிநேகிதின்னு சொன்னதாலதான் நா அக்கறை எடுத்துக்க விரும்பறேன்.''

''ஓ.கே. சார். நா அவளை எப்படியாவது பீச்சுக்கு கூட்டிட்டு வரேன். நீங்க எதேச்சையா என்னை சந்திச்சு பேசறாப்பல பேசுங்க. நா அவளுக்கு உங்களை அறிமுகப் படுத்தறேன்.''

''சரியா ஆறு முப்பதுக்கு காந்தி சிலைகிட்டே இருப்பேன் மது'' பாலு சொல்ல மது தலையாட்டினாள். அக்காவை எப்படி அழைத்து வரப் போகிறோம் என்ற கவலையோடு.

∴ ∴ ∴

வெகு நேரப் பிரயத்தனத்திற்குப் பின் ஒரு வழியாக மஞ்சுவை கிளப்பிக் கொண்டு ஒரு ஆட்டோ பிடித்து கடற்கரை சாலைக்கு வந்தாள். லைட் ஷவுசில் இறங்கிக் கொண்டு நடை பாதையில் அக்காவோடு மெல்ல நடந்தாள். மஞ்சு தூரத்து கடல் அலையை வெறித்தபடி நடந்தாள்.

''ஷலோ மது'' சரியாக காந்தி சிலையருகில் எதிரில் வந்தான் பாலு. மஞ்சு அவனை பயத்தோடு பார்த்து முகம் சுளித்தாள்.

''ஷலோ சார் எங்க இப்டி'' என்று கேட்ட மதுவை சுட்டெரித்து விடுவது போல் பார்த்து விட்டு முகத்தை திருப்பிக் கொண்டாள்.

''சும்மா வாக் வந்தேன்.''

‘‘மஞ்சு இவர் எங்க ஆபீஸ் பர்சனல் மானேஜர் பாலசுப்பிரமணியன்.’’

மஞ்சு அவளை சட்டென்று பிடித்திழுத்துக் கொண்டு நடந்தாள்.

‘‘ஆபீஸ் அதிகாரிகளை நம்பாதே மது. கெடுத்துவிட்டு ஓடிடுவாங்க. திருட்டுப் பசங்க.’’

‘‘இவர் நல்லவர் மஞ்சு. கண்ணியமானவர்.’’

‘‘ஆரம்பத்துல அப்படித்தான் பழகுவாங்க. எல்லாம் வேஷம்! உள்ள ரொம்ப புரூரமா இருப்பாங்க வா போலாம். இனிமே இந்தாள்ட்ட அதிகம் பேசாதே.’’

ஒரு நிமிஷம் பாலு குறுக்கிட்டான்.

‘‘நீங்க யார் மேலயோ ரொம்ப கோவமா இருக்கீங்கன்னு தோணுது.’’

‘‘ஆமா இருக்கேன். அதைக் கேக்க நீ யாரு? போய்யா வேலையைப் பார்த்துக்கிட்டு.’’

மஞ்சு சத்தமாக கத்த சுற்றிலும் சென்றவர்கள் திரும்பி பார்க்க, மது கவலையோடு அவனைப் பார்த்தாள். கண்களால் அவனிடம் மன்னிப்பு கேட்டாள்.

மஞ்சு வேகமாக நடந்தாள்.

‘‘மது அவளை விட்டுட்டு நீ கொஞ்ச நேரம் காணாம போய்டு நா பார்த்துக்கறேன்’’ பாலு சொல்ல மது வேறு பக்கமாய் நடந்தாள். சற்று தூரம் சென்ற மஞ்சு, மதுவைக் காணாமல் திரும்பினாள். அவள் முகம் பயத்தில் வெளுத்தது. கடற்கலையிலிருந்த அத்தனை ஆண்களும் அவள் மீது பாயப் போவதாக கற்பனை செய்து கொண்டு கத்தியபடியே மயங்கி விழப் போனாள். பாலு சட்டென்று ஓழப் போய் அவளைத் தாங்கிக் கொண்டான். மது அருகில் வர முயல, பாலு அவளை வர வேண்டாம் என்றான்.

‘‘ப்ளீஸ் மஞ்சு ரிலாக்ஸ். உங்களுக்கு ஒண்ணுமில்ல. பயந்துட்டீங்க. மது இப்போ வந்துடுவாங்க. இப்டி உட்காருங்க’’ என்றபடி அவளை புல்வெளியில் அமர வைத்தான். மஞ்சு அவனை வெறித்துப் பார்த்தாள்.

# 19

“உங்களுக்குத் தெரியாது மஞ்சு. பொதுவா நா பெண்களோட பேசவே தயங்குவேன். மது ரொம்ப டீஸன்ட்டான பொண்ணு. அதனால அவகிட்ட மட்டும் ரெண்டொரு வார்த்தை பேசுவேன். மத்தபடி பெண்கள்னாலே எனக்கு அலர்ஜி.”

ஏன்? என்பது போல மஞ்சு அவனை பார்த்தாள்.

“என் பிரண்டு ஒருத்தன் ஒரு பெண்ணை உயிருக்குயிரா காதலிச்சான். அவளுக்காக உயிரையும் விடத் தயாரா இருந்தான். ஆனா அந்த பொண்ணு பொழுது போக்குக்காக காதலிச்சிருப்பான்னு நினைக்கறேன். ஒரு பெரிய பணக்காரனை மாப்பிள்ளையா பார்த்ததும் இவனை விட்டுட்டு அவனைக் கட்டிக்கிட்டா. அதுலேர்ந்தே எனக்கு பெண்கள்னா பயம்.”

“நோ... ஆண்தான் நம்பிக்கை துரோகம் செய்யறவன்.”

“பெண் ஏமாந்தா ஆண் ஏமாற்றுக்காரன். ஆண் ஏமாந்தா பெண் துரோகி. மொத்தத்துல காதல்ல யார் வேணா ஏமாறலாம். ஆணும் சரி, பெண்ணும் சரி. அதை வெச்சு மொத்த பெண்களுமே மோசம்னு சொல்லிட முடியாதுன்னு மதுவைப் பார்த்ததுக்கு பிறகுதான் தெரிஞ்சுது. இப்போ உங்களைப் பார்த்த பிறகு என் அபிப்ராயம் முழுக்கவே மாறிடுச்சு. உங்களை மாதிரி ஒரு பெண்ணை காதலிச்சிருந்தா என் பிரண்டு ஏமாந்திருக்க மாட்டான்னு தோணுது.”

மஞ்சு அவனை திகைப்போடு பார்த்தாள். அவள் கண்கள் கலங்கியது.

“ஏன் உங்க கண்ணு கலங்குது? நா சொன்னது சரிதானே? முதல் பார்வையிலேயே நல்லவன்னு நம்பி மனசை பறி கொடுக்கறதெல்லாம் ராமனுக்கும் சீதைக்கும் தான் சரிப்படும். இது கலியுகம்ங்க. இங்க நிஜ முகங்களை விட முகமூடியணிஞ்ச முகங்கள் தான் அதிகம். அந்த உள்முகத்தை பார்க்க தெரிஞ்சவங்க ஏமாற மாட்டாங்க. என் பிரண்டுக்கு அது சாத்தியப்படல. ஏமாந்துட்டான்.”

“நிஜம்தான்...” மஞ்சு முணுமுணுத்தாள். “உங்க பேர்?”

“பாலு.”

“உங்களுக்கு ஒரு முகமா, ரெண்டு முகமா?”

பாலு சிரித்தான். “அதை நீங்க இல்ல சொல்லணும்? என்னோட பழகினாதானே அதை கண்டுபிடிக்க முடியும்? நீங்க மதுவோட சிநேகிங்கறதால இனிமே எனக்கும் சிநேகிதிதான். வில் யூ அக்செப்ட் மை பிரண்ட் ஷிப்?”

அவன் கேட்க அவள் அதிர்ந்தாள். அதிர்ச்சி அவன் கேட்டதால் அல்ல. மதுவின் சிநேகிதி என்று அவன் சொன்னதால். சட்டென்று சிரித்தாள்.

“நா மதுவோட அக்கா மிஸ்டர் பாலு” என்றாள். பாலு இப்போது திகைத்து நின்றான்.

## 20

மது வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தாள். இவ்வளவு நேரம் மஞ்சு ஒருவரிடம் முகம் கொடுத்து பேசியதுதான் வியப்புக்கு காரணம். அதுவும் ஒரு ஆணிடம். அப்படி என்ன பேசுகிறார் இந்த பாலு? மது தான் அங்கே போகலாமா, கூடாதா என்று தயங்கும்போதே பாலு அவளை அழைத்தான்.

“வாங்க மது. உங்க சிஸ்டர் உங்களை விட படு பிரில்லியண்ட் தெரியுமா?”

மது அவனை திகைப்போடு பார்த்தாள்.

“நா நினைச்சேன் இவங்க உங்க பிரண்டுன்னு. அப்புறம் தான் சொல்றாங்க உங்க சிஸ்டர்னு.”

மது தலைகுனிந்தாள்.

அதற்கு பிறகு சுமார் ஒரு மணி நேரம் பல பொது விஷயங்கள் பற்றி மஞ்சுவிடம் பேசினான். அவள் கருத்துக்களை கேட்டான். அவள் சொன்னதும் மனம் விட்டு பாராட்டினான். அவன் பாராட்டியபோது அவள் முகம் மலர்ந்தது. “ஓகே கிளம்பலாமா, டைமாயிடுச்சு” என்று அவன் எழுந்தபோது அவள் முகம் வாடியது.

“இவரை நம்ம வீட்டு கூட்டிட்டு வாயேன் மது” என்று அவள் சொன்னபோது வியப்பின் உச்சிக்கே சென்றாள் மது. பாலுவை நன்றியோடு பார்த்தாள்.

பாலு விடைபெற்றுச் சென்றான்.

அதன் பிறகு ஒரு வாரம் கழித்து மதுவோடு அவர்கள் வீட்டிற்கு சென்றான் பாலு. பேச்சு மெல்ல மெல்ல மாறி காதலுக்கு திரும்பியபோது மஞ்சுவின் முகம் சுருங்கியது.

“உங்களுக்கு காதல் அனுபவம் உண்டா மஞ்சு?”

பாலு ஒன்றுமே தெரியாதது போல் கேட்க, மஞ்சுவின் கண்கள் குபுக்கென்று பொங்கியது. பாலு பதறுவதுபோல் நடித்தான்.

“என்னாச்சு மஞ்சு?”

“சொல்லுங்க மஞ்சு. உங்க மனசுல என்ன கவலை?”

அவன் கேட்டதும் மஞ்சு வேகமாய் எழுந்து உள்ளே ஓடினாள்.

பாலு அறைவாசலில் வந்து நின்றான்.

“புரியுது மஞ்சு, யார் கிட்டயோ நீங்க ஏமாந்திருக்கீங்க. அதனால என்ன... விட்டுத் தள்ளிட்டு புதுசா ஒரு வாழ்க்கையை அமைச்சுக்கிட்டு சந்தோஷமா இருக்க வேண்டியது தானே?”

மஞ்சு அவனை சுட்டெரித்து விடுவதுபோல் பார்த்தாள். பிறகு பாய்ந்து வந்து அவன் சட்டையை பிடித்து உலுக்கினாள்.

“எப்டிடா எப்டி? எவ்ளோ சுலபமா சொல்ற? இனிமே என்னை எவடா கட்டுவா? அந்த பொறுக்கி ராஸ்கல் நாசம் பண்ணின இந்த உடம்பை இனிமே எவன் தொடுவான்? நீ தொடுவயா? சொல்லு... நீ என்னைக் கட்டிப்பயா?”

“மஞ்சு... என்ன இது...” மது பதற, அம்மா கையை பிசைந்தாள்.

பாலு நிதானமாக அவள் கையை எடுத்துவிட்டான். அவளை அமைதியாகப் பார்த்தான்.

“ஓகே மஞ்சு. கட்டிக்க நான் தயார். ஆனால் ஒரு நிபந்தனை. பழசை எல்லாம் நீ மறக்கணும் சரியா?”

மஞ்சு மட்டுமல்ல, மதுவும் பலமாக அதிர்ந்தாள். அம்மா நம்ப முடியாமல் அவனைப் பார்த்தாள்.

“நா உங்களை எவ்ளோ தூரம் நம்பறது பாலு?” மது மறுநாள் அவனை ஆபீஸில் சந்தித்து கேட்டதும் பாலு சிரித்தான்.

“ஸ்டண்ட் அடிக்கறேன்னு தோணுதா?”

“அப்டியில்ல... ஆனா... எப்டி பாலு சார்? எனக்கு ஒண்ணும் புரியல.”

“மஞ்சு என்ன சொன்னாங்க?”

“அவ எதுவுமே பேசல. பிரமை பிடிச்சாப்போல இருக்கா.”

“உண்மையாத்தான் சொல்றேன் மது. மஞ்சுவைக் கட்டிக்க எனக்கு முழு சம்மதம்.”

“ஏன் பாலு சார்... உங்களுக்கு வேற பெண்ணா கிடைக்கமாட்டாங்க? அதுவுமில்லாம” மது தயங்கி நிறுத்தினாள்.

“சொல்லு மது. எதுவா இருந்தாலும் ஒளிவு மறை வில்லாம பேசிக்கறது நல்லதுதானே!”

இன்னிக்கு ஏதோ ஒரு ஆவேசத்துல சொல்வீங்க. நாளைக்கு அவளை குத்திக் காட்டினீங்கன்னா அதுக்கப் புறம் அவளை காப்பாற்ற யாராலயும் முடியாது.

“சத்தியமா குத்திக் காட்ட மாட்டேன் மது.”

“இது தியாகமா இல்ல ஏதாவது காரணம் இருக்கா பாலு சார் சார்?”

பாலு ஒரு வினாடி அமைதியானான். பிறகு “காரணம் இருக்கு மது” என்றான்.

மது அவனையே பார்த்தாள்.

“எனக்கு ஒரு அழகான அக்கா இருக்கா மது. என்னை விட ரெண்டு வயசுதான் பெரியவ படிச்சவ. புத்திசாலி அப்பா அவளுக்கு சகல சுதந்திரமும் கொடுத்திருந்தார்.

பெண்ணுன்னு மட்டம் தட்டி வளர்க்கல. அப்படிப்பட்ட அக்கா ஒருத்தனை காதலிச்சா. அப்பாகிட்ட தன் காதலைப் பத்தி சொன்னா. அப்பா எதிர்க்கல. உடனே அவங்களைப் பார்த்து பேசி கல்யாணத்தை நிச்சயம் பண்ண சம்மதிச்சார். கல்யாணத்துக்கு நாளும் குறிச்சாச்சு. நிச்சயதார்த்தம் தட புடலா நடந்துது. அந்த தைரியத்துல அக்கா அவனோட அடிக்கடி வெளிய சுத்தினா. பிக்னிக் போனா...''

''அப்டி போன ஒரு சமயத்துல அவளை ரொம்ப வற்புறுத்தி தைரியம் கொடுத்து அவளை அனுபவிச்சிருக்கான் அவ காதலன். கல்யாணத்துக்கு இன்னும் பத்து நாள்தானே இருக்குன்ற தைரியத்துல அக்காவும் சம்மதிச்சிருக்கா. ஆனா அதுக்கப்புறம் அவன் போக்குல திடீர்னு ஒரு மாற்றம். அக்காவை சந்தேகப்பட ஆரம்பிச்சான். இதுக்கு முன்னால எத்தனை பேர்னு குத்திக்காட்டி பேசினான். அக்கா அதிர்ந்து போயிட்டா. சரி அப்டி பேசினாலும் போகட்டும். கல்யாணத்துக்கு பிறகு அவனை சரிகட்டிக்கலாம்னு அக்கா நினைச்சா. ஆனா அந்த ராஸ்கல் கல்யாணத்தன்னிக்கு வரவேல்ல. ஊரே கூடியிருக்க மாப்பிள்ளையை காணோம். உன்னைக் கட்டிக்க எனக்கு இஷ்டமில்லன்னு ஒரு துண்டுச்சீட்டு மட்டும் வந்தது. அன்னிக்கு அக்காவுக்கு ஏற்பட்ட அவமானம். எங்க குடும்பத்துக்கு ஏற்பட்ட அவமானம்... அதை விவரிக்கவே முடியாது மது. அக்கா கோழையில்ல. ஆனா இந்த அதிர்ச்சியை அவளால தாங்கிக்க முடியல. மஞ்சுவை மாதிரிதான் ஒரு அறைக்குள்ளேயே முடங்கிப் போயிட்டா. அவ மனசை மாத்த நாங்க பட்டபாடு கொஞ்ச நஞ்சமில்ல. ஆனா அவ மாறவேயில்ல. அறையை விட்டு வெளிய வரவே விரும்பல. அவ பேச்சு, சிரிப்பு, சாப்பாடு, தூக்கம், ஆரோக்கியம் எல்லாமே கொஞ்சம் கொஞ்சமா போச்சு. நாலு வருஷத்துல எலும்புக் கூடாயிட்டா. அந்த கண்றாவியைப் பார்க்க முடியாம அப்பா மாரடைப்பு வந்து காலமாயிட்டார். அவருக்கு பின்னால அம்மா. இப்போ அக்கா சாகக் கிடக்கா. இப்பவோ அப்பவோன்னு அவ உயிர் ஊசலாடிக் கிட்டிருக்கு. வீட்ல வெச்சு பார்த்துக்க முடியாம ஒரு நர்ஸிங் ஹோம்ல சேர்த்திருக்கேன். எனக்கு கல்யாணம்னு ஒண்ணு நடந்தா ஆசீர்வாதம் பண்ண வேண்டியவ அவ ஒருத்திதான். அவளும் போயிட்டா நா அனாதை. எங்கக்காவை மாதிரி மஞ்சுவும் ஆகக் கூடாது மது. ஏமாந்து போன எல்லா பெண்களையும் என்னால கட்டிக்க முடியாது. ஒருத்தரை கட்டிக்கலாம் இல்லையா? அந்த ஒருத்திதான் மஞ்சு.''

மது மிகவும் நெகிழ்ச்சியோடு அவன் கரங்களைப் பற்றிக் கொண்டாள். “நீங்க ரொம்ப உயர்ந்தவர் பாலு சார்.”

“இன்னிக்கு சாயங்காலம் உங்க வீட்டுக்கு வந்து மஞ்சுவை பெண் கேட்பேன் மது.”

“அப்போ நா அரை நாள் லீவு போட்டுட்டு போலாமா?”

“தாராளமா.”

மது மிகவும் சந்தோஷமாக ஒரு மணிக்கு புறப்பட்டாள் வீடு போய் சேரும் வரைதான் சந்தோஷம் எல்லாம்.

## 21

ஒரு டஸன் ஆப்பிள், ஆரஞ்சு, மல்லிகைப் பூ, கல்கண்டு இத்யாதிகளோடு மதுவின் வீட்டுக்கு பாலு போனபோது வீடு மிக மிக அமைதியாக இருந்தது. அம்மா ஒரு மூலையில் அழுது கொண்டிருக்க மஞ்சு தன் படுக்கையில் சுருண்டிருந்தாள். மது மட்டும் சோகமாக அவனை வரவேற்றாள்.

“என்னாச்சு மது.”

“கல்யாணத்துக்கு அக்கா சம்மதிக்க மறுத்துட்டா பாலு சார்... ஒரே ரகளை.”

“நீ நகரு... நா பேசறேன்.”

“யாரும் என்னோட பேச வேண்டாம். அவரை போக சொல்லு மது” மஞ்சு அவன் குரல் கேட்டு கத்தினாள்.

பாலு உள்ளே போனான். அவள் அறையில் நுழைந்து கதவை சார்த்தினான். மஞ்சு பயத்தில் விறைத்துப் போனாள்.

“இப்ப உனக்கென்னாய்டுச்சு மஞ்சு? நீ நல்லாதானே இருக்க? எதுக்கு கல்யாணம் வேண்டான்னு சொல்ற?”

மஞ்சு அவனை வெறித்தாள்.

“எனக்கு இஷ்டமில்ல?”

“அதான் ஏன்?”

“கல்யாணத்துக்கு இனி நா லாயக்கில்லா தவ. ஒரு பொறுக்கி கிட்ட ஏமாந்து போனவ,”

“அந்த குற்ற உணர்ச்சியை உடைப்புல போடு மஞ்சு. கற்புன்னு எதுவுமே இல்ல. அப்டி இருந்துதுன்னா அது ஆணுக்கும்தானே உண்டு. உன்னை கெடுத்தவன் பரிசுத்த மானவனாய்டுவானா?”

“ஆனா உலகம் எங்களைத்தானே கேவலமா பார்க்குது?”

“அதுக்கு காரணம் நீங்கதான் மஞ்சு. உன்னை அனுபவிச்சவன் உன்னால என்ன செய்ய முடிஞ்சுது? தப்பு செய்தவன் அவன். ஆனா தண்டனை உனக்கா? நல்லா யோசிக்க பார் மஞ்சு. இதுவும் ஒரு விபத்துதான். சில விபத்து எதிர்பாராம ஏற்படும். சிலது நாமா ரிஸ்க் எடுத்து வரவழைச்சுக்கறது. எந்த பெண்ணும் விரும்பி கெட்டுப் போறதில்லை. ஒரு நம்பிக்கையில தான் தன்னை கொடுக்கறா. ஏமாற்றம்ங்கறது எத்தனையோ விதத்துல வருது.”

“பணம், பொருள், நகை, வீடு வாசல், நிலம்னு எத்தனையோ ஏமாந்து போறோம். அத மாதிரி இதுவும் ஒரு ஏமாற்றம். இதுக்காக முடங்கிப் போய் உட்கார்ந்துடலாமா? பணம் போயிட்டா மறுபடி சம்பாதிக்கற தில்லையா? நகை போயிட்டா மறுபடி வாங்கறதில்லையா? கற்பு கற்புன்னு உங்களுக்கு நீங்களே தண்டனை கொடுத்துக்கற தாலதான் உங்க கற்போட விளையாடறதே ஆண்களுக்கு வாடிக்கையா போச்சு. உனக்கு ரெண்டு சாய்ஸ் தரேன் மஞ்சு. உனக்கு சாமர்த்தியமும் துணிச்சலும் இருந்தா உன்னை கெடுத்தவன் மனசை மாத்தி கல்யாணம் பண்ணிக்க. இல்லாட்டி மறுபடியும் வேலைக்குப் போ. உன் கால்ல நில்லு. பிரைட்டா இருக்கப் பார். அது போதும்.”

மஞ்சு திகைத்தாள்.

‘‘அதெப்டி... அவன் கல்யாணமானவன்.’’

‘‘அப்போ மறந்துடு... எல்லாத்தையும் மறந்துடு. உன் உடம்புல ஒரு நிமிஷத்துக்கு எத்தனை செல் அழியுதுன்னு தெரியுமா உனக்கு? ஒரு வருஷத்துக்கு முந்தி இருந்த தோல் முழுக்க இப்போ அழிஞ்சிருக்கும். அழியறது கண்ணுக்கு தெரியாது. இப்போ இருக்கற தோல் புது தோல் புரியுதா மஞ்சு. அவன் தொட்ட தோல் அழிஞ்சு புதுசு வந்திருக்கும். நமக்கு தெரியாம நாம அழியறோம். நாம புதுசா உருவாவறோம் மஞ்சு.’’

‘‘வெறும் நினைவுகளை வெச்சுக்கிட்ட எதுக்குவேதனைப் படணும்? தேவையில்லாத திசுக்களும் செல்களும் அழிக்கப் படணும். இல்லாட்டி உடம்பு நாறிடும். வளர்ச்சியும் இருக்காது. அதே மாதிரிதான். புத்தியிலிருக்கற வேண்டாத நினைவுகளை நம்மை உறுத்தி வேதனை படுத்தற குப்பைகளை எடுத்து வெளிய வீசப் பழகிக்கணும். இப்டி முடங்கிப் போக நீ பிறக்கலை. உன் மூளை அற்புதமானது. எவ்வளவு படிப்பு படிச்சு தனக்குள்ள அது அறிவா சேமிச்சு வெச்சிருக்கு. அதெல்லாம் அப்டியே அழிஞ்சு போகற துக்கா நீ படிச்ச? கெட்டது உடம்புதான்னா ஏன் மூளைக்கும் சேர்த்து தண்டனை கொடுக்கற? உடம்புக்கு வேணாதண்டனை கொடு.’’

‘‘மூளையை ஏன் உறைய விட்டு சித்ரவதைப் படுத்தற? அதனோட ஆக்கபூர்வமான செயல்களை ஏன் தடுக்கற? அது செய்யக் கூடிய செயல்களை செய்ய விடறதுதானே நியாயம். உன் மூளையைக் கொண்டு கிரியேடிவா நீ எவ்வளவு செய்யலாம்? எவ்வளவு பேருக்கு பயன்படறாப் போல ஏதாவது செய்யலாம்? இப்டி விட்டத்தை வெறிச்சு பார்த்துக்கிட்டிருக்கவா உனக்கு இறைவன் மூளையை கொடுத்தான்? இப்டி முடங்கி கிடக்கறது படைப்புக்கு நீ செய்யற துரோகம் மஞ்சு. எவ்ளோ நம்பிக்கையோட உன்னை இறைவன் படைச்சிருப்பான்! அவனுக்கு நம்பிக்கை துரோகம் செய்யலாமா? அப்புறம் உன்னை கெடுத்தவனுக்கும் உனக்கும் என்ன வித்யாசம். அவன் ஒரு விதமா உன்னை ஏமாத்தினான்... நீ இன்னொரு விதமா தெய்வத்தை ஏமாத்தற.’’

மஞ்சு திகைத்தாள். அவன் சொன்னதெல்லாம் அவளை வேரோடு புரட்டுவது போலிருந்தது.

“கல்யாணம்தான் வாழ்க்கைன்னு நா சொல்ல வரல மஞ்சு. பழையபடி நீங்க இயல்பா இருக்கேன்னு சொல்லுங்க. உங்களை நான் கல்யாணத்துக்கு வற்புறுத்த மாட்டேன். என்னை கல்யாணம் பண்ணிக்கறதும் மறுக்கறதும் உங்க இஷ்டம். அதுல தலையிட யாருக்கும் உரிமையில்ல. பட் உங்க புத்தியை நல்ல காரியங்களுக்கு உபயோகப்படுத்துங்க. ஆக்டிவா இருங்க. மற்றவங்களுக்கு கவலையும் பாரமுமா இருக்காதீங்க. உங்களுக்கு எவனோ கொடுத்த கஷ்டத்தை நினைச்சுக்கிட்டே உங்க குடும்பத்துக்கு நீங்க கஷ்டம் கொடுக்காதீங்க. நா கிளம்பறேன். நீங்க எப்போ சரின்னாலும் எங்க ஆபீஸ்ல உங்களுக்கு ஒரு நல்ல வேலை காத்திருக்கும். அதோட நீங்க விருப்பப் பட்டா கல்யாண மாலையும் காத்திருக்கும். காதல்ங்கறது பூ மாதிரி மஞ்சு. ஒரு செடில ஒன்றுக்கு மேல பூ மலரக் கூடாதா என்ன? ஒரு பூ இருக்கும் போது வேணாம். அட்லீஸ்ட் ஒரு பூ வாடிப் போச்சுன்னா இன்னோன்னு பூக்கலாம் இல்லையா? இது இயற்கைதானே. கற்பு கற்புன்னு கத்திக்கிட்டு இயற்கையை ஏன் அடக்க முயற்சிக்கறீங்க? இயல்பா இருக்க முயற்சிசெய்ங்களேன்.”

பாலு அதற்கு மேல் அங்கிருக்கவில்லை. வேகமாக வெளியேறினான்.

“அந்த பிள்ளை சொன்னதையெல்லாம் கேட்ட இல்ல? இனிமேலாவது நீ மாறுவயாடி” அம்மா கேட்க, மஞ்சு முதன் முறையாக தாயின் மடியில் விழுந்து அழுதாள்.

“இவரைவிட ஒரு நல்ல புருஷன் உனக்கு கிடைக்க மாட்டார் மஞ்சு. சொந்த வாழ்க்கையின் அனுபவம் அவரை இவ்ளோ தூரம் பண்படுத்தியிருக்கு. தயவு செய்து யோசிச்சு நல்ல முடிவுக்கு வா.”

மது தன் பங்குக்கு தானும் புத்தி சொன்னாள்.

அழைப்பு மணி சத்தமிட எழுந்து சென்று கதசைத் திறந்தாள்.

“ஹலோ ஆர்த்தி. என்ன ஆச்சரியம். உள்ளே வா” மது முகம் மலர்ந்து வரவேற்றாள்.

“ஒரு சந்தோஷ விஷயம் மது. எனக்கு கல்யாணம். அடுத்த ஞாயிறு. என் காதலில் ஜெயிக்கப் போறேன். உனக்கு இன்விடேஷன் கொடுத்துட்டுப் போக வந்தேன். ரொம்ப எளிமையான கல்யாணம். ஒன்லி சம் பிரண்ட்ஸ். தட்ஸ் ஆல்.”

மது அவளை அக்காவுக்கும் அம்மாவுக்கும் அறிமுகப்படுத்தினாள்.

ஆர்த்தி போனதும் மஞ்சு ஏதோ யோசனையில் ஆழ்ந்தாள்.

“இவளும்தான் காதலித்தாள். நாமும்தான் காதலித்தோம். ஆனால் அந்த பெண் தன் காதலில் வெற்றி பெற்றதை போல என்னால் ஏன் பெற முடியவில்லை? என் காதல் தவறா? ஒரு நல்ல ஆணை நான் காதலிக்க வில்லையா? அல்லது அவன் மீது அதீதமான நம்பிக்கை வைத்து அவனிடம் என்னை இழந்ததனால் தோற்று விட்டேனா? ஆண்கள் அப்படித்தான் இருப்பார்கள். பெண்ணல்லவா உணர்ச்சிகளை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். இருவரும் தவறு செய்தாலும் இழப்பு பெண்ணுக்கு தானே? ஆதிகாலம் முதலே இதுதானே பெண்ணின் நிலை.”

“என்ன மஞ்சு யோசனை?” மது கேட்க மஞ்சு கலைந்தாள்.

“பாலு சார்க்கு என்ன பதில் சொல்லப் போற நீ?”

“அவரை பெண் பார்க்க பெரியவங்களோட வரச் சொல்லு மது.”

மஞ்சு சொல்ல, அம்மா, மதுவின் முகம் குப்பென்று மலர்ந்தது. மது, அக்காவை கட்டிக் கொண்டாள்.

கல்யாணத்திற்கு அக்கா சம்மதித்து விட்ட விஷயத்தை மறுநாளே பாலுவிடம் சந்தோஷமாக சொன்னாள்.

“என்னிக்கு வீட்டுக்கு வரீங்க பாலு சார்?”

பாலு நாட்காட்டியை பார்த்தான்.

“அம்மா அப்பா போயிட்டாலும் எனக்கு உறவுன்னு சொல்லிக்க விழுப்புரத்துல எங்க மாமா மாமி இருக்காங்க மது. நா இப்பவே மாமாக்கு போன் போட்டு பேசி விஷயத்தை சொல்லிடறேன். மாமாவோட சவுகர்யம் கேட்டுக்கிட்டு என்னிக்குன்னு உனக்கு சொல்றேன்.”

மது மகிழ்ச்சியோடு வெளியில் வந்தாள். உண்மையில் அக்கா அதிர்ஷ்டசாலிதான் இவ்வளவு பெரிய தவறு செய்திருந்தும் கூட இறைவன் அவளை தண்டிக்கவில்லை. மாறாக மிக மிக நல்லதொரு துணையை அவளுக்கு பரிசாக கொடுக்கப் போகிறான்!

மாலைக்குள் பாலு தன் மாமாவிடம் பேசி விட்டு மது விடம் தகவல் சொல்லிவிட்டான்.

“புதன்கிழமை நானும் மாமா மாமியும் வரோம் மது, அன்னிக்கே நிச்சயத்தார்த்தம் வெச்சுக்கலாம்.”

“சந்தோஷம் சார்.”

“கல்யாணமாகி வந்த பிறகு என் முதல் வேலை என்ன தெரியுமா?”

“என்ன?”

“உனக்கொரு கல்யாணம் பண்ணி உன்னை விரட்டறது தான்.”

மது முகம் சிவந்தாள்.

“உனக்கு காதல் கீதல் எதுவும் இல்லையே மது...”

அவன் அப்படிக் கேட்டதும் மதுவின் முகம் ஒரு வினாடி மாறியது. என்னவென்று சொல்வாள்? அக்காவின் நடத்தையால் காதல் என்றாலே முகம் சுளித்து ஓடியவளுக்குள் அவளையும் மீறி ஒரு ஆணின் நற்குணமும் பரந்த மனப்பான்மையும், கண்ணியமும், மெல்லிய நூலிழை அளவுக்கு அவன் மீது காதலை ஏற்படுத்தியிருக்கும் விந்தையை எப்படி சொல்வாள். அந்த ஆண் நீதான் என்று இனி சொல்ல முழயுமா? இந்த சின்ன குமிழும் அக்காவின் கல்யாணத்தில் உடைந்து காணாமல் போய்விடும்.

“என்ன மது யோசனை? நீ யோசிப்பதை பார்த்தால் என்னவோ உனக்குள்ள பெரிய கதையே இருக்காப்பல இருக்கு.”

“அ...அதெல்லாம் ஒண்ணும் இல்ல சார். அக்காக்கு இவளோ தூரமும் ஆனப்பறமும் அந்த விஷப்பரீட்சைக்கு என்னால தயாராக முடியுமா என்ன?”

“உனக்கு எப்டிப்பட்ட மாப்பிள்ளை வேணும் மது?”

“உங்களைப் போல சார்” மது நிதானமாக சொல்ல பாலு திகைத்துப் போனான். மது சிரித்தபடி வெளியேறினாள்.

# 22

எத்தனையோ நாட்களுக்கு பிறகு அன்றுதான் வீடு முழுக்க மகிழ்ச்சியில் மூழ்கியிருந்தது. அம்மாவின் முகத்தில் இனம் புரியாத நிம்மதி. மது ஆபீசுக்கு இரண்டு நாள் லீவு போட்டாள். புதன்கிழமை காலை ரொம்ப நாளைக்கு பிறகு அரட்டையடித்தபடி சாப்பிட்டாள். மஞ்சு நிறைய ஜோடிக்கடிக்க, மதுவுக்கு புரைக்கேறியது. அம்மா அவள் தலையில் தட்டினாள்.

சாப்பாடு ஆனதும் மூவரும் கடைக்குப் போனார்கள்.

மஞ்சுவுக்கு மிக அழகான பட்டுப்புடவை வாங்கினார்கள். மஞ்சுவே தேர்ந்தெடுத்தாள். பாலுவிற்கும் உயர்தர வேட்டியும் ஷர்ட்டும் வாங்கினார்கள். மது தானும் ஒரு புடவை வாங்கிக் கொண்டாள். அம்மா வெள்ளி விளக்கும், சந்தனக் கிண்ணமும் குங்குமச் சிமிழும் வாங்கினாள்.

கடைத்தெருவில் பழ வகையறாக்களும் நிறைய பூவும் வாங்கினார்கள். ஆட்டோ ஒன்று பிடித்து வீடு வந்தார்கள். வந்ததுமே அம்மா மாலை பலகாரங்கள் தயாரிக்க முனைந்து விட்டாள். மஞ்சுவும் மதுவும் சிரிப்பும் அரட்டையுமா அம்மாவுக்கு உதவினார்கள்.

‘‘யப்பா... நம்ம வீட்ல இப்டி ஒரு பேச்சும் சிரிப்பும் சந்தோஷமும் திரும்பி வருமான்னு ஆயிடுச்சு மஞ்சு. அம்மாவின் கண்கள் பளபளக்க மது அம்மாவை கட்டிக் கொண்டாள்.’’

‘‘இனி எப்பவும் சந்தோஷம்தாம்மா’’ என்றாள்.

மைசூர்பாகும், திரட்டுப்பாலும் ரெடியாயிற்று. கடையிலிருந்து தரமான மிக்ஸர் வாங்கி வைத்திருக்கிறது. வந்தவுடன் சுடச்சுட ரவா கிச்சடி செய்ய அனைத்தும் ரெடியாக வைத்திருந்தது. பீல்டரில் டிகாஷன் இறங்கிக் கொண்டிருந்தது.

‘‘டைமாய்டப் போவுது மது. ரெண்டு பேரும் முகம், கை, கால், கழுவிக்கிட்டு புதுப்புடவையை உடுத்திக்கங்க’’ அம்மா சொல்ல மது மணியைப் பார்த்தாள்.

“இன்னிக்கு நான்தான் உனக்கு டிரஸ் பண்ணி விடப் போறேன் மஞ்சு.”

“அப்டின்னா உனக்கு நான் பண்ணுவேன்.”

“அப்புறம் நாம ரெண்டு பேரும் சேர்ந்து அம்மாவுக்கு பண்ணுவோம் சரியா?”

“ஆமா... எனக்கென்னடி?” அம்மா சிரித்தாள்.

மது புதுப்புடவையை எடுத்து மஞ்சுவிடம் நீட்ட, மஞ்சுளா மறுத்தாள்.

“நா இப்போ கட்ட மாட்டேன்.”

“பின்ன எதுக்கு வாங்கியிருக்கு?”

“நிச்சயதார்த்தம் முடிஞ்சதும் கட்டிப்போம். இப்போ வேணாம்.”

“அவங்க வேற புடவை வாங்கிட்டு வருவாங்க மஞ்சுக்கா.”

“போ மது, எனக்கு சிம்பிளா ஒரு புடவை கட்டிக்கத் தான் தோணுது. எனக்கு உன் புடவை ரொம்ப பிடிச்சிருக்கு. அதை எனக்கு கொடு. நீ வேணா பட்டு கட்டிக்க.”

“அது சரி எனக்கா கல்யாணம்?”

“ஏன் இதைக் கட்டிக்கற வேளை கல்யாணம் வரக் கூடாதா?”

“பாலு சார் என்ன சொன்னார் தெரியுமா? உங்க கல்யாணத்துக்கு பிறகு முதல்ல ஒரு ஆளைப் பார்த்து கட்டி வெச்சு என்னையும் விரட்டப் போறாறாம்.”

“இப்டி ஒரு மாப்பிள்ளை கிடைக்க இந்த வீடு பாக்கியம் செய்திருக்கணும்” அம்மா நெகிழ்ந்தாள்.

கடைசியில் புதுப்பட்டை யாரும் கட்டவில்லை. தீபாவளிக்கு வாங்கிய பட்டுப்புடவையை மஞ்சு கட்டிக் கொள்ள, மது புதுப்புடவையை கட்டிக் கொண்டாள். ஈரத்துணியில் சுற்றிவைத் திருந்த ஜாதிமல்லி நன்கு மலர்ந்திருந்தது. வாசனை வீடு முழுக்க பரவியது. மது சாமிக்கு கொஞ்சம் போட்டு விட்டு அக்காவின் தலை நிறைய பூ வைக்க, மஞ்சு தங்கையின் தலையில் மீதிப் பூவை வைத்தாள். தன் பீரோ திறந்து மதுவுக்கு தன் நகைகளை எடுத்து போட்டாள்.

“ப்ஸீ... எனக்கா இப்போ நிச்சயதார்த்தம்? நீ போட்டுக்க.”

“ஏண்டி அக்கா கல்யாணத்துக்கு நீ நகை போடக் கூடாதுன்னு யார் சொன்னாங்க” மஞ்சு சொல்ல அம்மாவும் ஆமோதித்தாள், இருவரில் யார் பெண் என்பது தெரியாத வாறு இருவரும் ஒருவரை ஒருவர் அலங்கரித்துக் கொண்டதை பார்க்க அம்மாவுக்கு சந்தோஷமாயிருந்தது.

அம்மாவையும் நல்ல புடவை கட்ட வைத்தார்கள்.

மஞ்சு டேப் ரெக்காலர்டரில் நாதஸ்வர இசையை ஒலிக்க விட்டாள்.

சரியாக ஐந்து மணிக்கு வந்தார்கள். பாலுவும், அவன் மாமா மாமியும்.

வீடு பரபரப்பாயிற்று. மது அவர்களை வரவேற்று அமரச் செய்தாள். அம்மா போர்த்தின தலைப்போடு அடுக்களை வாசலில் நின்றாள்.

“நீங்களும் உக்காருங்கம்மா. இது அந்தக் காலமில்ல. அனாவசிய மரியாதை வேண்டாம்” பாலுவின் மாமா சொல்ல அம்மா கூச்சத்தோடு மறுத்து விட்டாள்.

“பாலு எல்லாம் சொன்னாள். எனக்கு ரெண்டு பொண்ணுதான். பாலுதான் எங்களுக்கு பிள்ளை மாதிரி. அவன் விருப்பம்தான் எங்க விருப்பமும். பெண்ணை வரச் சொல்லுங்க. நல்ல நேரம் போறதுக்குள்ள தட்டை கையில் கொடுத்துடறோம்.”

மது ஓடிப் போய் அக்காவை அழைத்து வந்தாள். மஞ்சு கைகூப்பி வணங்கினாள்.

“உக்காரும்மா. உன்னைப் பத்தி எல்லா விவரமும் பாலு சொன்னான்.”

மஞ்சு நிமிர்ந்து பார்த்தாள். “எல்லாம்னா? என்ன சொன்னான்.”

“எல்லாம்னா எல்லாம்தாம்மா. எங்கிட்ட எதையும் மறைக்கல. தப்பு செய்யறது. மனித சுபாவம் தாயி! இதே எம் பொண்ணு செஞ்சிருந்தா? அவளை அப்படியேவா விட்ருவேன். நடந்ததை மறந்துடுன்னு புத்தி சொல்லி வேற ஒரு நல்ல ஆளைப் பார்த்து எல்லா உண்மையையும் சொல்லி கட்டி வைக்கத்தான் பார்ப்பேன்.”

“இதெல்லாம் இப்போ எதுக்கு சார்?”

“அப்டியில்லம்மா. கல்யாணம்னு நடந்தப்புறம் நீ யாரைப் பார்த்தும் அனாவசியமா பயப்படத் தேவையில்ல. குத்த உணர்ச்சியோடயும் நீ இருக்க வேண்டாம்னு சொல்ல வந்தேன்... ஏற்கனவே எங்க வீட்ல ஒரு பொண்ணு பட்ட அவஸ்தை எல்லாம் போதும். பாலு இப்டின்னு விஷயம் சொன்னப்போ உண்மையிலேயே நாங்க ரொம்ப சந்தோஷப் பட்டோம் மஞ்சு. நீயும் பழசையெல்லாம் மறந்துட்டு வாழணும். புது வெள்ளம் பழசை அடிச்சுக்கிட்டு போய்டணும்.”

“இ... இதெல்லாம் இப்போ எதுக்கு சொல்றீங்க?”

“ஏம்மா... நாங்க – சொன்னதுல ஒண்ணும் தப்பில்லையே?”

“தப்பில்லைங்க. ஆனா அதுக்கு அவசியமும் இல்லேன்னு சொல்ல வரேன்.”

மஞ்சு சொன்னது அவர்களுக்கு புரியவில்லை.

“பாலு சாரை கட்டிக்கப் போறது நானார்ந்தா நீங்க சொல்றதெல்லாம் சரிதான். ஆனா அவரை கட்டிக்கப் போறது நா இல்ல மதுதான்.”

வீடு ஸ்தம்பித்தது. மது சிலையாய் நின்று விட்டாள்.

## 23

“அக்கா என்ன இது... உனக்கென்ன பைத்திய...”

“இல்ல மது, பைத்தியம் பிடிச்சிருந்தது இப்போதான் சரியாச்சு. பாலு சார்தான் சரி செய்தார். அதிர்ச்சில ஸ்தம்பிச்சு போயிருந்த என்னை இயல்புக்கு கொண்டு வந்துட்டார். இனிமே என் ஓட்டம் நிக்காது. இனிமே எனக்கு எதுவும் ஆகாது. மறுபடியும் பழையபடி உத்தியோகம் பார்க்கற மனத்திடம் எனக்கு வந்துடுச்சு. பாலு சார் கிட்ட இப்போ நான் கேக்க விரும்பறது அவர் வாழ்க்கைல ஒரு இடம் இல்ல. அவர் ஆபீஸ்ல ஒரு இடம்.”

“நீ என்ன சொல்ற மஞ்சு” பாலு அவளை உற்றுப் பார்த்தபடி கேட்டான்.

“நீங்க ரொம்ப உயர்ந்தவர் பாலு சார்... ஆனா நா... நா எந்த விதத்திலும் உங்களுக்கு பொருந்தி வர மாட்டேன். எனக்கேற்பட்டது விபத்தில்ல. நானே தெடிக்கிட்ட சீரழிவு. நா ஜாக்கிரதையார்ந்திருந்தா எவனும் என்னை ஏமாத்தியிருக்க முடியாது. டிபத்த தகப்பனை மதிக்கல. தாயை மதிக்கல. நாலு காசு பார்க்க ஆரம்பிச்சதும் அப்பா பட்ட கஷ்டமெல்லாம் எனக்கு மறந்து போச்சு. அவரை அலட்சியப்படுத்தி வேதனைப்பட வெச்சேன். நான் என் சுகம்னு சுயநலமியா ஆனவ நான். கற்பனை சுகத்துலயே மிதந்தவ. கனவு நாயகனை கைபிடிக்கறதே என் லட்சியம்னு தப்பு கணக்குப் போட்டுட்டேன்.”

“அப்பா பார்த்த நல்ல வரனை தூக்கியெறிஞ்சேன். தலைக்கனம் பிடிச்சு அலைஞ்சேன். தப்பான ஆளை காதலிச்சேன். என் கட்டுப்பாட்டை இழந்து எல்லை மீறினேன். இப்போ ஏமாந்து நிக்கறேன். இதுல எல்லாமே என் தப்புதான். இந்த தப்புக்கு தண்டனை வேணும்னு நா நினைக்கறேன். என்னைக் கல்யாணம் செய்துக்கறேன்னு சொன்னது உங்க நல்ல மனசைக் காட்டுது. இப்படி ஒருத்தரைக் கட்டிக்கப் போறவ சந்தேகமில்லாம கொடுத்து வெச்சவதான். ஆனா அதுக்கான தகுதி எனக்கு துளியும் இல்ல.”

“அதே நேரம் இந்த வீட்டுக்கு உங்களை விட நல்ல மாப்பிள்ளை கிடைக்கவும் முடியாது. அந்த வகையல உங்களை இழக்கவும் நா விரும்பல. நீங்க மதுவைக் கட்டிக்கிட்டா நா இன்னும் அதிக சந்தோஷப்படுவேன். எனக்கு கடசி வரை ஒரு மாரல் சப்போர்ட்டா நீங்க இருக்கணும்னு நா விரும்பறேன். நா இழந்த தன்னம்பிக்கையை எனக்கு மீட்டுக் கொடுத்தவர் நீங்கதான். எனக்கு புது வாழ்வும், உயிரும் கொடுத்திருக்கீங்க. அந்த வகையல நீங்க சாதாரண மனிதரில்ல பாலு. எனக்கு தெய்வம் மாதிரி தெய்வத்தை கட்டிக்க முடியாது. பூஜிக்கத் தான் முடியும். கட்டிக்கற தகுதியும் பரிசுத்தனமும் எனக்கு இல்லவும் இல்ல. எப்டி பார்த்தாலும் மதுதான் உங்களுக்கு பொருத்தமானவ.”

“தயவு செய்து தட்டை அவகிட்ட கொடுங்க. எனக்கு அவளோட வேலை மட்டும் கொடுங்க. அப்பாவைத் தான் கோட்டை விட்டுட்டேன். அட்லீஸ்ட் அம்மாவையாவது கடைசி வரை சந்தோஷமா வெச்சுக்க வேண்டியது என்னோட கடமை. இனிமே உயர உயரத்தான் பறப்பேன். நிச்சயம் தாழ்ந்து போக மாட்டேன்.”

“கல்யாணம்தான் வாழ்க்கைன்னு நா நினைச்சு காலம் போயிடுச்சு. என் இழப்பை நா வேற விதத்துல ஈ செய்யணும்னா சமூகத்துல என் திறமையை வெச்சு நா உயர்ந்த இடத்துக்கு வரணும். அதுதான் உண்மையான வெற்றியாக எனக்கு அமையும். அந்த வெற்றி எனக்கு கிடைக்க, நீங்க ஒரு நல்ல நண்பரா இருந்து எனக்கு ஊக்கமும் தைரியமும் கொடுக்கணும்னு விரும்பறேன்.”

மஞ்சு சொல்லி முடிக்க வீடு பிரமித்தது. பாலு அவள் உணர்வுகளை மதிக்க விரும்பினான். மாமாவிடம் கண்களால் பேசினான். மஞ்சு மதுவை இழுத்து வந்து பாலுவின் அருகில் நிறுத்தினாள். மாமா பட்டுப்புடவையும் பழங்களும் வைத்த நிச்சயத்தாம்பூலத் தட்டை மதுவிடம் நீட்ட மது கை நடுங்க பெற்றுக் கொண்டாள். மஞ்சு சந்தோஷத்தோடு பாலுவின் கரம் பற்றி குலுக்கினாள்.

“நன்றி பாலு சார்” என்றவள் விழிகளில் மகிழ்ச்சியும் சேர்ந்து ஜொலித்தது.

***